# வேதம் வேங்கடராய சாஸ்திரிகள்

(இளைய) வேதம் வேங்கடராய சாஸ்திரி



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

வேதம் வேங்கடராய சாஸ்திரிகள்

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# வேதம் வேங்கடராய சாஸ்திரிகள்

ஆங்கில மூலம்

(இளைய) வேதம் வேங்கடராய சாஸ்திரி

தமிழாக்கம்

சு. செல்லப்பன்

சாகித்திய அக்காதெமி

புது தில்லி.

VEDAM VENKATARAYA SASTRIGAL - Tamil Translation by C. Chellappan of Vedam Venkataraya Sastry's (Junior) English monograph, Sahitya Akademi, New Delhi, 1983. Price Rs. 4-00.

© Vedam Venkataraya Sastry (Junior)
First Edition - 1983.

*Copies available at*
SAHITYA AKADEMI
Rabindra Bhavan, New Delhi - 110 001

*Regional Offices:*
29, Eldams Road, Madras - 600 018.
Rabindra Stadium, Block V-B, Calcutta - 700 029.
172, Mumbai Marathi Grantha Sangrahalaya Marg,
Dadar, Bombay - 400 014.

PUBLISHED BY SAHITYA AKADEMI, NEW DELHI AND
PRINTED AT STREE SEVA MANDIR PRESS, MADRAS - 600 017.

# முன்னுரை

என் பாட்டனார் வேதம் வேங்கடராய சாஸ்திரி 1929ல் மறைந்தார். எனக்கு அப்பொழுது வயது பதினாறு. ஆதலின் அவருடைய இலக்கிய ஆளுமையைப் பற்றி நான் அறிந்தது முழுமையானதாகவோ, குறைபாடில்லாததாகவோ இருக்க முடியாது. நான் அவரைப்பற்றி அறியாதவை பல. அவரது சமகாலத்தவருள், அவருடைய மாணவர்களோ அல்லது விரும்பி களோ, எவரும் அவரைப் பற்றிய முழுமையான வரலாற்றினை எழுதவில்லை. மாணவன் என்ற நிலையில்லாது அவருடைய பெயரன் என்ற முறையிலேதான் நான் அவரை மிகுதியும் அறிவேன். ஆயினும் அவருடன் நெருங்கி வாழ்ந்து வந்ததால், தற்செயலாக அவரிடமிருந்து ஏராளமாக அறிந்துள்ளேன். அவருடைய மறைவிற்குப் பிறகு, அவருடைய மாணாக்கர்களிட மிருந்து முறையாக மேலும் பலவற்றை அறிந்தேன். இவ்வாறாக அறிந்தது கொண்டும், அவருடைய எழுத்துகளிலிருந்து எடுத்த பல செய்திகளை ஒன்றிணைத்தும் அவருடைய முறையான வரலாற்றினைத் தயாரித்துள்ளேன். அதற்கு மறைந்த டாக்டர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் 1943ல் ஒப்புதல் அளித்தார்; டாக்டர் சி. ஆர். ரெட்டி அவர்களுடைய முன்னுரையுடன் தெலுங்கில் வெளியிட்டேன்.

இவ்வாறாக என் பாட்டனாரைப் பற்றி எழுதும் நற்பேறு எனக்கு வாய்த்தது. அவர் வரலாறு விரிவானது; பல்வேறு நிகழ்ச்சிகள் கொண்டது. என் பாட்டனார் தாமே ஒரு நிறுவன மாக வாழ்ந்தவர். மிகச் சிறந்த இலக்கியப் பெருமகனாகத் திகழ்ந்த அவருடைய புகழின் ஒரு துணுக்காகவே நான் எழுதும் வரலாறு இருக்கமுடியும். அவரது இலக்கியப் படைப்பு களும் அவைபற்றிய கற்பனைத் திறமும் பெருமளவு ஆராய்ச்சிக் குரியனவாம். செய்திகட்குச் சரியானதும் உண்மையானதுமான உருக் கொடுப்பதிலும், அவற்றைப் பொருத்தமாக எடுத்து விளக்குவதிலும் எனக்கு இடர்பாடுகள் ஏற்பட்டன. மாறு பாட்டுக் கிடமளிக்கும் கருத்துக்கள் பல, கருத்துடன் தவிர்க் கப்பட்டு, செய்திகள் சுருக்கித் தரப்பட வேண்டியவையாயின. ஆகவேதான் இந்நூல் இலக்கிய ஆராய்ச்சி மதிப்பீட்டுக் கோணத்தில் அமையாது, வாழ்க்கை வரலாற்றுப் போக்கில் அமைந்துள்ளது. படிப்போர் இதனை இன்னும் விரிவுபடுத்தவும், பல்வேறு கோணங்களில் ஆயவும் இடமிருப்பதை உணர்வர்

என்பதை நான் நன்கறிவேன். இந்த மன்னிப்புக் கோரும் உரையுடன், பாட்டனுர் பற்றிய என்னுடைய குறிப்புகள் ஒரு தொடக்கமாக அமைந்து, அவருடைய படைப்புகளைப் பற்றிய மிக விரிவான ஆராய்ச்சிக்கு இடமளிக்கும் என்ற பற்று மீதூர்ந்த நம்பிக்கையோடு, இச்சிறு நூலை மக்கள்முன் படைக்கின்றேன்.

விரிந்த அளவில், பலரும் படிக்கும் வகையில், இந்நூலை ஆங்கிலத்தில் எழுத எனக்கு வாய்ப்பளித்த தில்லி சாகித்ய அகடமியினருக்கு நன்றிக் கடப்பாடுடையேன். கையெழுத்துப் படியைப் படித்து, அரிய கருத்துரைகளை வழங்கிய என் பாட்டனுரின் மாணுக்கர்களும், விரும்பிகளுமாகிய நெல்லூரைச் சார்ந்த மறைந்த திரு. என். ராமதாஸ் ஐயங்கார், வழக்கறிஞர் திரு. ஜி. வி. சுப்பிரமணியம் ஆகியோருக்கும் என் நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

(இளைய) வேதம் வேங்கடராய சாஸ்திரி.

# பொருளடக்கம்


பக்கம்

முன்னுரை ... 5

அறிமுகம் ... 9

1. வரலாற்றுப் பின்னணி ... 11

2. பெற்றோரும் பிறந்த குடியும் ... 16

3. இளமைப் பருவமும் கல்வியும் ... 20

4. சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தலைமைச் சமஸ்கிருத பேராசிரியராக ... 25

5. தொடக்க கால இலக்கிய பணிகள் ... 29

6. அவருடைய அச்சக மறுதோற்றம் ... 46

7. இலக்கியங்களில் பேச்சுமொழி ... 53

8. நாடகப் பணிகளும் ஆந்திர பாக்ஷாபிமானி சமாஜமும் .. 64

9. இணையற்ற விளக்க உரைகள் ... 72

10. பெருமைகளும் இன்னல்களும் ... 83

முடிவுரை ... 90

# அறிமுகம்

ஆந்திர அறிஞரும் நாட்டுப் பற்றுளருமான திரு. ஹரி சர்வோத்தம ராவ் அவர்கள் 1938 டிசம்பர் 11ஆம் நாள், ஞாயிற்றுக்கிழமை இந்து இதழில், "வேதம் வேங்கடராய சாஸ்திரி என்ற பெயர் தெலுங்கு இலக்கியத்துடன் இரண்டறக் கலந்த பெயராகும்" என்று எழுதினர். இதுவே, பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதிக் காற்பகுதியிலும், இருபதாம் நூற்றுண்டின் முதற் காற்பகுதியிலுமாக அரை நூற்றுண்டுக் காலம் தெலுங்கு இலக்கிய உலகில் ஆதிக்கம் செலுத்திய இலக்கியப் பெருமகனைப் பற்றிய மிகச் சுருக்கமானதும், பொருத்தமானதுமான விவரிப்பு எனலாம். 19ஆம் நூற்றுண்டு பொதுவாக இந்திய வரலாற்றிலும், குறிப்பாக இலக்கியத் துறையிலும், திருப்பு முனையாகவும் படைப்புக் காலமாகவும் விளங்கியது. மேற்கத்திய நாடுகளின் தொடர்பால் நமது இந்திய மொழிகள் எல்லாமுமே புதிய மாற்றம் பெற்றன. அக்காலத்தில் பழைய சமஸ்கிருத மரபுவழிப் பண்டிதர்களாகவும் அதேபோது புதிய பண்பாட்டு நோக்குடையவர்களாகவும் விளங்கிய பெரும்புலவர்களைப் பெற்றிருந்தது தெலுங்குமொழி பெற்ற பேருகும். அத்தகைய மறுமலர்ச்சிக் காலத்தைச் சேர்ந்த இப் பண்டிதர்கள், இலக்கியத்தில் ஒரு புதிய போக்கினை உருவாக்கத் தகுதி பெற்றவர்களாயிருந்தனர். அவர்களுள் ஒருவரான என் பாட்டனர் வேதம் வேங்கடராய சாஸ்திரியாரின் பங்கு குறிப்பிடத் தகுந்ததாகும். தம் ஆழ்ந்த கல்வியாலும், விரிந்த பல்வேறுபட்ட எழுத்துக்களாலும், நகைச் சுவைப் பேச்சாலும், பயன் விளைவிக்கும் சிறந்த பொது அறிவினுலும் அவர் சமகாலத்தவரிடையே தனி முத்திரையைப் பொறித்தார்.

வைதீக பண்டிதரின் மகனுகிய அவர், சூழ்நிலை காரணமாக, முதலில் ஆங்கிலத்தையும் பிறகு தெலுங்கையும் கற்ருர்; இஃது ஒரு புதுமையாகும். பட்டதாரியான அவர், தெலுங்கு இலக்கிய உலகில் உரைநடை, கவிதை, நாடகம், திறனய்வு, அகராதித் தொகுப்பு ஆகிய துறைகளில் புதிய ஒழுங்கமைப்புகளைச் செய்தார். திறமை மிக்க திறனுய்வாளராகவும், சிறந்த ஆசிரியராகவும் விளங்கிய அவர், பல உயர்தர சமஸ்கிருத தெலுங்கு இலக்கியங்களை விரிவான தெலுங்கு உரைகளுடன் பதிப்பித்தார். அதனுல் மாணவர்கள் ஆசிரியரின்றியே அவற்

றைக் கற்றுக்கொள்ள முடிந்தது. தம் உரையாற்றலால் மிகப் பெரிய அவையையும் ஆடாமல் அசையாமல் கேட்கச் செய்யும் மிகச் சிறந்த பேச்சாளர் அவர். அவருடைய பேச்சு மகிழ்வூட்டக் கூடியதாயும் அதேவேளை பெருமை வாய்ந்த நம் பண்பாட்டைப் புகட்டுவதாயும் அமைந்திருக்கும். படைப் பாளர் என்ற முறையில் அவர் தெலுங்கில் சுயமாக நாடகங்களை எழுதியுள்ளதோடு, சமஸ்கிருதத்திலிருந்து சில நாடகங்களை மொழிபெயர்த்தும் உள்ளார். அவற்றைக் கல்லூரிகளிலும், வெளியேயும் நடிக்கச் செய்து தெலுங்கு நாடக மேடைக்குத் தூண்டுதலாயும் இருந்தார். செயற்பாடுடைய அவர் சொந்த மான ஓர் அச்சகத்தை நிறுவி, தான் எழுதியவற்றைப் பல் வேறு வடிவங்களில், பொருத்தமான எழுத்துக்களைக் கொண்டு, வரிக்கு வரி நிறைய இடம் விட்டு, நிறுத்தக் குறிகளுடன், படிப்பதற்கு எளிமையாக இருக்கும் வகையில் அச்சிட்டார். அதிகம் பேர் வாங்கிப் படிக்கத்தக்கவாறு குறைந்த விலையில் வெளியீடுகளைக் கொண்டுவர முயன்றார். அவர் பொழுது போக்காக உரையாடுவதில் வல்லவர். கவர்ச்சிகரமான துணுக்குச் செய்திகளால் தம் மாணவர்களை மட்டுமன்றி, அடிக்கடி தம்மைச் சந்தித்துக் கண்ணியத்துடன் கற்றுச் சென்ற இலக்கியச் சுவை வாய்ந்த ஏராளமான பொது மக்களையும் கவர்ந்தார். பொது அறிவும் தெளிந்த சிந்தனையும் பெற்றிருந்ததால், மாணவர்கள் எளிதாகக் குறுகிய காலத் தில் சிறந்த முன்னேற்றம் காணும் வகையில் பயிற்றுவித்த அவருடைய அணுகுமுறை விரைவும் காலச் சேமிப்பும் உடையதாக இருந்தது. பரந்த கல்வியும் சிறந்த நினை வாற்றலும் பெற்றிருந்ததால் அவர் நடமாடும் கலைக் களஞ்சிய மாகத் திகழ்ந்தார். முன்னறிவிப்பு இல்லாமலேயே தெலுங்கி லும் சமஸ்கிருதத்திலும் எந்தப் பகுதியானாலும் மனப்பாட மாகவே எடுத்துக்கூறி அவருடைய மாணவர்கள், நண்பர்கள் ஆகியோரின் ஐயங்களை உடனுக்குடன் போக்குவார். பேராற்றலாளர் ஆதலால் பல்கலைக் கழகங்கள் மட்டுமே எடுத்துச் செய்யக்கூடிய மிகப் பெரிய பணிகளைத் தனி யொருவராகச் செய்து முடிப்பார். விரைவான சீர்திருத்தம் வேண்டுமென்ற ஆர்வத்தினால் சாஸ்திரங்களுக்குத் தவறான விளக்கங்களைத் தந்து வந்த சீர்திருத்தவாதிகளை, வைதிக பிராமணர் என்ற முறையில் எதிர்த்தார். ஆயினும் சமுதாயத்தில் முன்னேற்றமான மாறுதல்கள் வேண்டுமென் பதில் மாறுபட்டவர் அல்லர். அவர் பெற்றிருந்த ஆங்கில அறிவும், மேற்கத்திய முறைக் கல்வியும், காலத்தின் தூண்டு தலுமே இதற்குக் காரணமாம்!

# 1. வரலாற்றுப் பின்னணி

ஆந்திரர்கள் மொழியான தெலுங்கும் அதன் இலக்கியங்களும் பெரிதும் சமஸ்கிருத இலக்கிய மரபினை அடியொற்றியே அமைந்திருக்கின்றன. வடக்கிற்கும் தெற்கிற்கும் அதாவது ஆரிய நாகரிகத்திற்கும் திராவிட நாகரிகத்திற்கும் இடையில் அமைந்திருப்பதால் ஆந்திரம் இவ்விரண்டும் இணைந்த சிறந்த நாகரிக வளத்தை வளர்த்துக் கொண்டுள்ளது. தெலுங்கு மொழி, அடிப்படையில் திராவிட அமைப்புகளையே பெற்றிருப்பினும் சமஸ்கிருத மொழியின் இலக்கிய மரபுகளையே பெரிதும் பின்பற்றித் தனது இலக்கியங்களைப் படைத்துக் கொண்டதால் இவ்விரு மொழிகளின் நற்கூறுகள் பலவும் தெலுங்கில் இடம் பெற்றிருக்கக் காணலாம். மேலும் காஷ்மீரிலிருந்தும் கன்னோஜி, உஜ்ஜைனி, காசியிலிருந்துமான கல்வித் தொடர்புகள் ஆந்திரப் பிரதேசத்தின் பல பகுதிகளுக்கும் வெகுகாலமாக இருந்து வந்ததால், ஒவ்வொரு தெலுங்குக் கவிஞரும் தம்மை வியாசர் அல்லது வால்மீகி, பாஸர் அல்லது காளிதாசரின் வழித்தோன்றலாகக் கருதிக் கொண்டனர். இதனால் எண்ணற்ற வடமொழி இலக்கியங்கள் மிகச்சிறந்த விளக்கவுரைகளுடன் தெலுங்கில் மொழி பெயர்க்கப்பட்டன. தெலுங்குக் கவிஞர்கள் பெரும்பாலும் தமது கவிதைக்குரிய கருத்துக்களை வடமொழியினின்றே எடுத்துக்கொண்டு, வடமொழிக் கவிஞர்களை முன்மாதிரியாகக் கொண்டே தமது இலக்கியங்களைப் படைத்துக் கொண்டனர்; இதனால் தெலுங்கு மொழியின் காவியம், நாடகம், 'சம்பு' முதலிய இலக்கிய வகைகள் அனைத்தும் வடமொழி இலக்கியங்களின் மறுபதிப்புகளாகவே இருக்கக் காணலாம். தெலுங்கு மொழியிலக்கணமும் வடமொழி மரபுகளைப் பின்பற்றத் தொடங்கியது; இவ்வகையில் தெலுங்கின் அணியிலக்கணம் முழுவதுமாக வடமொழி மரபினதே. தெலுங்கு மொழியின் இலக்கிய மரபு முற்றிலுமாக வடமொழி இலக்கிய மரபை ஒட்டியதே; வடமொழிப் பெரும் புலவர்களின் வழித்தோன்றல்கள் தங்கள் எண்ணங்களைத் தெலுங்கு மொழியில் ஆங்காங்கே பதித்துச் சென்றுள்ளனர். இசை, நடனம், கலை மற்றும் அறிவியல் முதலிய அனைத்துத் துறைகளுமே வடமொழியறிவின் அடிப்படையிலேயே தெலுங்கில் அமைத்துக் கொள்ளப்பட்டன. கருத்துக்களும் அடிப்படை அமைப்புகளும் வடமொழியை வழியொட்டி அமைந்தன

வெனினும் எடுத்துக்கூறும் முறையும் அமைப்பும் அந்த வட்டார வழக்கத்தினையொட்டியனவாகவே அமைந்துள்ளன.

தெலுங்குக் கவிதை கி.பி. 7 அல்லது 8ஆம் நூற்றுண்டுகளிலேயே தோன்றிவிட்டதாகக் கல்வெட்டுகள் கூறிய போதிலும், நமக்குக் கிடைக்கும் முதல் நூல் கி.பி. 11ஆம் நூற்றுண்டில் (கி. பி. 1050–1061) நன்னயப்பட்டர் எழுதிய ஆந்திர மகா பாரதம் ஆகும். வடமொழி மகாபாரதத்தை அடியொற்றி எழுந்த காப்பியம் இது. நன்னயப்பட்டருக்குப் பின்னர்த் தோன்றிய ஒவ்வொரு தெலுங்குக் கவிஞரும் அவரையே தெலுங்கின் 'ஆதிகவி' அல்லது 'முதற்கவி' என்றும், 'வாக் அனுசாசனு' அல்லது 'மொழியின் அரசர்' என்றும் கருதி வந்தனர். அவருக்கு முன்பு தெலுங்கு மொழியில் 'காவியம்' என்று கூறிடத்தக்க வகையில் இலக்கியம் ஏதுமில்லை ; மிகச் சிறந்த, அரிய காவியம் ஒன்றைப் படைத்துத் தந்தவர் அவரே. அன்றைய சூழ்நிலையில் இந்தியா முழுவதுமே மொழி பெயர்ப்புச் செய்யும் முறை பெரிதும் வழக்கத்தில் இருந்த சூழ்நிலைக்கேற்ப வடமொழியின் இதிகாசம், புராணம், காவியம், சம்பு ஆகிய அனைத்தும் தெலுங்கு மொழியில் இடம் பெறத் தொடங்கின. மேலும் அன்று கவிதை வடிவிலேயே கருத்துக்கள் வெளியிடப்பட்டன ; உரைநடை மரபு வழக்கத்திலில்லை. கணிதவியல் நூல்களும்கூட அவற்றை மனப்பாடம் செய்யும் எளிமை கருதிச் செய்யுள் வடிவிலேயே எழுதி வைக்கப்பட்டன. அந்தந்த வட்டார மொழிகள் வலிவும் செல்வாக்கும் பெற்ற பின்னர் வடமொழி நாடகங்கள் பின்னணிக்குச் செல்ல வேண்டி வந்தது. 'யக்ஷகானம்' அல்லது தெருக்கூத்துக்கலை செல்வாக்குப் பெற்று, விசயநகர சாம்ராச்சிய காலத்திலிருந்து வழங்கி வந்திருக்கக் காண்கிறோம். விசயநகர சாம்ராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு தெலுங்குக் காவிய பாணி வழக்கிழக்கத் தொடங்கியது. 'யக்ஷகானம்' 17ஆம் நூற்றுண்டில் தனது இசை, நடனச் சிறப்புகளால் பெருஞ் செல்வாக்குப் பெறத் தொடங்கியது ; அது ஆந்திரத்தில் மட்டுமன்றி, தென்னிந்தியா முழுவதுமே பரவிப் பெரும்புகழ் பெறத் தொடங்கியது. முதலில் கி. பி. 18ஆம் நூற்றுண்டில் தான் உரைநடையில் எழுதிடும் முயற்சிகள் தஞ்சாவூர் முதலிய தென்னிந்தியப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன ; எனினும் முழுமையாக, தற்கால உரைநடை கி. பி. 19ஆம் நூற்றுண்டில்தான் தோன்றி வளரத் தொடங்கியதெனலாம்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பாதிக்குப் பிறகு இந்திய வரலாற்றில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆந்திரமும் அதற்கு

விலக்கன்று. முகலாயர்கள் மற்றும் பீஷ்வாக்களின் வீழ்ச்சியும், கி. பி. 18, 19ஆம் நூற்றுண்டுகளில் கிழக்கிந்தியக் கம்பெனியின் தோற்றமும் ஏற்பட்ட பிறகு இந்தியா முழுவதுமாக ஓர் அரசியல் ஒருங்கிணைப்பு நிகழ்ந்தது; அதற்கு முன் எப்பொழுதும் இல்லாத வகையில் பரந்துபட்ட இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் ஒரே நாடாக்கப்பட்டது. விக்டோரியா பேரரசியின் தலைமையிலான பிரிட்டிஷ் ஆட்சி இந்திய ஒருமைப்பாட்டை மேலும் வலுவாக்கியது; குறிப்பாக ஆங்கிலம் நாட்டின் பொதுமொழியாக்கப்பட்டதால், மக்களின் எண்ணங்களும், எழுச்சிகளும், கருத்து வெளியீடுகளும் பொதுமையாகி நாட்டின் ஒருமைப்பாடு மேலும் வலிவுடையதாகியது; இந்த நிலை வடமொழி பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்த போதுகூட ஏற்பட்டதில்லை என்பது இங்குக் கவனித்தற்குரியது. மேலும் பிரிட்டிஷாரால் ஆங்கிலேய முறையிலான பல பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவை மேற்கத்திய நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் ஓர் இணைப்பாக அமைந்து இந்திய மக்களின் கலை, அறிவியல் துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. இதனால் இந்தியக் கலை, அறிவியல் துறைகள் பெரும் மாற்றங்களையும் வளர்ச்சியினையும் பெற்றனவெனலாம். இக்காலத்தில் அச்சு இயந்திரங்கள் தோன்றியதால் இலக்கிய உலகம் பெரும்பயன் பெற்றது; போஜரும், கிருஷ்ணதேவராயரும் போன்ற பழங்கால இலக்கியக் காப்பாளர்கள் பலரும் சாதிக்காத வகையில் இவ்வச்சுப் பொறிகள் இலக்கிய உலகிற்கு முன்னேற்றமளித்தன. அரிதான பல ஓலைச்சுவடிகளும் பழைய குறிப்புகளும் கண்டுபிடிக்கப் பெற்று அவை அச்சேற்றப்பட்டு, மிகக் குறைந்த விலையில் அனைவரும் படித்துப் பெரும்பயன் பெறத்தக்க வகையில் வெளிக் கொணரப்பட்டன. அரிய உழைப்புடன் கையெழுத்துப் படியெடுத்துப் பெரிதும் வருந்தி வந்த மாணவர் உலகம், அச்சுப்பொறிகளின் பெருந்தொண்டால் எளிதாகப் பல நூல்களையும் பெற்றுத் தமக்கெனத் தனி நூலகங்கள் அமைத்துக் கொண்டு கல்வித்துறையை எளிதாக்கிட ஏதுவானது. மக்களின் வாழ்வு முறை எளிதாக்கப் பட்டது; வெளியூர்ப் பயணங்களும் கடிதம் முதலான தொடர்புச் சாதனங்களும் விரைவாகவும் பாதுகாப்போடும் செயலாக்கப் பெற்றன. இவ்வாறான வளர்ச்சியால் பல திறத்து மக்களிடையேயும் ஒரு நல்லுணர்வும் ஒத்துழைப்பும் உருவாயின; சில குறிப்பிட்ட கட்டுப்பாடுகள், குறிப்பாகச் சாதிக் கட்டுகள் தளரத் தொடங்கின. இதனால் நாட்டில் உருவான பல பிரச்சனை

களும் ஒரு பொதுவான மக்கள் எண்ணத்தால் நோக்கப் பெற்றன - தீர்க்கப் பெற்றன.

இந்திய வரலாறு, மொழி ஒப்பியல் முதலிய பல புதிய துறைகள் தோன்றி வளரத் தொடங்கியதன் காரணமாக இந்திய மொழியாராய்ச்சி பெரிதும் மாற்றமும் வளர்ச்சியும் பெற்றது. மேலைநாட்டு மொழிகளையும் இலக்கியங்களையும் கற்றறிந்த காரணத்தினால் இந்திய இலக்கியங்கள் வளம் பெறலாயின. சமஸ்கிருதம் மற்றும் தெலுங்கு மொழிகள் பல்கலைக்கழகங் களில் பாடமாகப் போதிக்கப்பெறலாயின; அதனால் முறை யான – சிறந்த உரைநடை, செய்யுள் மற்றும் நாடகப் பாடங்கள் தேவைப்பட்டன. இந்நிலையில், சமஸ்கிருதத்தைப் போன்றே தெலுங்கு மொழியும், செய்யுள் நூல்களைப் பெற்றிருந்த அளவு உரைநடை நூல்களைப் பெற்றிருக்கவில்லை; காரணம் மக்களின் மனப்போக்குதான்; அவர்கள் காதாரக் கேட்பதை, விரும்பிய அளவிற்குப் படிப்பதை விரும்பவில்லை. மேலும் தெலுங்கு உரைநடையினை நோக்கும்போது, பாமர மக்களின் பேச்சு நடைக்கும் இலக்கியங்களின் உரை நடைக்கும் இடையே வியப்பூட்டும் அளவிற்கு மிகப்பெரும் வேறுபாடு இருக்கக் காணலாம். மேலும் தெலுங்கு மொழிக் கல்விக்கான உரைநடைப் பாட நூல்கள் வடமொழிச் சொற் றொடர்களும் மோனை அணியமைப்புகளும் கொண்டு இலக்கிய நடையினதாகவே இருக்கின்றன; இதனால் இவை மக்களின் பொதுப்படையான உரைநடைக்குப் பெரிதும் மாறுபட்டு, பொருள் விளங்காது, இலக்கியம் பயிலும் மாணவர்களும் தம் ஆசிரியர்களிடம் விளக்கம் கேட்கத்தக்க நிலையிலேயே அமைந்திருக்கக் காணலாம். வடமொழி நாடகங்கள் மறையத் தொடங்கி, தெருக்கூத்துக்கலை பெரிதும் பரவத் தொடங் கியது; இசை, நடனம், பாடல்கள் செறிந்து இனிமை நல்கிய இக்கூத்துகள் திறந்த வெளியில் குறிப்பிடத் தக்க மேடை யமைப்புகள் ஏதுமின்றி நடிக்கப் பெற்று, கல்லாத பாமர மக்களை மிகப் பெருமளவில் கவர்ந்தன.

புதிய பல்கலைக் கழகங்கள் பல தோன்றவே, கல்வி முறையில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது. ஆங்கிலக் கல்வி வகுப்புகளைப் போன்றே இந்திய மொழிக் கல்விக்கும் முறை யான உரைநடை மற்றும் நாடக நூல்கள் பெருமளவில் தேவைப்பட்டன; எனவே மொழியறிஞர்கள் பலரும் பலசிறந்த உரைநடை நூல்களை எழுதவும், பல வடமொழி நாடகங்களைத் தெலுங்கில் மொழிமாற்றம் செய்யவும், மாணவர்களின் மனப்பாடப் பயிற்சிக்காகப் பழைய இலக்கியங்களைப்

பொறுக்கியெடுத்துப் பதிப்பித்து வெளியிடவுமான இலக்கியப் பணிகளில் முழுமுச்சோடு ஈடுபட்டனர். இவ்வாறாக, உரை நடையிலான கதைகளும், அவற்றின் வளர்ச்சியாக நாவல் களும் தோன்ற ஆரம்பித்தன: மேலும் அவ்வறிஞர்கள் திறனாய்வுக் கட்டுரைகளும், சிறுகதைகளும், சிறுசிறு கவிதை களும் எழுதிக் குவித்தனர். இவையனைத்துக்கும் மேலாக, மேலைநாட்டு உறவால் இந்திய இலக்கியங்களில் முன்னுரை, முற்றுப்புள்ளி முதலிய குறியீடுகள், பத்திப் பகுப்பு, துணைத் தலைப்புகள் ஆகிய புதிய அமைப்பு முறைகள் இடம் பெற்று, இந்திய இலக்கியப் பதிப்புகள் புதிய பொலிவு பெற்றன.

இவ்வாறாக இலக்கிய உலகம் முழுமையும் ஒரு சிறந்த மாறுதலுக்கும் வளர்ச்சிக்கும் உள்ளான காலகட்டத்தில் தோன் றிய வேதம் வேங்கடராய சாஸ்திரிகள் அக்கால இலக்கிய அறிஞர்களுள் மிகச் சிறந்த ஓரிடத்தைப் பெற்றுள்ளார்.

## 2. பெற்றோரும் பிறந்த குடியும்

திரு. சாஸ்திரி அவர்கள் ஆந்திராவில் உள்ள நெல்லூர் மாவட்டத்தின் புதூர்த் திராவிட இனப் பிரிவில் வேதம் எனப் படும் கௌசிக கோத்திரத்தைச் சேர்ந்த பிராமண குடும்பத் தவர். பழமைமிக்க திராவிட, பல்லவ, சோழ, சாளுக்கிய மன்னர்களாலும் விசயநகர ஆட்சிக் காலம் வரையிலான பிற அரசர்களாலும் பெருமளவில் ஊக்கம் பெற்ற திராவிட அல்லது தமிழ் பேசும் மிகப் பல பிராமணர்கள் ஆந்திராவில் பல பகுதிகளிலும் கலந்துறையத் தொடங்கினர்; அவர்கள் தமது வேதக் கல்விக்காகப் பல 'அக்ரஹாரங்களை' அம் மன்னர்களிடமிருந்து பெற்றிருந்தனர். அவர்கள் அக்காலத்தில் ஆந்திராவின் பல பகுதிகளிலும் பரவியிருந்தனர்; தற்பொழுது விசாகப்பட்டினத்தின் திமிரியிலும், கோதாவரி மாவட்டத்தில் 'கோனசீமா', 'பேருரு', 'ஆராமா' ஆகிய இடங்களிலும் நெல்லூர் மாவட்டம் 'தம்மங்குண்டா' மற்றும் 'புதூர்' ஆகிய இடங்களிலும் உள்ள அவர்கள் திராவிடர் என்றே கூறப்படு கின்றனர். இவ்வாறு சென்ற திராவிடப் பிராமணர்கள் புதூர்த் திராவிடர்கள் நீங்கலாக-தங்கள் வேதிய ஒழுக்கத்தையும், பண் பாட்டையும் இழக்காமல் வாழ்ந்து வருகின்ற அதே வேளையில் தமிழை மறந்து நாளடைவில் தெலுங்கினைக் கற்றுப் பெரும் புலமை பெறலாயினர். தற்காலத்தில் தெலுங்கில் மிகச் சிறந்த எழுத்தாளர்களாக இவர்களில் பலர் விளங்குகின்றனர். இன்று கூட, தங்கள் வீட்டில் தமிழைப் பேசுகின்ற புதூர்த் திராவிடப் பிராமண மக்கள் ஆந்திரம், கர்நாடகம், தமிழகம் என எங்கும் வாழ்ந்தபோதும் தமது வேத ஒழுக்கத்தை மறவாமலும் தெலுங்கு மொழியை மறவாமலும் தெலுங்கு இலக்கிய உலகிற்குப் பெருந்தொண்டாற்றி வரக் காண்கிறோம். விசய நகர ஆட்சிக் காலத்தில் இவ்வின மக்களில் பலர் பெரும் வேதாந்திகளாகவும், வேறு பலர் வைணவப் பெரியார்களா கவும் விளங்கினர்: இவ்வைணவப் பெரியார்கள் இராமானுஜரின் ஸ்ரீபாஷ்ய நூலைக் கற்பிக்கும் பொருட்டு அக்கிரஹாரங்களைக் கொடையாகப் பெற்றனர்.

நம் வேதம் அவர்களின் குடும்பம் திருப்பதியைச் சேர்ந் ததுதான் எனினும், நெல்லூர் மாவட்டத்திற்குச் சென்று அந்த வட்டாரத்தின் தலைவரிடமிருந்து 'காவலி' வட்டத்தி லுள்ள 'மல்லைய பாலெம்' அக்ரஹாரத்தைப் பெற்று அவர்கள்

பல 'யக்ஞங்'க்களைச் செய்தனர். வேதம் வேங்கடரமண சாஸ்திரிகள் தமது பன்னிரண்டாவது வயதிலேயே தமது வீட்டை விட்டுக் கிளம்பி, சென்னையிலிருந்து நாற்பது கல் தொலைவில் உள்ள காஞ்சிபுரத்திற்குக் கால்நடையாகவே சென்று திரு. நிவர்த்தி வேங்கடரமண சாஸ்திரி அவர்களுடைய குருகுலத்தில் வேதங்களைக் கற்ருர்.

பத்தாண்டுகள் அங்கேயே தங்கி முழுமையான கல்வியைப் பெற்றபின் வேங்கடரமண சாஸ்திரிகள் தமது சொந்த கிராமத்திற்குத் திரும்பி, திருமணம் செய்து கொண்டார். 1847ல் சென்னை முத்தியாலுப்பேட்டைத் தம்புச்செட்டித் தெருவில் பேரிச்செட்டி சமூகத்தினரால் நிறுவப்பட்ட "சமஸ்கிருத ஆந்திர திராவிட பாடசாலை"யின் முதல் தலைமையாசிரியரானுர். அப்போது புகழ்வாய்ந்த திரு B. சீதாராமாச்சார்யா அவர்கள் தெலுங்கு மொழியின் உதவி ஆசிரியராக இருந்தார். இவரே பிற்காலத்தில் 'ஆந்திரசப்தரத்ஞகரா' என்னும் சிறந்த நூலை எழுதித் தெலுங்கு மொழியின் முதல் அகராதி ஆசானுக விளங்கினுர். இந்தப் பாடசாலையே பிற்காலத்தில் "முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப்பள்ளி"யாக வளர்ந்தது. பின்னர் இப் பள்ளியிலேயே 1880 அளவில் வேதம் வேங்கடராய சாஸ்திரிகளும் தலைமையாசிரியராகப் பணியாற்றினுர்; அப்பொழுது தான் அப்பள்ளியில் ஆங்கிலக் கல்வி தொடங்கப் பெற்றது. "பரவஸ்து சின்னைய சூரி" என்ற புகழ்பெற்ற தெலுங்கு இலக்கண ஆசிரியர் வேங்கடரமண சாஸ்திரிகளின் சமகாலத்தவராகவும் நண்பராகவும் விளங்கி வந்தார்.

வேங்கடரமண சாஸ்திரிகளுக்கு நான்கு ஆண்மக்களும் நான்கு பெண் மக்களும் இருந்தனர்; இவர்களுள் வேதம் வேங்கடராய சாஸ்திரியே மூத்தமகன். சென்னையில் பிரமாதீச ஆண்டு, மார்கசிரா, பஹுளா 6ஆம் நாள் புதன்கிழமை, ஆங்கில ஆண்டு 1853 டிசம்பர் 21ஆம் நாள் இவர் பிறந்தார். இவருடைய தந்தைவழிப் பாட்டனுரின் பெயராகிய வேங்கடராய சாஸ்திரிகள் என்னும் பெயரே இவருக்கும் இடப்பட்டது. (இந்தப் பெயர்கள் இக்குடும்பத்தில் மாறி மாறி வழங்கப் பட்டு வந்தன). இரண்டாவது மகனுன வேங்கடசுப்பையா என்பவர் தமது எப்.ஏ. (பிற்கால இண்டர்மீடியட்) கல்வியினை முடித்த நிலையில் 25–ஆம் வயதிலேயே காலமானுர்; மூன்ருவது மகனுன வேங்கடாசலம் ஐயர் பி.ஏ., பி.எல்; அவர்கள் தம் முடைய 67–ஆம் வயது வரையில் வாழ்ந்து ஒரு சிறந்த கல்வியாளராகவும், வரலாற்றறிஞராகவும் திகழ்ந்தார். திரு. ஐயரவர்கள் இராஜமுந்திரியில் தமது பி.ஏ. பட்டப்படிப்பில்

முதல் தகுதி பெற்று, கோடே கஜபதி சமஸ்கிருதப் பரிசான ரூ.400 ஐப் பெற்றார். நெல்லூரில் வழக்கறிஞராகப் பணி யாற்றிய அவர் தமது ஓய்வு நேரத்தை வேதம் மற்றும் வரலாற்று ஆய்வில் செலவழித்தார். அவர் எழுதிய மகாபாரதத் தொடக்க அதிகாரங்களின் பாடம் (A study of the preliminary chapters of the Mahabharata) என்ற நூல் சமஸ்கிருத வரலாறு எழுதிய வின்டர்னிட்ஸ் அவர்களாலும், மகாபாரத உரை எழுதி வெளியிட்ட பூனாவைச் சேர்ந்த டாக்டர் சுக்தானந்தர் அவர் களாலும் பெரிதும் போற்றி மேற்கோளாகக் கையாளப்பட் டிருக்கிறது. இந்நூல் 1922ல் வெளியானது. புராணங்கள் கூறும் ஏழு தீவுகள் (Dvips) குறித்த இவருடைய கட்டுரையை 'இலண்டன் புவியியற் கழகம்' பெரிதும் பாராட்டியுள்ளது. 'ஆரியவர்த்தம்', 'பாரத வர்ஷம்', 'மூவாயிரம் ஆண்டுகட்கு முந்தைய தமிழர்' முதலிய பல கட்டுரைகளை மைசூர் புராண இயற் சங்கம் (Mysore Mythic Society) என்ற காலாண்டிதழில் எழுதி ஆரியர் மற்றும் திராவிடர்களின் பூர்வீகத்தைப் பற்றிப் பல ஆய்வுகளைச் செய்தார்; இவர் 1931ல் காலமானார்.

வேங்கடரமண சாஸ்திரி அவர்கள் தமது இறுதிக்காலம் வரை பணிபுரிந்தே வாழ வேண்டியதாயிற்று. 1856 வரை சென்னையில் பணியாற்றிய அவர் அதன்பின் சமஸ்கிருத ஆசிரிய ராக விசாகப்பட்டினம் மற்றும் கோதாவரி மாவட்டங்களில் பல பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பணியாற்றினார். இறுதி யில் இராஜமுந்திரிக் கலைக்கல்லூரியில் சமஸ்கிருதத் தலைமைப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்; மாதம் ரூ.25 ஓய்வூதியம் பெற்று வந்தார். ஆங்கிலம் தெரியாதிருந்த போதிலும் அவர் ஒரு சிறந்த தத்துவவாதியாக, பரந்த மனப் போக்குடையவராக விளங்கினார். பைபிள், குரான் ஆகிய வற்றைப் படிப்பதில் ஆர்வம் காட்டினார். சின்னையசூரி அவர்களின் "பால வியாகரணு" என்ற நூலுக்கு முன்பே இவர் "லகு வியாகரணம்" என்னும் சிறிய இலக்கண நூலைப் பள்ளிப் பிள்ளைகளுக்காக எழுதினார்; மேலும் சங்கராச்சாரியாரின் "ஆத்ம போதம்" எனும் நூலுக்கு விளக்கமாக "ஆத்ம போத விவரணம்" என்றதொரு நூலையும் எழுதினார். பொதுவாகவே அமைதியான இயல்பும் விவாதங்களைக் கண்டு ஒதுங்கிக் கொள்ளும் மனப்போக்கும் உடைய இவர் இராஜமுந்திரியில் கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு அவர்களின் சமூக சீர்திருத் தம், விதவை மணம் ஆகியவற்றை எதிர்க்க மறுத்துவிட்டார். இதற்கு அவர் கூறிய காரணம் யாதெனில் ஒவ்வொருவருக்கும் தமது எண்ணத்தை வெளியிட முழு உரிமை உண்டு; பந்துலு

வின் பிரச்சாரத்தினுல் இந்துமதத்திற்கு ஆபத்து ஏற்பட்டு விடாது என்பதே. அது மட்டுமன்றித் திரு. பந்துலு போன்ற இளைஞர்களுடன் போட்டியிடத் தம்மைப் போன்ற வயதானவர்கள் தகுதியில்லை என்பதாலும் வேங்கடரமண சாஸ்திரிகள் போட்டியைத் தவிர்த்தார்; பழமையின் கோட்பாடுகளைத் தாங்கிநின்ருர். இவரும் வீரேசலிங்கமும் ஒரே வயதினர். தமது இலக்கியப் பணிகளுக்காக "வியாகரண பதஞ்சலி" என்றழைக்கப்பட்ட வேங்கடரமண சாஸ்திரி அவர்கள் தமது 83ஆம் வயதில், முழு அமைதியுடனும் உடல் நலத்துடனும் வாழ்ந்து நெல்லூரில் இயற்கை எய்திஞர்.

## 3. இளமைப் பருவமும் கல்வியும்

இளமைக் கால வாழ்க்கை, கல்வி, சூழ்நிலை ஆகியவை பெரியோர்களின் பிற்கால வளர்ச்சிக்குப் பெருந்துணை வகிக்கின்றன என்ற உண்மை, வேதம் வேங்கடராய சாஸ்திரிகளின் வாழ்வினின்றும் தெற்றெனப் புலனாகும். 1853ல் இவருடைய தந்தையார் சென்னையில் பணியாற்றியபோது இவர் பிறந்தார் எனினும் இவர் தமது தந்தையாருடன் ஆந்திராவில் பல பகுதிகளுக்கும் சென்று வந்தமையால் நாட்டில் மிகப் பெரும் பகுதியை மிக இளமையிலேயே மிக நெருக்கமாக அறிந்து உணர்ந்திட முடிந்தது. இவருடைய குடும்பம் காக்கிநாடா, நரசாபுரம், போதூர், விசாகப்பட்டினம் முதலிய இடங்களிளெல்லாம் வாழ்ந்திருந்து இறுதியில் இராஜமுந்திரியில் தங்கியது. இயற்கையிலேயே மனிதரையும், மனிதப் பாங்குகளையும், மொழியையும் கூர்ந்து நோக்கும் நுண்மாண் நுழைபுலமும், அறிந்ததை மறந்தறியா ஆழ்ந்த புலமையும் உடைய வேங்கடராய சாஸ்திரி அவர்களுக்கு, வெளியில் மட்டுமன்றி வீட்டிலும் ஆழ்ந்த அறிவும் தெளிந்த புலமையும் மிக்க தந்தையார் இருந்தது பெரும்பயனாயிற்று. இதனால் அவர் வெளியில் கற்ற கல்வியோடு வீட்டிலும் மிகச் சிறந்த கல்வியினைப் பெற்றார். இப்பருவத்தில் அவர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்த நிகழ்ச்சிகளும் செய்திகளுமே அவருடைய பிற்கால இலக்கிய வெளிப்பாடுகளாயின. அவர் எட்டு வயது சிறுவனாயிருந்தபோது, அவருடைய தந்தை அவர்தம் நண்பர்களுக்குக் கூறிய பிரதாபருத்ரன் கதையை இவர் தற்செயலாகக் கேட்டார். இதுவே பிற்காலத்தில் அவர் எழுதிய 'பிரதாபருத்ரீயம்' என்ற புகழ்பெற்ற நாடகமாயிற்று. இவருடைய மற்றோர் இளமைக் கால நிகழ்ச்சியாக, இவரும் இவருடைய தம்பி வேங்கடசுப்பையா அவர்களும் கோதாவரியின் ஒரு கரையினின்றும் மறுகரைக்கு நீந்த முயன்று அதில் தோல்வியடைந்து ஆற்றில் மூழ்கவிருந்த சமயத்தில் சில படகுக்காரர்களால் காப்பற்றப்பட்ட நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம்; கோதாவரியின் பரந்த நீர்ப்பரப்பும், பாய்ந்து செல்லும் வேகமும், அதில் உடன்பிறப்புகள் இருவரும் சிக்கி அல்லற்பட்ட அவலமும் அவருடைய இளமை நெஞ்சில் அப்படியே பதிந்திருந்தன; இந்த நினைவினாலேயே அவர் தம்முடைய பிரதாபருத்ரீயம் நாடகத்தில் இதைப் போன்ற ஒரு காட்சியைப்

படைத்துள்ளார். இந்நாடகத்தில் பிரதாபருத்ரனை முசுலீம் அரசரின் கைதியாகக் கோதாவரியைக் கடந்து படகில் கொண்டு செல்லும்போது, கவிஞன் வைத்தியநாதன் அப்படகுடன் நீந்தியே முதலைகள் நிறைந்த அந்த ஆற்றைக் கடப்பதாக இவர் எழுதியுள்ள காட்சிகளில் இளமையில் இவர் அடைந்த அனுபவமே பேசுகிறதெனலாம். இவருடைய படைப்பில் வரும் பாத்திரங்களான 'பெரிகாடு', 'செகுமுகி சாஸ்திரி' ஆகியோர் இவருடைய உண்மை வாழ்வில் இவர் எளிதாகச் சந்தித்த சிலருடைய பிரதிபலிப்புக்களே. எல்லோரிடத்தும் எளிதாகப் பழகும் இயல்பினாலும், தம்மைச் சுற்றி நிகழும் நிகழ்ச்சிகள், விளையாட்டுகள் எதுவாயினும் அவற்றைக் கூர்ந்து நோக்கிடும் ஆற்றலினாலும் இவர் மனிதரைப் பற்றியும் மனிதவியலைப் பற்றியும் ஏராளமாக அறிந்து கொண்டார். பிச்சைக்காரர்களின் பாடல்களும், நாட்டுப்புறப் பாடல்களும் இவரைப் பெரிதும் கவர்ந்திருந்தமையால் பின்னர் மக்கள் மரபாராய்ச்சி, வரலாறு ஆகியவற்றில் இவர் பெரிதும் ஈடுபாடு கொள்ளலானார்.

வேங்கடராய சாஸ்திரிகள் தம் தந்தையிடம் நேரடியாகக் கல்வி கற்றவரல்லர்; தம்முடைய தந்தையிடமிருந்து கற்றுக் கொண்டதெல்லாம் அவர் தம்முடைய மாணாக்கருக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் போதும் நண்பர்களுடன் உரையாடிய போதும் காதால் கேட்டவையேயாம். அவருடைய தந்தை ஒரு கடுமையான ஆசிரியராகவும் கண்டிப்பானவராகவும் இருந்தமையால் அவருடைய மக்களேகூட அவரை நெருங்க விரும்புவதில்லை. ஆயினும் கலையில் ஈடுபாடுள்ள இளம் சிறுவனின் உள்ளத்தில் அவன் பெற்றோரின் வாழ்வுச் சூழ்நிலை பெரும் பயன் நல்குதல் ஒருதலையாகும். வேங்கடராய சாஸ்திரிகளின் சகோதரர்கள் தமது பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் தமது மடமையை யுணர்ந்து தமக்கும் வடமொழி கற்பித்து உதவுமாறு தம் தந்தையை வேண்டினர். சாஸ்திரி அவர்கள் மிகவும் சினமுற்று, அவர்கள் தம் துறைக்கு வருவதைத் தாம் விரும்பவில்லை என்றும், அவரவருடைய தகுதிக்கேற்ற வேறு துறைகளில் ஈடுபட வேண்டும் என்றும் கூறிவிட்டார். இதனால் சமஸ்கிருதப் பாடங்களை நூல்களை வைத்துக்கொண்டு மிக உரக்கப் படிக்கலாயினர். அவ்வாறு படிக்கும்போது தவறுகள் நிறைய நேர்வதுண்டு; அவற்றைக் காதில் கேட்க நேர்ந்த தந்தையார் வேறுவழியின்றித் திருத்துவதுண்டு; தம் மகனுடைய கல்வி ஈடுபாட்டை உணர்ந்த வேதம் வேங்கடரமணசாஸ்திரி அவர்கள் உள்ளூர மகனைப் பாராட்டிக்கொண்ட போதிலும் வெளிப்படையாகக் கல்வி

கற்றுக் கொடுக்காமல் முன்பு குறிப்பிட்டாற் போன்று திரை மறைவிலான கல்விப் பயிற்சியே அளித்தார். இவ்வாறுகப் பிற்கால அறிஞர் ஒருவருக்குச் சுயமுயற்சியாலான கல்வி அடித்தளமாக அமைந்தது.

இவ்வாறுக அவருடைய வாழ்க்கை சுயகல்வியாலும், பட்டறிவினுலும் உருவாயிற்று. அவருடைய குடும்பத்தில் மேலும் ஒருவர் சம்பாதிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது வேங்கடராயடு அவர்கள் (இதுதான் அவருடைய பள்ளிப் பெயர்) தம்முடைய மெட்ரிகுலேஷன் படிப்பை விசாகப்பட்டினம் 'நார்மல் பள்ளி'யில் முதல் வகுப்பில் தேறி முடித்திருந்தார். 1869 ஆம் ஆண்டில் இத்தேர்வில் தேறிய வேங்கடராயடு அவர்கள் ஆசிரியத் தொழிலை நாடினுர். இவர் ஆசிரியர் பயிற்சிக்காகச் சென்னைக்கு வந்து நார்மல் பள்ளியில் சேர்ந்து படித்தபோது B. சீதாராமாச்சார்யா மற்றும் சடலவட சீதாராம சாஸ்திரி முதலிய புகழ் பெற்ற ஆசிரியர்களிடம் கல்வி பயின்ருர். இவர் 1875ல் தமது எப். ஏ. கல்வியினை முடித்தார்; ஆயினும் இவருக்கும் இராஜ முந்திரிக் கலைக்கல்லூரி முதல்வருக்கும் இடையில் நல்லுறவு இன்மையால் அவரால் உடனடியாக எந்த வேலையையும் பெற முடியவில்லை. இதுவே அவருடைய வாழ்க்கைப் போராட்டத்தின் தொடக்கமாயிற்று. இதனுல் தமது தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற வேலையை அவரால் பெற முடியாமல் போனது. பின்னர் மிகப் பெரும் முயற்சிகளின் விளைவாக அவர் மிகக்குறைந்த ஊதியத்தில் ஒரு கீழ்நிலை ஆசிரியராக ஸ்ரீகாகுளம் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். பின்னர் அவர் சோடாவரம் 'தாலுகா கீழ்நிலைப் பள்ளியின்' (Taluk Lower Secondary School) தலைமையாசிரியரானுர். இந்த இடத்தில் அவர் பணியாற்றிய போது 'பெரிகாடு' என்ற சேவகன் (Peon) ஒருவன் அங்குப் பணியாற்றினுன். அவன் பள்ளியின் நிர்வாகிக்கு மிகவும் வேண்டியவன்; அகம்பாவம் மிக்கவன். அவன் பள்ளியின் பொறுப்பாளர்களுடன் மிகக் கடுமையாக மோதிக் கொண்டு ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆட்பட்டவன். அவனுடைய பெயரான பெரிகாடு என்ற பெயரில் ஒரு பாத்திரத்தைத் தமது பிரதாருத்ரீய நாடகத்தில் வேங்கடராய சாஸ்திரிகள் உருவாக்கி உலவவிட்டிருப்பது ஈண்டு நினைவிற் கொள்ளற்குரியது. அதன் பின்னர் வேங்கடராயடு அவர்கள் விசாகப்பட்டினம் இந்து உயர்நிலைப் பள்ளியில் முதல்நிலை உதவியாசிரியராகவும், பின்னர் இராஜமுந்திரி நகர்ப்பள்ளியில் (Town School) தலைமையாசிரியராகவும் பணியாற்றினுர். அவர்

ஒரு சிறந்த ஆசிரியராகவும் அதைவிட ஒரு கண்டிப்பான ஒழுக்க நெறியாளராகவும் பெயர் பெற்ருர்.

1879ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3ஆம் நாள் இராஜ முந்திரியில் திரு. வீரேசலிங்கம் பந்துலு அவர்கள் சமூக சீர்திருத்தம் மற்றும் விதவைகள் திருமணம் பற்றித் தமது முதல் சொற்பொழிவை நிகழ்த்திஞர், அப்பொழுது வேங்கடராயடு அவர்கள் சிறந்த அறிஞர் என்ற முறையிலும் உள்ளூர் நகர்ப் பள்ளியின் தலைமையாசிரியர் என்ற முறையிலும் செல்வாக்குப் பெற்று வேங்கடராய சாஸ்திரிகள் என்று அழைக்கப்பட்டு வந்த நேரம். அவருடைய தந்தை வீரேசலிங்கம் அவர்களை எதிர்க்காமல் புறக்கணித்தார்; ஆஞல் வேங்கடராய சாஸ்திரி கள் சஞதனிகளுக்கு ஆதரவாக வீரேசலிங்கத்தை எதிர்க்க முனைந்தார். அவர் வீரேசலிங்கம் அவர்களுடைய ஒவ்வொரு வாதத்திற்கும் வடமொழி நூல்களிலிருந்து மேற்கோள் காட்டி இந்து சமூகத்தில் விதவை மணத்திற்குச் சாத்திரம் ஒப்புதல் அளிக்கவில்லை என்று நிறுவிஞர்.

பின்னர்ச் சில காலம் கழித்து அவருக்கு பி. ஏ. பட்டப் படிப்பில் நாட்டம் ஏற்பட்டது; அதஞல் அவர் இராஜமுந்திரி நகர்ப்பள்ளித் தலைமையாசிரியராகத் தம் இடத்தில் தம் சகோதரர் வேங்கடசுப்பையா அவர்களை (அவரும் எப். ஏ. வரை படித்து நல்ல புலமை பெற்றிருந்தார்) அமர்த்திவிட்டுச் சென்னைக்கு வந்தார். இது நிகழ்வதற்குச் சில காலம் முன்பே சகோதரர் இருவரும் திருமணம் செய்துகொண்டிருந்தனர். திருமணம் அவர்களுக்கு ஒரு திருப்பு முனையானது. வாழ்க்கை எப்போதும் இன்பமாகவே அமைந்திருப்பது இல்லை; துன்ப ஓடைகளும் இடைப்படுவதுண்டு. எத்துணையோ முறை இவ்விரு சகோதரர்களும் பிரிந்திருக்கின்றனர்; ஆஞலும் இம் முறை அவர்கள் நிரந்தரமாகவே பிரிய நேர்ந்தது. சென்னைக்கு வந்த வேங்கடராய சாஸ்திரிகளால் பல காரணங்களால் தமது படிப்பினைத் தொடர முடியாமற் போனது. இந்நிலையில் அவருடைய இளம் மனைவி அம்மை நோயால் இறந்த செய்தி அவரை எட்டியது; மற்ருேர் இடியாக அவருடைய அருமை உடன் பிறப்பும் மறைந்த செய்தி தொடர்ந்தது. வேங்கடராய சாஸ்திரிகளுக்கு இஃது இதற்கு முன் அனுபவித்தறியாப் பேரிழப்பாகவும் பெரும் வேதனையாகவும் அமைந்தது. அவருடைய எழுபதாவது வயதில்கூட, அவர் தம் தம்பியை நினைத்துக் கண்ணீர் விட்டதை நான் பார்த்திருக் கிறேன். தம் அண்ணன் பி. ஏ; பட்டம் பெறவில்லை என்பதால் தாம் பி. ஏ., பட்டம் பெறப் போதிய தகுதி பெற்றிருந்தும்

அதனைப் பெற மறுத்துவிட்டவர் திரு. வேங்கட சுப்பையா அவர்கள். ஒன்றாக உண்டு, ஒன்றாகப் படித்து, ஒன்றாக விளையாடி, ஒன்றாக வாழ்ந்து வந்த அவ்விரு சகோதரர்களும் உள்ளத்தாலும் உயிராலும் ஒன்றாகவே ஆகியிருந்தனர். உடல் மட்டுமே இரண்டாயிருந்தது.

பின்னர் சென்னை முத்தியாலுப்பேட்டை ஆங்கில மொழிப் பள்ளியில் (Anglo-Vernacular School) தலைமையாசிரியராக வேங்கடராய சாஸ்திரிகள் பொறுப்பேற்றார். பழைய சமஸ்கிருத ஆந்திர திராவிட பாடசாலையே ஆங்கிலக் கல்வி முறையில் புதிய பெயருடன் இயங்கி வந்தது. பின்னர் அவர் நெல்லூர் மாவட்டம் நாயுடுப்பேட்டைக்கு அருகில் உள்ள "சில்லாமூர்" என்ற ஊரைச் சேர்ந்த திரு. அல்லாடி சதாசிவ சாஸ்திரி அவர்களுடைய மகள் 'சேஷம்மா' அவர்களை மணம் செய்து கொண்டார்; இல்லறம் சென்னை முத்தியாலுபேட்டையிலேயே நடந்தது. அவருடைய மாத ஊதியம் ரூ. 40/- ஆக இருந்தபோது, அவர் அதில் பெரும்பகுதியைச் சமஸ்கிருத இலக்கியங்களையும், சாஸ்திரங்களையும் வாங்குவதிலேயே செலவழித்தார். அவர் சென்னையிலிருந்தபோதும் விதவை மணம் பற்றிய பிரச்சினை அவரை விடவில்லை. இந்து சனாதன மார்க்கத்தைச் சேர்ந்த அனைத்துப் பழமைவாதிகளும் மன்றங்களும் தங்களுடைய நெறிகளைக் காத்திட அவரைச் சொற்பொழிவுகள் நிகழ்த்துமாறு வேண்டின. இதுமட்டும் காரணமல்ல; வீரேசலிங்கம் பந்துலு அவர்களும் சென்னை மாநிலக் கல்லூரியில் தெலுங்குப் பேராசிரியராகச் சென்னைக்கே வந்து சேர்ந்தார்; வந்தவர் இங்கு வந்ததுமே விதவைகள் மறுமணம் குறித்த தம் எண்ணங்களைப் பரப்பிட முயன்றார். இந்நிலையில் சாஸ்திரியாரின் தர்ம சாஸ்திரம் குறித்த சொற்பொழிவுகள் மிகப் புகழ் பெற்றன. நகரத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் மட்டுமன்றித் தென்னாட்டின் பல பகுதிகளிலுமிருந்த மத நிலையங்களின் சார்பிலும் பலர் வந்து அவரின் சொற்பொழிவுகளைக் கேட்டனர். இவ்வாறான அவருடைய சொற்பொழிவுகளை அவர் தெலுங்கு மொழியில் ஒரு நூலாகத் தொகுத்து "ஸ்திரீ புனர் விவாஹ துர்வாத நிர்வாபணமு" என்ற பெயரில் 1883ல் வெளியிட்டார். பொதுமக்கள் உதவியுடன் வெளியிடப் பெற்ற இந்நூலின் 1000 படிகள் இலவசமாக வழங்கப்பெற்றன.

# 4. சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தலைமைச் சமஸ்கிருதப் பேராசிரியர்

வேதம் வேங்கடராய சாஸ்திரிகள் சமஸ்கிருத வல்லுநராகத் திகழ்ந்தது கண்ட சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் நிர்வாகத்தினர் 1886ல் அவரைத் தமது கல்லூரியில் சமஸ்கிருதப் பண்டிதராக நியமனம் செய்தனர்; இப்பணிக்காக அவர் பெற்ற மாத ஊதியம் ரூ. 45 மட்டுமே. இவர் முத்தியாலுப்பேட்டை ஆங்கில மொழி நடுத்தரப் பள்ளியில் பெற்ற ஊதியம் ரூ. 40 மட்டுமே. அப்போது ஒரு வெள்ளிக் கிழமையன்று தமது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டி அப்பள்ளியின் தலைமையாசிரியர் பொறுப்பைச் சில காரணங்களால் விட்டு விலகி இராஜமுந்திரிக்குச் செல்ல ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். இதனை அறிந்த சென்னைக் கிறித்துவக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் மில்லர் அவர்கள் மறுநாள் சனிக்கிழமையே சாஸ்திரியாரை அழைத்து அதிக ஊதியம் தருவதாகக் கூறி, தமது கல்லூரியில் சமஸ்கிருதப் பேராசிரியராக அமர்த்திக் கொண்டார். சாஸ்திரியார் அவர்களுக்கு அதிகமாகக் கிடைத்த ஊதியத்தைவிட, பல நாடுகளினின்றும் வந்த பல மொழி பேசும் மாணவர்களுக்கு ஆங்கில மொழியின் வாயிலாகச் சமஸ்கிருதத்தைக் கற்பிக்கும் அக் கல்லூரியின் கல்வி முறை பெரிதும் சுவையூட்டுவதாகவும், கவர்ச்சியானதாகவும் அமைந்திருந்தது. நெல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற ஓங்கோலு வெங்கடரங்கையகாரு அக்காலத்தில் (1886) அக்கல்லூரியில் சமஸ்கிருதம் பயின்றவர்; அவர், சாஸ்திரியார் ஆங்கில மொழியின் வாயிலாகக் கல்வி போதிக்கும் பாங்கும் பல துறைகளிலும் அவர் பெற்றிருந்த புலமையும் அக்காலத்தில் மாணவர்களைப் பெரிதும் கவர்ந்திருந்ததாக என்னிடம் ஒரு சமயம் கூறியிருக்கிறார். அச்சமயத்தில் சமஸ்கிருத வகுப்பில் பயின்ற மாணவர்கள் எண்ணிக்கை இரட்டிப்பானதால், இன்னொரு சமஸ்கிருத ஆசிரியரைச் சாஸ்திரியாருக்கு உதவியாக நியமிக்க வேண்டி வந்தது. அக்காலத்தில் மைசூர் 'கண்டராஜா அரசு' போன்ற அரச குடும்பத்தினரும்கூடச் சமஸ்கிருதம் பயில விரும்பி அக் கல்லூரியில் சேர்ந்து சாஸ்திரியாரின் மாணவராயிருக்கின்றனர். காலஞ்சென்ற பூரி சங்கராச்சாரியார் ஸ்ரீபாரதி கிருஷ்ண தீர்தா என்பவர் (பிற்காலத்தில் வேங்கடரமண சரஸ்வதி என்று

பலராலும் அழைக்கப்பெற்றவர்) சாஸ்திரியாரின் அன்புக்குரிய மாணவராக இருந்து, பின்னர்ப் பலகாலம் அவரோடு உறவு கொண்டிருந்தார். பிற்காலத்தில் தலைசிறந்த அரசியல்வாதியாக விளங்கிய திரு. எஸ். சத்தியமூர்த்தி, டாக்டர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், ஏ. வி. இராமனுதன் (பிற்காலத்தில் மைசூரின் அமைச்சராகவும், பாரத்பூரின் திவானுகவும் விளங்கியவர்) பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரிகள் போன்ற பல அறிஞர் பெருமக்களும் சாஸ்திரியாரின் மாணவராகப் பெருமை பெற்றவர்களே. திரு. ஏ. வி. இராமநாதன் அவர்கள் 1938ல் சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தில் பேசும்போது பின்வருமாறு குறிப்பிட்டார்; "ஆந்திர நாட்டின் மீது அளவு கடந்த பற்றும், பரந்த அறிவும், புலமையும் மிக்க வேதம் வேங்கடராய சாஸ்திரிகள் ஒரு சிறந்த சமஸ்கிருத ஆசிரியராக மட்டுமன்றி ஒவ்வொரு மாணவனுக்கும் நல்ல நண்பராகவும் சிறந்த குருவாகவும் விளங்கினுர்; நாங்கள் சமஸ்கிருத மொழியின் மீது அளவற்ற ஆர்வம் கொள்ளும் வகையில் அதன் பண்டை உயர்வையும் அழகையும் உணர்ந்து பாராட்டத்தக்கவாறு அவர் எங்களை உருவாக்கினுர்."

அவருடைய ஒப்புயர்வற்ற ஆங்கிலப் புலமைக்குச் சான்ருக நாம் ஒரு நிகழ்ச்சியைக் காணலாம். ஒரு முறை டாக்டர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் இருந்த வகுப்பொன்றில் நம் சாஸ்திரியவர்கள் சமஸ்கிருத நாடகமான "முத்ரா ராட்சஸம்" என்ற நூலைப் பாடமாக நடத்திக்கொண்டிருந்தார். வடமொழியிலான அந்நூலைப் படித்து, மிக அருமையான முறையில் ஆங்கில விளக்கவுரையுடன் அவர் கற்பித்துக் கொண்டிருந்தார். அவருடைய சரளமான புலமை, ஆற்றல் மிக்க ஆங்கில உரை கண்ட அம்மாணவர்கள் அவ்வுரை யாரேனும் ஓர் ஆங்கில மொழியறிஞர் இயற்றிய உரையாயிருக்கலாம் என்று எண்ணியிருந்தனர்; ஆனுல் அக்குறிப்பிட்ட வகுப்பு முடிந்தவுடன் சாஸ்திரியாரின் கையிலிருந்த நூலை வாங்கிப் பார்த்தபோது அது வடமொழியிலான மூல நூலாக மட்டுமே இருந்ததையும், ஆங்கில விளக்கம் அவருடைய சொந்த உரையெனவும் அறிந்த மாணவர்கள் பெரிதும் வியந்து போற்றினராம்.

மேற்குறித்த நிகழ்ச்சியை நான் டாக்டர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் வாய்மொழியாகவே கேள்வியுற்றேன். 1938ல் நெல்லூரில் "முன்னேற்ற சங்கத்தின்" சார்பாக வேதம் வேங்கடராய சாஸ்திரிகளின் நினைவு ஆண்டு விழாக்

கொண்டாடப் பெற்றபொழுது அவ்விழாவிற்குத் தலைமை வகித்த டாக்டர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள், மேற்குறித்த நிகழ்ச்சியைப் பின்வருமாறு விவரித்தார்; முத்ரா ராட்சஸம் போன்ற வடமொழி நூலைக் கையில் வைத்துக் கொண்டு பாடம் நடத்துகிறபொழுதே அதனை மிகத் திறமையாக ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்து கூறும் திறமை இவருக் குண்டு; அதனைக் கேட்டுக்கொண்டிருக்கிற அனைவரும் அவர் ஏதோ ஆங்கில உரை நூலைக் கையில் வைத்து படிப்பதாகவே எண்ணத்தக்க வகையில் அவ்வுரை அமைந்திருக்கும். அவருடைய விளக்கம் மிக உயர்ந்ததாக இருக்கும்; அவர் தன்னுடைய ஆழ்ந்த கல்வியறிவினுலும் தெளிவான பட்டறி வினுலும் பெற்ற பரந்த புலமையின் துணை கொண்டு தம் உரைகளில் காட்டும் எடுத்துக்காட்டுகள், சுட்டுக் குறிப்புகள், ஒப்பீடுகள் ஆகியவற்ருல் கற்போர் நெஞ்சைப் பிணித்தார். எனவே அவருடைய மாணவர்கள் தாமாக முயன்று எதையும் அறிந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதில்லை. (இந்து. 24-12-1938)

சில ஆண்டுகள் அவர் இந்தியத் தத்துவங்களைப் போதித்து வந்தார்; சில நேரங்களில் அவர் பைபிள் வகுப்புகளைக் கூட நடத்தியதுண்டு, 1919ஆம் ஆண்டில் அவர் சமஸ்கிருதப் பேராசிரியராகவும் தாய்மொழிக் கல்வி மேற்பார்வையாளராக வும் தாம் வகித்துவந்த பணிகளின்றும் ஓய்வு பெற்ருர். கல்லூரி நிர்வாகம் மேலும் சில ஆண்டுகளுக்கு அவருடைய சேவையை வேண்டியபோதும், அவர் தமது ஓய்வுக் காலத் தொழிலாக அச்சகம் ஒன்றை நிறுவி, வடமொழி, தெலுங்கு நூல்களை அச்சிட்டு வெளியிட விரும்பியதால் கல்லூரி நிர்வாகம் அளித்த வாய்ப்பினை ஏற்க மறுத்தார். இவர் பணம் சேமித்து வந்திருந்த 'அர்போத் நாட்' வங்கி நொடித்துவிட்ட காரணமாக ரூ. 3000ஐ இழந்துவிட்டார். இன்றேல் இவர் முன்னதாகவே ஓய்வு பெற்றிருப்பார். அவர் ஓய்வு பெற்ற பின்னரும் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருத — தெலுங்கு, மற்றும் தத்துவப் பாடக் குழுக்களில் அங்கம் வகித்தும் இப் பாடத் தேர்வுகளின் தேர்வாளராக (Examiner) இருந்தும் பெருந் தொண்டாற்றியிருக்கிருர். இவர் தெலுங்கு மொழிக் கல்வியில் கண்டிப்பான நடைமுறைகளைப் பின்பற்றி அம்மொழிக் கல்வி நிலையின் தரத்தைக் காப்பாற்ற வேண்டும்; பிற செல்வாக்குக் களுக்கு இடமளித்தல் கூடாது என்று பல்கலைக் கழகத்திற்குப் பரிந்துரை செய்தார். இன்றளவும் அவருடைய கருத்துரையைக் கவனத்திற் கொண்டு, சென்னைப் பல்கலைக் கழகம் சீரிய தொண்

டாற்றி வருகிறது. அவர் தெலுங்குப் பட்டப்படிப்பிலும் இண்டர் மீடியட் கல்வியிலும் தகுதி அடிப்படையிலான தேர்வு முறையைக் கொண்டு வந்ததோடு பல சான்றிதழ்த் தேர்வுக் கல்வித் துறைகளையும் உருவாக்கித் தந்தார். அவர் ஓர் ஆண்டில் தமிழ் மொழித் தேர்வுக்குக்கூட, தேர்வாளராக இருந்திருக்கிறார் என்பது நமக்கு வியப்பூட்டுவதாகும். ஆனால் அவர் தெலுங்கு மற்றும் வடமொழித் துறைகளுக்காகப் பின்னர் அப்பணியை விட்டுவிட்டதாக நாமறிகிறோம். இவ்வாறான இவருடைய சாதனைகளுக்கிடையிலும் நாம் ஒன்றை நினைத்துப் பெரிதும் வியக்கிறோம். அஃதாவது இவ்வளவுக்கும் அவர் தமது பி.ஏ. பட்டப் படிப்பைக் கூட முடித்திருக்கவில்லை என்பதேயாம். 1887ல் இப்பட்டப்படிப்புத் தேர்வு எழுதி, சில தாள்களில் தேர்வு பெற்றதோடு சரி; பின்னர் எஞ்சிய பகுதிகளை எழுதித் தேர்வுபெற அவருக்கு நேரம் கிடைக்கவேயில்லை.

சமஸ்கிருதப் பேராசிரியராக இருந்தமையால் அவர் தலை சிறந்த சமஸ்கிருதப் பேரறிஞர்கள் பலருடனும் நல்லுறவு கொண்டிருந்தார். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் மாநிலக் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் டி. எம். சேஷகிரி சாஸ்திரியார் ஆவர்.

# 5. தொடக்க கால இலக்கியப் பணிகள்

வேங்கடராய சாஸ்திரிகளுடைய இலக்கியப் பணிகள் அவர் சென்னைக்குக் குடியேறியவுடனேயே தொடங்கிவிட்டன எனலாம்; முன்பு அவர் இராஜமுந்திரியிலிருந்தபோதே வீரேசலிங்கம் பந்துலு அவர்களுடைய கருத்துக்களுக்கு எதிராகக் கருத்துப் போர் தொடங்கியவர்; பின்னர் திரு. பந்துலு அவர்களும் சென்னைக்கு வந்து சேர்ந்தவுடன் மீண்டும் அப் போர் புதுப்பிக்கப்பட்டு மிகக் கடுமையான கருத்து மோதல் நடந்தது. இந்நிகழ்ச்சிகள் முந்தைய அத்தியாயத்திலேயே தெளிவாகப் பேசப்பட்டிருக்கின்றன. அவர் சென்னை முத்தியாலுப்பேட்டை ஆங்கிலமொழி நடுத்தரப் பள்ளியின் தலைமையாசிரியராயிருந்தபோதே, 1883-ல் "ஜனவிநோதினி" என்ற தெலுங்குப் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை அவருடைய முன்னாள் ஆசிரியரான திரு. சடலவட சீத்தாராம சாஸ்திரி அவர்களிடமிருந்து ஏற்றுக்கொண்டார். இப் பத்திரிகை, மாணவர்களைக் கவரத்தக்க வகையில் எளிய உரை நடையிலமைந்த கதைகளைக் கொண்ட ஒரு திங்களிதழாகும்; ஒரே சமயத்தில் மூன்று அல்லது நான்கு தென்னிந்திய மொழிகளில் அவ்விதழ் வெளிவந்து கொண்டிருந்தது. பிரதாப ருத்ரீயம் என்று பின்பு நாடகமாக்கப்பட்ட பிரதாபருத்திரன் கதையைத் தம்முடைய திங்களிதழில்தான் முதன்முதலாக 1883-ல் வேங்கடராய சாஸ்திரிகள் வெளியிட்டார்.

தம்முடைய சிறு சேமிப்புத் தொகைகளைக் கொண்டு நூல்களை வாங்கி, தமது இல்லத்திலேயே ஒரு மிகச் சிறந்த நூலகத்தை நிறுவிக் கொண்டார்; அதில் நாள்தோறும் ஏறத்தாழ 18 மணி நேரம் கடுமையாக உழைத்தார். அவர் பலவழிகளிலும் மிகுந்த செயல் திறமையுடன் விளங்கினார். ஒவ்வொரு நாளும், விடிவதற்கு வெகு நேரத்திற்கு முன்பே படுக்கையிலிருந்து எழுந்து "கதா சரித் சாகரம்" என்ற வடமொழி நூலிலிருந்து ஐந்தாறு பக்கங்களை மிக விரைவாகத் தெலுங்கில் மொழி பெயர்த்து வந்தார்; இப்பணி பொழுது புலரும் முன்பே நிகழ்வுறுதல் வழக்கம். யாராவது நண்பரைக் கொண்டு மூலநூலைப் படிக்கச் செய்வார்; அவர் படிப்பதைக் கேட்டுக் கொண்டே தெலுங்கு மொழிபெயர்ப்பை எழுதி விடுவார்; இஃதன்றி ஒரு முறை கூட அவர் மூலநூலை நேரிடையாகப் பார்த்து மொழிபெயர்ப்பு செய்தவரல்லர்.

படைப்பாற்றலும் மொழிபெயர்க்கும் திறமும் மிக்க அவர் மூலநூலைப் படிக்கின்ற நண்பர் அதனை முடிக்கும்பொழுதே தமது மொழிபெயர்ப்பையும் எழுதி முடித்துவிடும் விரைவான ஆற்றல் கண்டு நண்பர்கள் பெரிதும் வியப்பதுண்டு. இந்த மொழிபெயர்ப்பு முதலில் ஜனவினோதினி இதழில் வெளியானது; பின்னர்த் தனி நூலாகவும் வெளியிடப்பட்டது. அவர் காலத்தைப் பெரிதும் போற்றிப் பயன்படுத்தி வந்தார்: செய்கின்ற பணியில் மாறுதல் செய்துகொள்வதைத் தவிர வேறு ஓய்வையே அவர் நாடியதில்லை. அவருடைய அறைச் சுவர்களில் "காலம் விலைமதிப்பற்றது", "என்னுடைய காலத்தை மிச்சப்படுத்து", "புத்தி கர்மானுசாரணி" என்ற சொற்றொடர்கள் எழுதி வைக்கப்பட்டிருந்ததாகத் திரு. ஓங்கோலு வேங்கட்டரங்கையா அவர்கள் மூலமாக அறிந்திருக்கிறேன்.

1886ல் யாப்பிலக்கணம் கற்போருக்கு உதவியாக இருக்கும் பொருட்டு ஒரு சிறிய கையடக்கமான நூலை ஆங்கில விளக்கவுரையுடன் "பிராக்ரியா - சந்தசு "(Prakriya Chandassu) என்ற பெயரில் எழுதி வெளியிட்டார். பின்னர் இதே நூலை ஆங்கில விளக்கவுரைகளை அகற்றி, மீண்டும் விரிவாக்கி எழுதினார்; அதனை அவருடைய மறைவுக்குப் பிறகு ஓராண்டு கழித்து 1930ல் நான் வெளியிட்டேன். அதே 1886ஆம் ஆண்டிலேயே 'அலங்கார சாரசங்கிரகம்" (Alankara Sarasangraham) என்ற நூலைப் பதவுரையுடன் கையடக்க நூல் வடிவில் வெளியிட்டார்; தெலுங்கில் சொல்லணி பற்றிய இந்நூல் குறிப்பாக மாணவர்களுக்கும் பொதுவாக அனைவருக்குமே பயன் விளைக்கத் தக்க வகையில் அமைந்திருந்தது. மேலும் வாசகர்களுக்காக அவர் வடமொழி உரைநடை நூல்களான "போஜ சரித்திரம்", "விக்ரமார்க்க சரித்திரம்" ஆகிய நூல்களை மொழிபெயர்ப்புடனும் விளக்கவுரையுடனும் கையடக்க நூல் வடிவில் வெளியிட்டார். இத்தகைய நூல்கள் பலவற்றை வெளியிடவேண்டும் என்ற தணியாத ஆவலினால் அவர் 1890ல் ஓர் அச்சகத்தை "ஜோதிஷ்மதி (Jyotismathi) என்ற பெயரில் தமது இல்லத்திலேயே நிறுவினார்; 1891ல் இவ்வச்சகத்தின் வாயிலாகத் தம்முடைய 'கதாசரித் – சாகர' மொழிபெயர்ப்பு முழுவதையும் வேங்கடகிரி மகாராஜா திரு. கோபாலகிருஷ்ண யச்சேந்திரர் அவர்களுடைய நிதி உதவியுடன் அச்சிட்டு நூல் வடிவில் வெளியிட்டார். ஹர்ஷர் வடமொழியில் எழுதிய "நாகநந்தம்' என்ற வடமொழி நாடகத்தையும் தெலுங்கில் மொழி பெயர்த்து அதே ஆண்டில் வெளியிட்டார். ஆனால் அவருடைய அச்சகம் அவருடைய இலக்கியப் பணிகளுக்கு ஏற்றதாக இல்லையென்ற

காரணத்தால் அவர் அச்சகத்தை விற்ற பின்பு இந்த நூல் வேறு அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

காளிதாசருடைய "அபிக்ஞான சாகுந்தலம்" என்ற வடமொழி நாடகத்தைச் சாஸ்திரியார் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் மாணவர்களுக்குப் பாடமாகப் போதித்ததுடன் பல ஆண்டுகள் மாணவர்களால் அது நடித்தும் காட்டப் பட்டது. பின்பு அதன்பால் மிக ஈடுபாடு கொண்டு அதனைத் தெலுங்கில் 1886ல் மொழி பெயர்த்தார். பின்னர் 1897ல் தமது படைப்பாற்றலுக்குச் சான்றாகப் பிரதாபருத்ரீயம் என்ற தெலுங்கு நாடகத்தைச் சுயமாகப் படைத்தார்; இந்நாடகம் தெலுங்கு உலகில் பெரும் திருப்பத்தையும் வரவேற்பையும் கண்டது. "தண்டி" என்ற அறிஞர் பெருமகனைப் போலவே சாஸ்திரியாரும் மிகச் சிறந்த திறனாய்வுத் திறன் மிக்கவர்; இதற்குச் சான்றாக, அவருடைய சமகால இலக்கியப் படைப்புகள் குறித்து அவர் வெளியிட்ட துண்டு வெளியீடு களையும் பத்திரிகைகளில் எழுதிய திறனாய்வுக் கட்டுரை களையும் நாம் மிகவாகக் காணலாம். கி. பி. 14ஆம் நூற்றாண்டில் "ஜக்கன்ன" (Jakkannā) என்ற தெலுங்குக் கவிஞர் எழுதிய "விக்ரமார்க்க சரிதம்" என்ற நூலைச் சாஸ்திரிகளுடைய காலத்தில் சில தெலுங்கு மொழி ஆசிரியர்கள் வெளியிட்டி ருந்தனர். இவ்வெளியீடுகள் குறித்து ஒரு மிகச் சிறந்த திறனாய்வுக் கட்டுரையினைச் சாஸ்திரியார், நெல்லூர் திரு. புண்ட்ல இராமகிருஷ்ணய்யாவின் தெலுங்கு மாதப் பத்திரிகை யான 'அமுத்ரித கிரந்த சிந்தாமணி' (Amudrita Grantha Chintāmaṇi) என்ற இதழில் வெளியிட்டார். இவ்வாய்வுக் கட்டுரையினைப் பின்னர் அவர் 'பிரதம கிங்கினி' (Prathama kinkiṇi) என்ற பெயரில் தனி நூலாக வெளியிட்டார். இதற்குப் (பிரதம கிங்கினி) பொருள் அவருடைய "சாரதா காஞ்சிகா" (Sāradā kāñchikā) என்ற நூலின் 'முதல் மணி' என்பதாகும். "சாரதா காஞ்சிகா" என்பதற்குக் கல்வித் தெய்வத்திற்கு அவர் அணிவித்த "தங்க ஒட்டியாணம்" (Golden belt) என்பது பொருளாகும்; இவ்வகையில் அவர் மேலும் பல சிறந்த திறனாய்வுப் பணிகளை ஆற்றினார். அதே ஆண்டிலேயே அவர் தம்முடைய மிகப் புகழ்பெற்ற திறனாய்வு நூல் ஒன்றை வெளி யிட்டார்; அந்நூல் திறனாய்வுத் துறையில் ஒரு புரட்சியை விளைவித்தது. அவருடைய வாதங்களை மறுத்திடத் தெலுங்கு ஆராய்ச்சி அறிஞர்கள் அரை நூற்றாண்டுக்கும் மேலாக முனைந்து ஆதாரங்களைத் தேட வேண்டிய நிலை உண்டாகியது. இதுவே அவருடைய "சாரதா காஞ்சிகா" வின் இரண்டாவது கிங்கினி"யாயிற்று; 300 பக்கங்களுக்கும் அதிகமாக இருந்த

இந்நூலில், "ஜெயதேவ"ரின் "பிரசன்ன ராகவ நாடகம்" என்ற நூலைச் சென்னை மாநிலக் கல்லூரியின் தெலுங்குப் பேராசிரியர் திரு. "கொக்கொண்ட வேங்கடரத்னம் பந்துலு" அவர்கள் மொழிபெயர்த்திருந்த முறை முற்றிலும் பயனற்றது என்று குற்றம் சாட்டி, மூலநூலின் மேன்மையினை எடுத்துக் காட்டியுள்ளார்.

இதுகாறும் நாம் கண்ட மேற்குறித்த நூல்களைச் சாஸ்திரியார் வெளியிட்டதன் வாயிலாக ஆந்திராவில் ஒரு பலத்த எதிர்ப்புப் புயல் கிளம்பியது. ஆயினும் இதன் விளைவாக ஆந்திர மொழியறிஞர்கள்பால் ஒரு எழுச்சியும் மாற்றமும் தோன்றலாயின. அதனுல் தெலுங்கு இலக்கியத்தில் மட்டுமன்றி திரு. சாஸ்திரி அவர்களின் வாழ்விலும் ஒரு பெரிய திருப்புமுனை ஏற்பட்டதெனலாம். சாஸ்திரங்களுக்குத் தவருன பொருள் கூறுவதும், இலக்கியத் திறனுய்வுகளைத் தவருன கண்ணேட்டத்தில் செய்வதுமான சில சந்தர்ப்பவாதிகளின் தவருன போக்குகளையும், புகழுக்காக அவர்கள் கையாளும் கீழ்த்தரமான செயல்களையும் அவர்கள் என்றுமே சகித்துக் கொண்டதில்லை. சமூக மாற்றங்களுக்கோ, இலக்கியப் புதுமைகளுக்கோ, மற்ற வேறெந்தச் சீர்த்திருத்தங்களுக்கோ அவர் எதிரியல்ல; ஆனுல் இப்பணிகளுக்காக மூல நூலின் உண்மையான கருத்துகளைத் தமது கூற்றுக்கேற்பத் திரித்துக் காட்டுவதை அவர் முற்றிலுமாக எதிர்த்தார். அவர் ஒரு சிறந்த சமஸ்கிருத மொழியாளராக இருந்தமையால் பழங்காலச் சான்ருேரின் சிறந்த நூல்களுக்கு முறைகேடான அரைகுறை மொழி பெயர்ப்புகள் உருவாவதை அவரால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. உரைநடை, நாடகம், கவிதை மற்றும் திறனுய்வுத் துறைகளில் அவர் சில புதிய உத்திகளைக் கையாண்டார் என்பது மறுக்க முடியாத உண்மை; பழைய பாதையினின்று விலகி மிக எச்சரிக்கையோடு புதிய இலக்கியப் பாதையில் நடந்த அவர் பல புதுமைகளைப் படைத்தார். ஆனுல் பழமைக்கும், புதுமைக்கும் இடையே இருந்த தொடர்பு முற்றிலுமாக அறுபடுவதை அவர் விரும்பவில்லை. புதிய இலக்கியங்களின் மகத்தான சாதனைகள் அனைத்துமே பழைய இலக்கியம் மற்றும் பண்பாட்டினை அடித்தளமாகக் கொண்டே ஓங்கி உயர வேண்டும் என்று அவர் விரும்பினுர்.

எந்த ஒரு புதிய படைப்பும் கண்டுபிடிக்கப்பட அடிப்படைக் காரணமாக அமைவது புதிதாக உருவாகும் தேவைகளே; இதற்கொப்பவே புதுமையான தெலுங்கு உரைநடை எளிய, இனிய, பேச்சுமொழித் தொடர்பின் தேவை

கருதியே உருவாயிற்றெனலாம்; இவ்வாறன்றித் தெலுங்கு உரைநடை எந்தத் தனி மனிதரின் முயற்சியாலும் படைக்கப் பட்டதென்று கூற இயலாது. மேலே நாடுகளைப் பார்த்து மாறிவரும் நமது நாகரிக வாழ்க்கைக்கேற்ப, மேற்கத்திய இலக்கியங்களுக்கொத்த புதிய இலக்கியங்களைப் படைத்திட வேண்டிய தேவை நம் எழுத்தாளர்களுக்கு நேர்ந்தது. மேலும் சிறுகதை, நாவல், நாடகம் மற்றும் திறனாய்வுத் துறைகள் மேலே நாடுகளுடன் நமது உறவின் பயனாக விளைந்தவையே யன்றித் தனிப்பட்ட முறையில் நமது பழைய இலக்கியங்களி னின்றும் வளர்ந்து வந்த புதிய வளர்ச்சி என்று கூறமுடியாது.

கி. பி. 17ஆம் நூற்றாண்டில் தஞ்சை, மதுரை, புதுக்கோட்டை ஆகிய அரசுகளில் காலத்தில் தெலுங்கு உரைநடை மிகவும் எளிமைப் படுத்தப்பட்டது. அப்பொழுது பழைய இலக்கிய மொழி பழைய சம்பிரதாயங்களுக்கும் இசைத்துறைக்கும் மட்டுமே பயன்படுத்தப்பெற்றது. பல கதைகளும் வரலாற்று நிகழ்ச்சிகளும்கூட பேச்சுமொழியிலேயே இக்காலத்தில் எழுதப் பட்டிருக்கின்றன; இவை யாவும் புத்தக மொழியை விடவும் எளியனவாக உள்ளன. அனுஸ்வாரம் போன்ற தொன்மை வழக்குகளையும் ஏற்றுக்கொண்ட தெற்கத்திய உரைநடை 19 ஆம் நூற்றாண்டில் 'சின்னய சூரி' உரைநடைக்கு முன்னோடி யாகக் காணப்படுகின்றது. பின்பு ஆந்திரத்தில் பெருமளவு மாறுதல்கள் ஏற்படவே தெற்கத்திய உரைநடைக்கும் ஆந்திர உரைநடைக்கும் இடையே மகத்தான வேறுபாடுகள் உண் டாயின. தெலுங்குப் பண்டிதர்களே புதிய உரைநடையின் கர்த்தாக்களாயினர். முன்னோடியாகத் திகழ்ந்தவர் சின்னய சூரி அவர்களே. அவர்களில் பலரும் தெலுங்கு உரைநடையை மேலும் எளிமைப்படுத்திப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் பாடநூல்களாகப் பல நூல்களை எழுதினர்; ஆயினும் அவர்கள் ஆந்திரம் முழுமைக்குமான ஒரு பொதுவான தரத்திலேயே உரைநடையை அமைத்தனர். திரு. B. சீதாராமாச்சாரியா போன்றவர்கள் "சந்தி" முறையை விலக்கி, சிறு சிறு சொற் றொடர்களையே அமைத்து எழுதினர்; இந்தப் போக்கு வீரேசலிங்கம் பந்துலு, வெங்கடராய சாஸ்திரிகள் காலத்திற்கு வெகுகாலம் முன்பே தோன்றி வந்திருக்கக் காண்கிறோம். குருஜடா (Gurujada) அவர்களைப் போல் முற்றிலும் புதுமை நெறியில் புகத் துணிவில்லா விட்டாலும், கோக்கொண்ட வெங்கடரத்னம் பந்துலு அவர்களைப் போல் மாற்ற முடியாத பழைமை விரும்பியாகவும் இருக்க விரும்பாத வீரேசலிங்கம் பந்துலு அவர்கள், சின்னயாவின் உரைநடையினின்றும் சற்றே விலகி மேலும் எளியதோர் உரைநடையைப் புகுத்தினர்;

இது பிற்கால எழுத்தாளர்களிடையேயும் நாளிதழ் துறையிலும் நல்ல வரவேற்பைப் பெற்றது.

அதே காலத்தில் வாழ்ந்த திரு. வேங்கடராம சாஸ்திரிகள் அதே போன்ற எளிய ஆனல் அதினினும் சிறந்த கவிதைப் பாங்கான உரைநடையில் பல பொருள்களைப் பற்றியும் எழுதினார். மிகப் பரந்த அளவில் அவர், தாம் கூறப் போந்த பொருளுக்கேற்பப் பேச்சு மொழிப் பாங்கிலும், நாடகப் பாங்கிலும், நேரடிக் கூற்று முறையிலும் பலவிதமான நடைகளைக் கையாண்டார். அவருடைய கதாசரித் சாகர உரைநடை மூல நூலைப் போன்றே மிக இனிய கவிதை மணம் கமழும் படைப்பாகும். இந்த மூல நூல் கவிதை நடையில் இருப்பதைக் கண்ட அவர், பதினெட்டு இலம்பகங்களை அல்லது காண்டங்களைக் கொண்ட அப்பெரிய நூலை உரைநடையில் மொழிபெயர்க்க வேண்டியதன் இன்றியமையாமையினை உணர்ந்து மிகச் சிறந்த உரைநடை இலக்கியத்தை ஆக்கித் தந்தார். ஒரு மொழி பெயர்ப்பாளர் என்ற முறையில் அவர் விரும்பியதெல்லாம், மூல நூலின் தரம் கெடாத வகையில் அது கூறும் முழு உண்மைகளையும், அதனுடைய சுவையும், கூறும் முறையும் கெடாத வகையில், அதிலுள்ள குறிப்பிடத்தக்க பாங்குகள் புலப்படும் முறையில் மொழி பெயர்ப்பு நூலும் அமைந்திட வேண்டுமென்பதே. இவ்வாறு மூலநூலின் முழுப் பிரதிபலிப்பாக மொழி பெயர்ப்பு அமையவேண்டுமெனினும் அவர் அதனையும் ஒரு மூல நூலே போன்று இனிமையும், சுவையும்படப் படைத்திட வல்லவராயிருந்தார். தற்காலப் பள்ளி மாணவர்களுக்கு இது சற்றுக் கடினமான உரைநடையாகத் தோன்றிடினும் இது தோன்றிய காலத்துப் (1891) பிற இலக்கியங்களுக்கு ஒரு புதிய மாற்றமாகவும் சாதனையாகவும் அமைந்திருந்தது. சமஸ்கிருத மூலநூலையும் படிக்க விரும்புவோருக்கு இம்மொழி பெயர்ப்பு, மூலநூலின் கருத்துகளுக்குச் சிறிதும் விலகாமல், வரிக்கு வரி, சொல்லுக்குச்சொல் அப்படியே பொருள் விளங்கிடும் வகையில் அமைந்திருப்பதால் பெரிதும் உறுதுணையாக இருக்கக் காணலாம்.

ஒரு சிறந்த உரைநடையாசிரியரான வேங்கடராய சாஸ்திரிகள் தமது திறமையினை நாடகத்துறையிலும் வெகு சிறப்பாகப் பதித்துள்ளார். தெலுங்கில் மேடை நாடகங்கள் தோன்றிய காலம் கி.பி.19 ஆம் நூற்றுண்டேயாம். அதற்கு முன்பு இடைக் காலத்தில் யக்ஷகானம் போன்ற தெருக்கூத்துக் கலையே சிறப்பிடம் பெற்றிருந்தது. வடமொழி நாடகங்களே மிகுந்திருந்தமையால் வட்டாரமொழியில் நாடகங்கள் மிகுதியாகத் தோன்ற

வில்லை. இத்துறையில் ஏற்பட்ட ஆர்வமும் வேகமும் எண்ணற்ற மொழி பெயர்ப்பு எழுத்தாளர்களை உருவாக்கியது. ஆனல் அவர்களில் பலர் நாடகத்தின் முக்கிய நோக்கத்தையும் சமஸ்கிருத மேடையின் தத்துவத்தையும் புறக்கணித்தனர். இக்காலத்தில் உரைநடை மேலும் எளிமைப்படுத்தப்பட்டது. செய்யுள் நடை மேலும் எளிமையானதாகவும், நேரடியாகப் பொருள் தரும் தெளிவான அமைப்புடையதாகவும் விளங்கியது. உரைநடை, செய்யுள் ஆகிய இரு துறைகளிலுமே ஒரு பொதுவான மொழிநடையே எழுத்தாளர்களால் பயன்படுத்தப் பட்ட ஒரு குறைபாடாகும். ஒரு நாடகத்தில் வரும் பல பாத்திரங்களுக்கிடையேயும் எழுகின்ற பேச்சு, பாடல் முதலிய வெவ்வேறு வகைக்கும் வேறுபாடு காணமுடியாத வகையிலே ஒரே மாதிரியான மொழிநடையையே அவர்கள் பயன்படுத்தினர். அரசனயிருந்தாலும் சரி, அவன் சேவகனயிருந்தாலும் சரி, கற்ற சான்றோராயினும், கல்லாத நாட்டுப்புறத்தானயிருப் பினும், ஆணயிருப்பினும் பெண்ணயிருப்பினும், இளையவராயினும்* முதியவராயினும் நாடகத்தில் ஒரே மாதிரியான இலக்கணம் வழுவாத உயரிய மொழிநடையிலேயே பேசிக் கொள்வர். ஒருவேளை, இந்நாடக ஆசிரியர்கள் தம்முடைய நாடகங்கள் மேடையேறுமென்று ஒருபோதும் எண்ணியதில்லை போலும். ஆனல் வேங்கடராய சாஸ்திரிகள் நாடகங்கள் வகுப்பறைக்காக மட்டுமின்றி மேடைகளுக்காகவும் படைக்கப் படுவன என்ற எண்ணம் கொண்டவர்; இதனை யொட்டியே அவரால் மொழிபெயர்க்கப்பட்ட நாகாநந்தம், சாகுந்தலம் ஆகியவற்றுக்குப் பரத நாட்டிய சாஸ்திரத்தில் பிராகிருத முறை பின்பற்றப்பட்டு ஆந்திரத்தில் மிக எளிய பேச்சு நடையிலேயே அமைக்கப்பெற்றது. அவருடைய நாடகங்களில் கற்றறிந்த சான்றோராக வரும் பாத்திரங்கள் உயரிய இலக்கிய நடையிலும், கல்லாத பிற சிறு பாத்திரங்கள் நாம் வீட்டில் பேசுகின்ற சாதாரண பேச்சு மொழியிலும் உரையாடுமாறு அமைக்கப் பட்டிருக்கக் காணலாம். இவ்வாருன சிறந்த அமைப்பு முறையை அதனைக் கற்கின்ற அனைவருமே பெரிதும் பாராட்டுவர். கல்வியில் சிறந்த சான்றோர் அனைவரும் இதற்காகச் சாஸ்திரியாரைப் பெரிதும் பாராட்டியுள்ளனர். மேலும் பல அறிஞர்கள் பேச்சு மொழிப் படைப்புகளில் தம்முடைய அணுகுமுறைகளுக்கும் அப்பால் ஒரு சிறந்த திறமையான சாதனையாக இவருடைய எழுத்துக்களைக் கருதினர். குருஜடா அப்பாராவ் அவர்கள் தம்முடைய கன்யாசுல்கம் நூலின் இரண்டாவது பதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ள சில கருத்துகளை

அவை வேறு காரணத்திற்காகக் கூறப்பட்டதெனினும், இங்கு நாம் குறிப்பிடுவது சாலவும் பொருந்தும்.

தெலுங்குப் பேச்சு மொழியின் மென்மையும், பொருள் விளக்கி நிற்கும் தன்மையும் பிற மொழியாளர்களையும் கவர்ந்திருக்கும் சிறப்போடு அமைந்திருக்கும்போது நமது நவீன எழுத்தாளர்கள் ஏன்தான் அவற்றைக் காண மறுக்கிறார்களோ எனக்குத் தெரியவில்லை. இப்பொழுது மிகச் சிறந்த உரைநடை மக்கள் பேசுகின்ற பேச்சு மொழிதான். தெலுங்கு உரைநடையின் தோற்றமும், வளர்ச்சியும் அரசர்கள் ஆதரவினாலோ அயல் நாட்டு இலக்கியங்களின் உதவியோடோ ஏற்பட்டதல்ல. மாறாகச் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் ஆங்கிலேயர் ஒருவர் வட்டார வரலாற்று நிகழ்ச்சிகளைச் சிறுசிறு கட்டுரைகளாகத் தாய்மொழியில் வெளியிட்ட ஆர்வமிக்க தொண்டால் பெரிதும் வளர்ச்சி பெற்றது; திரு. மெக்கன்ஸி பிரபுவின் வெளியீடுகள் நிகரற்ற தகுதியுடையவையாக அமைந்துள்ளதோடு அவற்றில் பல அழகிய நடையமைப்பாலும், இலக்கியப் பாங்கினாலும் மிகச் சிறந்த பல இலக்கியங்களையும் மிஞ்சும் பான்மையுடையனவாயுள்ளன; மேலும் அவை பல தெலுங்கு இலக்கியங்களையும்விட, அக்கால மக்களின் எண்ணங்களையும் அக்கால நிலைமைகளையும் அப்படியே பிரதிபலிக்கக் கூடிய விதத்தில் அமைந்திருக்கக் காண்கிறோம். திரு. இராவ்பகதூர் வீரேசலிங்கம் பந்துலு அவர்களுடைய படைப்புகளுடைய திரட்டுகளின் முதல் பகுதி தெலுங்கு இலக்கிய உலகிற்குப் பெருந்தொண்டு ஆற்றியுள்ளது; இந்நூலில் அவர் ஆங்கில நாடகங்களைத் தழுவி இந்திய வாழ்வின் மடமைகளை எடுத்துக்காட்டி எழுதியுள்ளார்; தூய்மையான தாய்மொழியில் எழுதப்பட்ட அவருடைய முதல் நூலான இத்தொகுதி அவருடைய சிறந்த அறிவாற்றலை விளக்கி நிற்பதோடு தெலுங்கு இலக்கிய உலகில் ஒரு பெரும் மாற்றத்தை உருவாக்கிய தலை சிறந்த நூலாகவும் விளங்குகிறது. நாடகங்களில் வடமொழி மரபுகளைக் காட்டிடத்தக்க வகையில் தாய்மொழியினையே நன்கு பயன்படுத்தும்போது அதனால் விளையும் பயன் மிகவும் அதிகம்; சான்றாக என் நண்பர் திரு. வேதம் வேங்கடராய சாஸ்திரிகளுடைய பிரதாபருத்ரீயம் நாடகத்தின் அழகு, அந்த நூலின் கண் அமைந்துள்ள தாய்மொழியாலான உரையாடல்களாலேயே எனலாம். என்னுடைய நாடகமே பேச்சு மொழியில் அமைந்த முதல் படைப்பு; அதனாலேயே அது தோல்வியடையவில்லை என்பது உறுதி. ஆனால் எழுத்தாளர்களுடைய படைப்புகள் வெற்றி

யடைவதும் தோல்வியடைவதும் மொழியின் திறமையைப் பொறுத்தது எனக் கூற முடியாது.

நாடகம் எழுதுவோருக்குச் சொந்த நாட்டு மொழியே அவர்களுடைய மிகச் சிறந்த படைப்பாற்றல் வெளிப்படும் வகையில் நாடகம் படைத்துத் தரும் மொழியாகும் என்ற உண்மை பிரதாபருத்ரீயம் நாடகத்தில் மூலமாக உறுதிப் பட்டது. மரபாக வழங்கி வந்த ஒரு சிறிய கதையை எடுத்துக் கொண்ட அவர் அதனை வியக்கத்தக்க வகையில் மிக விரி வாக்கி எண்ணற்ற நிகழ்ச்சிகளையும் பல பாத்திரங்களையும் உருவாக்கி, பத்துக் காட்சிகளைக் கொண்ட ஒரு பெரிய நாட கத்தை உருவாக்கினர்.

கி. பி. 1323ல் தில்லியை ஆண்ட ஜியாவுத்தீன் துக்ளக் குடைய வலிமை பொருந்திய பெரும்படையிடம் வாரங்கல் வீழ்ச்சியுற்றபோது அதன் மன்னன் பிரதாபருத்ரன் கைதியாகப் பிடிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. இக்காலத்தில்தான் தென் மாநிலங்கள் ஒன்றன்பின் ஒன்ருக முஸ்லீம்களுடைய தாக்குதலினல் வீழ்ச்சியுற்றுக் கொண்டிருந்தன. அதன்பின் பிரதாபருத்ரன் அவனுடைய நாட்டிற்குத் திரும்பவேயில்லை; ஆனல் ஆந்திராவின் வரலாற்றுக் குறிப்புகள் வேறுவிதமாகக் கூறுகின்றன. பிரதாபருத்திரன் தில்லிக்குக் கொண்டு செல்லப் படும் வழியிலேயே கோதாவரியின் கரையில் உயிர் துறந்த தாக ஒரு வரலாறு குறிப்பிடுகிறது. ஆனல் மற்ருெரு செய்தி அவனைச் சிறையினின்றும் "கம்மா" இனத்துத் தலைவர்களும் பிற இனத்தவரும் மீட்டனர் என்றும், ஆனல் தான் போரில் தோற்றதையும், சிறிது காலமேயெனினும் மாற்ருனிடம் சிறைப் பட்டதையும் எண்ணிப் பெரிதும் வேதனையுற்ற பிரதாபருத்திரன் மானம் இழந்தபின் வாழவிரும்பாது கோதாவரிக் கரையில் தற்கொலை செய்துகொண்டான் என்றும் குறிப்பிடுகிறது. யுகேந்தரா என்ற பிராமண அமைச்சரைப் பற்றிய தகவல் ஏதும் அவர் காலத்தியவர்கள் வாயிலாகக் கிடைக்கவில்லை. ஆயினும் காகதீய காலத்துக் கவிஞர்களாகிய மஞ்சன, மாரன போன்றவர்கள் யுகாந்தரனை உதயணன் என்ற மாமன்னனின் அமைச்சன் என்று குறிப்பிடக் காணலாம். ஆனல் நாம் வியக்கத்தக்க அளவிற்கு, மெக்கன்ஸி பிரபு சேகரித்த வரலாற்றுக் குறிப்புகளினின்றும் ஒரு சுவையான செய்தி நமக்குக் கிடைக்கிறது. அஃதாவது, மன்னன் பிரதாபருத்ரன் தில்லிச் சிறையில் இருந்தபோது அமைச்சன் யுகேந்தரன் ஒரு பைத்தியக்காரன் போல் மாறுவேடமிட்டுக் கொண்டும், தன் ஆட்களையும் படைவீரர்களையும் மாறுவேடத்தில் தில்லி

நகரைச் சுற்றிலும் பரவியிருக்கச் செய்தும், பல சூழ்ச்சிகள் செய்தும் தன் மன்னனைச் சிறையிலிருந்து விடுதலை செய்தான் என்ற செய்தியாகும். இந்தக் கதையைத் தன் தந்தையாரிட மிருந்து கேட்ட நம் சாஸ்திரியார் தம் புலமைத் திறத்தால் அதனை மிக விரிவாக்கி, குணமாறுபாடு கொண்ட, கொள்கை வேறுபாடு கொண்ட பாத்திரங்கள் பலவற்றைப் படைத்து, நல்லதோர் அரசியல் பின்னணி கொண்ட மிக அருமையான வரலாற்று நாடகமாக, வடமொழியின் முத்ரா ராட்சஸம் நாடகத்திற்கொத்த படைப்பினைப் படைத்தளித்தார். வாரங்க லிலும், தில்லியிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளாக நம் சாஸ்திரியார் படைத்துள்ள இந்நாடகத்தின் பல காட்சிகள் வாயிலாக, அவர் இந்து-முஸ்லீம் ஒற்றுமையைப் பெரிதும் வலியுறுத்திப் பேசிடக் காணலாம். இவ்வகையில் அவர் ஒரு மிகச் சிறந்த முன்னோடியாவார். இந்த நாடகம் முத்ரா ராட்சஸம் நூலைப் பிரதிபலிப்பதை விட 'பாஸர்' எழுதிய பிரதிக்ஞா யூகந்தராயண (Pratijnā-yaugandharāyana) நூலையே பெரும் அளவில் பிரதிபலித்துக் காட்டுகிறதெனலாம்; ஆனால் சாஸ்திரியாரின் நாடகத்தில் காதற்காட்சிகள் இல்லை.

தன் தந்தையிடமிருந்து கேட்ட கதையில் பல மாற்றங்களை நம் சாஸ்திரியார் செய்தார். போரில் தோற்றுக் கைதான மன்னன், இவருடைய நாடகத்தில் வேட்டைக்குச் சென்ற போது கைதியாக்கப் படுவதாகக் காட்டப்படுகிறது. நாள் முழுவதும் கடுமையாக வேட்டையாடிக் களைப்புற்ற பிரதாப ருத்ரன் கோதாவரிக் கரையில் ஒரு மரத்தடியே உறங்கிக் களைப்பாறியபோது முஸ்லீம் படைவீரர்கள் அவனைச் சிறை பிடித்துச் சென்றனர். ஆனால் உதயணன் இது போன்றே காட்டுக்கு வேட்டையாடச் சென்றபோது எண்ணற்ற எதிரி வீரர்களால் சூழப்பெற்று, போராடி, இறுதியில் எதிரிகளின் எண்ணிக்கை மிகுதியால் தோற்றுச் சிறைபட்டான். இவ்வாறு கூறுதல் கதைத் தலைவரின் வீரத்திற்குப் புகழ் சேர்ப்பதாக இல்லை எனக் கருதியே பிரதாபருத்ரன் உறங்கும்போது சிறை பிடிக்கப்பட்டதாக அமைக்கப்பட்டது. ஆயினும் இரு கதை களிலும், அவ்விரு மன்னர்களுமே பைத்தியமாக மாறுவேட மிட்ட தத்தமது அமைச்சர்களின் சூழ்ச்சியாலேயே மீட்கப் படுவதாகக் கூறப்படுவது ஒத்த நிகழ்ச்சியாகும். ஆனால் உதயணனின் எதிரி ஓர் இந்து; இன்னும் சொல்லப்போனால் பின்னாளில் அவன் நட்புக்குரியவனாகிறான்; பிரதாபனுடைய எதிரி பகைகொண்ட முஸ்லீம். பாஸரின் நாடகம் கண்டு பிடிக்கப்படுவதற்கு வெகுகாலம் முன்பே நம் சாஸ்திரியாருக்கு அதனை ஒத்த கருத்தும் அமைப்புமுடைய நாடகம் ஒன்றை

உருவாக்கத் தோன்றியது மிகவும் வியப்புக்குரிய நிகழ்ச்சியாகும். இஃது ஆந்திராவின் மரபு வழியான வரலாற்று அமைப்பால் விளைந்தது எனலாம். எனினும் உதயணன் கதை 'பிருகத்கதா'வின் மூலமாகவும் பிற வழிகளிலுமே தெரிய வந்தது. 1909ல் திரு. டி. கணபதி சாஸ்திரிகள் திருவனந்தபுரத்திலிருந்து பாஸர் எழுதியனவாக சில நாடகங்களைக் கண்டுபிடித்து அவற்றை 1913 ல் பதிப்பிக்கும் வரை சமஸ்கிருத இலக்கியத்தில் பாஸர் என்ற பெயரைத் தவிர வேறு செய்தி யேதுமில்லை. பாஸரின் நாடகம் மிகச் சிறியது; நம் சாஸ்திரியாரின் நாடகம் மிகப் பெரிய படைப்பாகும். கற்பனைத் திறம், கதை ஆக்கம், நாடகத்தின் முடிவமைப்பு ஆகியவற்றில் சாஸ்திரிகளின்முன் பாஸர் மிகச் சாதாரணமானவரே.

சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் 1898, செப்டம்பர் மலரில் பிரதாபருத்ரீயம் குறித்துக் கீழ்க்கண்டவாறு மதிப்புரை எழுதப்பட்டுள்ளது.

"அவர் தேர்ந்தெடுத்துள்ள பொருள் குறித்து நாம் அவரை பெரிதும் பாராட்டாமல் இருக்க முடியாது. மேலும் அவர் மேற்கொண்ட பணியினைச் செவ்வனே செய்து வெற்றி கண்டுள்ளதற்காகவும் அவரைப் பாராட்ட வேண்டும். பிரதாபருத்ரீயம் எழுந்ததன் காரணமாக, தென்னிந்தியாவில் ஒரு பெரிய இலக்கிய மேதை உருவாகிவிட்டதாக நம்மால் உறுதிபடக் கூறமுடியும். இந்த நாடகம் தெலுங்கு இலக்கியத்தில் ஒரு புதிய பாணியாக அமைந்துவிட்டது. வடமொழி இலக்கியங்களைத் தெலுங்கில் மொழிபெயர்த்ததன் வாயிலாக ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளராகவும், பல சிறந்த கட்டுரைகளைப் படைத்ததன் வாயிலாகத் தெலுங்கு உரைநடை மற்றும் கவிதைத் துறையில் பெயர் பெற்றவராகவும் விளங்கிய சாஸ்திரி அவர்களுக்கு இந்நாடகத்தினால் மேலும் மிகுந்த செல்வாக்கு ஏற்பட்டது. நாடகவியலை நன்கு கற்ற அவர் கற்ற புலமையோடு அமையாமல் தாம் கற்கின்ற வடமொழியில் சிறந்த நாடகங்களோடு அதனை ஒப்பிட்டுப் பார்த்து ஆய்வுகள் செய்வார். மேனாட்டு அறிஞர்களை ஒத்த நாடகவியல் புலமை மிக்கவர் அவர். அத்தகைய ஒரு புலமை சான்ற பெரியாரின் படைப்புகள் கற்றவர்களைத் தம்மால் என்றுமே ஈர்த்திடும் தன்மையாகவே இருந்திடும்".

இவ்வாறு ஒரு சகாப்தத்தையே உருவாக்கிய இந் நாடகத்தை இதன் ஆசிரியர் தம் புரவலராகிய வேங்கடகிரி மகாராஜாவுக்குக் காணிக்கையாக்கினார். சாஸ்திரியாரின் கதா சரித் சாகர நூலை வெளியிடப் பொருளுதவி செய்த

வேங்கடகிரி மகாராஜா அவருடைய பதிப்புக்களுக்கு அடிக்கடி பொருளுதவி செய்து வந்தார்.

இந்நூல் வெளியான அதே ஆண்டிலேயே (1897) திரு. குருஜடா அப்பாராவ் அவர்கள் தமது கன்யாசுல்கம் என்ற நூலை வெளியிட்டார். இந்நூல் முழுக்க முழுக்க விசாகப் பட்டினம் பகுதியில் பேசப்படும் பேச்சு மொழித் தெலுங்கி லேயே அமைக்கப்பட்டிருந்தது. ஒரு சமூகக் கதையான இந்நூலுக்கு இவ்வாறான பேச்சுமொழி மிகப் பொருத்த மாக அமைந்திருந்தது. இதற்குப் பத்து அல்லது இருபதாண்டு களுக்குப் பின்பு வந்த இலக்கிய ஆசிரியர்கள் அனைவரும் இந்நூல் தோன்றிய நாளிலிருந்தே வியவகாரிகா (பேச்சு மொழி) இலக்கிய இயக்கம் தோன்றியதெனக் கொண்டனர்; ஆனால் அந்நூல் தோன்றிய காலத்தவர் அதனை நாட்டு மொழியைப் பயன்படுத்தும் இயக்கத்தைப் பின்பற்றியுள்ள தாகவே கருதினர். நாம் முன்னரே குறிப்பிட்ட அமிர்த கிரந்த சிந்தாமணி என்ற அக்காலப் பத்திரிகை, இந்நூலைப் பற்றிப் பேசும்போது "இந்நூல் வேங்கடராய சாஸ்திரிகளின் கருத்துக் களைப் பின்பற்றியதே; அது மட்டுமின்றி இந்நூலாசிரியர், வியவகாரிகா (பேச்சுமொழி இலக்கிய) இயக்கம் பற்றிய எண் ணம் ஏதும் அன்று கொண்டிருக்கவில்லை" எனவும் குறிப் பிடுகிறது.

இந்த இடத்தில் தெலுங்குப் பத்திரிகைத் துறையைப் பற்றிச் சில செய்திகளைக் கூறுதல் பொருந்தும். இந்தக் கால கட்டத்தில்தான் தெலுங்கில் பத்திரிகைக் கலையும் இலக்கியத் திறனாய்வுக் கலையும் மிகவும் ஊக்கம் பெற்றன. பண்டிதர்கள் பலரும் தம்முடைய எண்ணங்களை வெளியிடவும், தம்முடைய இலக்கிய எதிரிகளைத் தாக்கவும், தம்மைத் தாக்குவோர்க்குத் தக்க பதிலளிக்கவுமாகத் தமக்கெனத் தனித்தனிப் பத்திரிகை களை நடத்தலாயினர். 1885ல் திரு. பூண்ட்ல இராமகிருஷ் ணய்யாவும் திருவடயார் வீரநாச்சியாவும் சேர்ந்து அமிர்த கிரந்த சிந்தாமணி என்ற திங்களிதழ் ஒன்றைத் தொடங்கினர்; இதற்கு, "பதிப்பிக்கப் பெறாத இலக்கியப் படைப்புக்களுக் காக நடத்தப்பெறும் பத்திரிகை மணி" எனப் பொருள் கொள்ளலாம். மேலும் இப்பத்திரிகை, பதிப்பிக்கப்பெறாத அரிய இலக்கியங்களைப் பதிப்பித்ததோடு, தெலுங்கு இலக்கிய வாணர்களின் இலக்கிய சாதனைகளுக்குரிய பொதுமன்றமாக வும் விளங்கியது. திருவாளர்கள் வீரேசலிங்கம் பந்துலு, வட்டதி சுப்பராயடு, தர்மாவரம் இராமகிருஷ்ணமாச்சார்யலு, கொளச்சலம் சீனிவாசராவ், வவிலால வாசுதேவ சாஸ்திரி, கொக்கண்ட வெங்கடரத்னம் பந்துலு, இராஜா சர் விக்ரம

தேவ வர்மா, மண்டபாக பார்வதீஸ்வர சாஸ்திரி ஆகியோரும் மேலும் பலரும் இப்பத்திரிகையில் படைப்புகளை வெளியிட்டுள்ளனர். அவர்களுள் திரு. வேங்கடராய சாஸ்திரிகள் தலையானவராவார்; அவர் அப்பத்திரிகையில் எழுதிய ஆந்திர மகாபாரதம் பிற கட்டுரைகளும் மிகச் சிறப்பு வாய்ந்தவை. கொக்கண்ட வெங்கடரத்னம் பந்துலு அவர்கள் ஆந்திரபாஷா சஞ்சீவினி என்ற திங்களிருமுறை ஏட்டை நடத்தி வந்தார். திரு. வீரேசலிங்கம், விவேகவர்த்தினி என்ற ஏட்டின் ஆசிரியராயிருந்தார். இவை தவிர சசிலேகா, ஆந்திர பிராகாசிகா, சூர்யலோகம், கலாவதி ஆகிய பத்திரிகைகளும் இருந்தன.

தன்னுடைய சமகால இலக்கியங்கள் குறித்து திரு. வேங்கடராய சாஸ்திரிகள் வெளியிட்ட திறனாய்வுக் கருத்துக்களும் கட்டுரைகளும் அவருக்கு ஆந்திர இலக்கிய உலகில் பலத்த எதிர்ப்பை உருவாக்கின; இலக்கியவாதிகள் பலர் சேர்ந்து "ஆந்திர கவி பண்டித சங்கம்" என்றதோர் அமைப்பினை ஆந்திர மாநிலம் முழுமைக்குமாக நிறுவினர்; இச்சங்கம் ஆந்திர இலக்கிய உலகில் திரு. வேங்கடராய சாஸ்திரிகளுக்குள்ள செல்வாக்கினைத் தகர்ப்பதையே தனது குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வந்தது. மாறி வந்த இக்கால கட்டத்தில் இலக்கியவாதிகள் ஒவ்வொருவரும் தம்முடைய எழுத்துக்களின் மூலம் மற்றவர்களைக் கடுமையாகத் தாக்கத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. இது அந்நாளில் வழக்கமாகவே ஆகி விட்டது. ஆனல் திரு. வேங்கடராய சாஸ்திரிகள் இம்முறைக்கு மாறுபட்டு, தம்முடைய திறனாய்வுகளை வடமொழி இலக்கியப் புலமை வெளிப்படுமாறு அம்மொழியிலக்கிய எடுத்துக்காட்டுகளோடும் பொருள் விளக்கங்களோடும் படைத்தார். ஒரு சமஸ்கிருத நாடகம் பயிலப்பட வேண்டிய பாங்கும், மொழி மாற்றம் செய்யப்பட வேண்டிய பாங்கும் அவரால் மிகத் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டது. அவர் வார்த்தைகளுக்குப் பொருள் கூறியதை விட அச்சொற்களின் மூலம் புலப்படும் கவிஞனின் இதயத்தை அல்லது எண்ணத்தை வெளிப்படுத்திக் காட்டினர்.

ஆந்திராவில் இருந்த இலக்கியவாதிகள் பலரும் மேற்படி சங்கத்தின் கூட்டங்களில் கலந்து விளைவைக் கவனித்து வந்தனர். இதன் முக்கிய நோக்கம் என்னவென்றல், நாடகங்களில் பேச்சுமொழி உரையாடல்கள் அமைக்கப்படுவதைத் தடுப்பதும், சாஸ்திரிகளுடைய பிரதாபருத்ரீயம் நாடகத்தை வழக்கிலிருந்து தடை செய்வதும் ஆகும். திரு. குருஜடா வேங்கடராய சாஸ்திரிகள் வெற்றிபெற வேண்டும் என்றெண்

ணிக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் அதே வேளையில் திரு. வீரேசலிங்கம் ஒதுங்கியிருந்தார். பொதுமக்கள் ஆறுதலும் மகிழ்ச்சியும் அடையும் வகையில் பரத நாட்டிய சாஸ்திரம் மற்றும் பல சமஸ்கிருத நாடகங்களிலிருந்து சான்றுகளைக் கூட்டி சாஸ்திரிகள் தம்முடைய நிலையைத் திறம்பட நிலைநாட்டினர்.

இவ்வெற்றிக்குப் பிறகு 1900-ஆம் ஆண்டில் திரு. சாஸ்திரி அவர்கள், தம்முடைய எதிர்ப்பு அணியிலுள்ள சிலரால் வெளியிடப்பட்ட காளஹஸ்தி மகாத்மியம் என்ற காவியத்தைப் பற்றிய தமது திறனய்வை வெளியிட்டார். 1901ல் நாடகங்களில் வழங்கப்பெறும் மொழி நடை குறித்த தமது வாதங்களை ஒரு தனி நூலாக்கி வெளியிட்டார்; இதுவே "சாரத காஞ்சிகா" வின் நான்காவது மணி எனப்பட்டது; இந்நூலின் பெயர் "கிராமிய பாஷா பிரயோக நிபந்தனமு" எனப்பட்டது. இந் நூலின் மறுபதிப்பிற்கு மதிப்புரையாக 8-1-1935 ஆம் நாள் "இந்து" நாளிதழில் திரு. ஜி. ஹரிசர்வோத்தம ராவ் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறர் :

காலம் காலமாக மிகத் தெளிவான ஒரு பொருள் குறித்து நமது இலக்கியங்கள் புரிந்துவந்த வாக்குவாதங்களைக் குறித்து எழுந்தது இந்நூல். தெலுங்கு நாடகங்களில் தெலுங்கின் பேச்சு மொழியைப் பயன்படுத்துவது பற்றி இந்நூல் கருத்துரைக்கின்றது. திரு. வேங்கடராய சாஸ்திரிகள் தம்முடைய நாடகங்களில் வரும் கீழான பாத்திரங்களுக்குத் தெலுங்கின் பேச்சு மொழியையே பயன்படுத்துகிறர். இது சமஸ்கிருத மரபினை ஒட்டியதேயாகும்; சமஸ்கிருத நாடகங்களில் உயர்ந்த பாத்திரங்களுக்குத் தூய்மையான சமஸ்கிருத மொழியும், அவற்றிலும் தாழ்ந்த பாத்திரங்களுக்கு பிராகிருத மொழியும் பயன்படுத்தப் பட்டிருக்கக் காணலாம். இதனல் சமஸ்கிருதம் உயர்ந்தவர்கள் பேசிடும் மொழி எனவும், பிராகிருதம் தாழ்ந்தவர்கள் வழங்கிடும் மொழி எனவும் கொண்டிருந்த மரபு பெறப்படுகிறது. அரச குலப் பெண்கள், அரசாங்க ஊழியர் குடும்பத்துப் பெண்கள், மற்றும் தாசி குலப் பெண்கள் சமஸ்கிருதம் வழங்கலாம் என்பதும் பிறர் சமஸ்கிருதம் வழங்க தடை செய்யப்பட்டிருந்ததென்பதும் கவனத்தற்குரியது. இம்மரபினைப் பின்பற்றியே திரு. சாஸ்திரியவர்களும் கிரந்தத் தெலுங்கினைப் பண்பார்ந்த பாத்திரங்களுக்கும், பேச்சுத் தெலுங்கைப் பிறபாத்திரங்களுக்கு மாகக் கையாண்டார். இதனையே அவர் காலப் பிற இலக்கிய வாதிகள் எதிர்த்துவந்தனர்.

இவ்விரு சாராருமே தமக்கு முற்பட்ட மொழிவாணரின் இலக்கிய மரபை வழுவாது பின்பற்றும் இயல்புடையோராயி

னும் தம்மிடையே மிகப்பெரும் போராட்டத்தையே நிகழ்த்தினர். இக்கால கட்டத்தைத் திரு. சாஸ்திரியார் தம்முடைய திறமைமிக்க திறனாய்வால் வெற்றி கொண்டார். இலக்கிய நோக்கில் பழமை மரபில் பிடிப்புக் கொண்டவராயிருந்த போதும், நம் சாஸ்திரியார் நாடகக் கலையை வளர்த்ததன் வாயிலாகத் தெலுங்கு இலக்கியத் துறைக்கு ஆற்றிய பணி பெரிதும் போற்றதற்குரியதாகும். சமஸ்கிருத ஆசான்களை மேற்கோள் காட்டித் தம்முடைய தொன்மைக் கவர்ச்சியுடைய நூலில் நிலையான விதிமுறைகளை வகுத்துள்ளார். 1. தெலுங்கு மொழியிலும், நாடகங்கள், வட மொழியிலும் அதைப் போலவே ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளிலும் உள்ளவாறு அனைத்து மக்களுக்கும் புரியும் வகையில் அமைந்திருக்க வேண்டுமென்பது நோக்கமாக இருக்க வேண்டும். 2. பிராகிருதம் வாழும் மொழி, பேச்சு மொழி; அதைப் போன்றே தெலுங்கு பேச்சு மொழி, வாழும்மொழி; அதனை நாடக இலக்கியத்திற்கு ஏற்புடையதாக்கிப் பயன்படுத்தினர். 3. உள்ளபடியான வாழ்வின் இயல்பான கணப்பொழுதில் ஏற்படுகிற தவிர்க்க முடியாத உவகைக்கு விரும்பத்தகாத மாற்றமைப்புத்தான் புலமையின் பகட்டு நடையாகும். 4. ஔசித்யா அல்லது தன்மை, இரஸம் அல்லது தகுதியே திறமைவாய்ந்த நாடகாசிரியன் அடையும் வெற்றியாகும். இத்தகைய சிறப்பான கருத்துக்கள் கொண்ட இந்நூல் தெலுங்கு இலக்கிய விரும்பிகள் அனைவரும் பெரிதும் போற்றிப் பயிலத்தக்கதாகும். இந்நூலில் மோலியர் வில்லியம்ஸ், வில்சன், வெபர், பேராசிரியர் போவெல்தத், ரிசிகேஷ் சாஸ்திரி உட்பட சமஸ்கிருதம், தெலுங்கு மற்றும் ஆங்கில இலக்கியமொழிப் படைப்புகளினின்றும் மிகப் பல சிறப்பான சான்றுகள் காட்டப்பட்டுள்ளன.

1900 ஆம் ஆண்டில் தெலுங்கு இலக்கிய உலகிலும் வேங்கடராய சாஸ்திரிகளின் சாதனைகளிலும் ஒரு பெரிய சகாப்தம் நடந்து முடிந்தது. இம்மாற்றம் மிகத் தெளிவாகப் புலனாகும். மிகக் கடுமையான மகத்தான இலக்கியச் சச்சரவுகள் நடந்த நாட்கள் முடிவுற்று, இலக்கிய வெற்றிகளால் உண்டான இறுமாப்பு சாஸ்திரியாரின் சக்தியாயிற்று. மேலும் கடவுளின் தன்னிகரில்லா ஆற்றலும் சாஸ்திரியாரின் மீது நிறைவுறப் பரவத் தொடங்கியது. 1900ல் அவருடைய தந்தையார் தம்முடைய 83 ஆவது வயதில் காலமானார்; மிக நெடுங்காலம் வாழ்ந்தே மறைந்தார் எனினும் இம்மறைவு சாஸ்திரியாரின் மனதில் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. இதனை அடுத்து 1901 ஆம் ஆண்டில் வேங்கடராய சாஸ்திரிகளுடைய நெருங்கிய நண்பரும் சிறந்த இலக்கிய அறிஞருமான

பேராசிரியர் டி. எம். சேஷகிரி சாஸ்திரியார் காலமானூர். இதனுல் இவ்விருவரும் சேர்ந்து செய்வதாக இருந்த பல இலக்கியப் பணிகள் அப்படியே கைவிடப்பட்டன.

இவ்வாருன இழப்புகளுக்கும் துயரங்களுக்கும் ஆளான போதும்கூட, சாஸ்திரியார் தமது இலக்கியப் பணிகளைக் கைவிடவில்லை. 1902ல் காளிதாசரின் மேக சந்தேசம் எனும் காவியத்திற்குத் தெலுங்கில் பதப்பிரயோ ஜனிகா என்ற பெயரில் உரையொன்று எழுதி வெளியிட்டார்; இதனை மல்லிநாதரின் ''சஞ்சீவினி'' நூலுக்குச் 'சேடி' அல்லது வேலைக்காரி என்றழைத்தார். இது, நெடுங்காலமாக அவர் வகுப்பில் பாடம் போதித்தபொழுது தயாரிக்கப்பட்ட குறிப்புக்களைக் கொண்டு அமைந்த நூலாகும். இது காளிதாசருடைய சொல்லாட்சித் திறனையும் உயர்வையும் தெளிவாக எடுத்துக் காட்டுவதாகும். சொந்தப் படைப்பான இரண்டாவது நாடகத்தை 1904ல் திரு. சாஸ்திரியார் வெளியிட்டார். உஷா பரிணயம் என்ற பெயரில் அமைந்த இந்நாடகம் சமஸ்கிருத மாதிரியில் ''நாட்டுமொழி'' ஏற்புடையவாறு சிறப்புறப் பயன்படுத்தப் பட்டது. இந்நாடகத்திற்கான கரு, இம்முறை ''யக்ஷகானம்'' எழுத்தாளர்களின் பாகவதம், ஹரிவம்சம் ஆகியவற்றிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது. பாணன் என்றேர் அசுரன் தேவர் களுக்குப் பல தொல்லைகளை அளித்து வந்தான்; அவனுடைய தொல்லைகளைத் தாளாத தேவர்கள் தங்கள் தலைவரான நாராயணனிடம் சென்று முறையிட்டனர். அத்தேவர்கள் கிருஷ்ண பரமாத்மாவை நாராயண அவதாரம் எடுத்துப் பாணனுடன் போர் புரியவேண்டிய சூழ்நிலையை உருவாக் கினர். இந்நிலையில் உஷா என்ற பாணனின் மகளைக் கனவில் கண்ட அநிருத்தன் என்ற நாராயணனின் பெயரன் அவள் மீது காதல் கொண்டான்; இதைப் போலவே அநிருத்தனைக் கனவில் கண்டு உஷாவும் அவன் மீது காதல் கொண்டாள். உஷா வின் தோழியான சித்ரலேகா சில வியத்தகு செயல்களால், அநிருத்தனைக் கிருஷ்ணனின் அரண்மனையிலிருந்து கொண்டு வந்து பாணனின் அரண்மனையில் உஷாவுடன் சேர்த்து காதலரிருவரும் கலந்திருக்க உதவி செய்தாள். இதனை அறிந்த பாணன் மிக வெகுண்டு அநிருத்தனையும் உஷாவையும் கைது செய்து தனது நாட்டிலுள்ள இரு தனித்தனித் தீவுகளில் தனிமைச் சிறையில் வைத்தான். இதனைக் கண்ட கிருஷ்ணர் தம் பெயரனை மீட்க வேண்டி, பாணனுடன் போர் தொடுத்து, அவனை வென்று, காதலரிருவரும் கலந்து வாழ்ந்திட வழி செய்தார். இதனுல் தேவர்களும் பாணனின் தொல்லையிலிருந்து

விடுதலை பெற்றனர். இந்நாடகத்தில் வடமொழி மரபுகளை வழுவாது பின்பற்றிச் செல்லும் சாஸ்திரியார், இந்நாடகத்தில் மரபுக்கு மாருகாத வகையில் பல புதிய பாணிகளையும் படைத்துக் காட்டியிருக்கிருர். மேலும் பெத்தண்ணு, பட்டு மூர்த்தி ஆகியோரின் காவியப் பாணிகளையும் இந்நூலில் அவர் இணைத்துப் பார்த்திருக்கிருர். சிருங்கார ரஸத்தை வருவிக்க, காவியக்கற்பனை முறை பெரிதும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பிரதாபருத்ரீயத்தைப் பாடநூற் பட்டியலில் சேர்த்திட விரும்பாத பல்கலைக்கழகங்களும்கூட உஷா நாடகத்தை விரும்பிப் போற்றி, தம்முடைய பி. ஏ. தேர்வுப் பாட நூலாகத் தேர்ந் தெடுத்துக் கொண்டன. இந்நாடகம் வடமொழியில் மொழி பெயர்க்கப்படுமேயானுல், வடமொழியின் நாடகங்களான இரத்னுவளி, பிரியதர்சிகா, ஸ்வப்னவாசவதத்தா, மாளவிகாக்னி மித்ரா ஆகிய படைப்புக்களுக்கு ஈடான ஒரு சிறந்த படைப்பாக விளங்கிடும் பான்மை மிக்கதாகும். திரு. சாஸ்திரி அவர்கள் இந்நாடகத்தைத் தம் நண்பர் திரு. சேஷகிரி சாஸ்திரியாருக்குக் காணிக்கையாக்கியுள்ளார்.

# 6. அவருடைய அச்சக மறுதோற்றம்

திருவாளர் வேங்கடராய சாஸ்திரிகள் சென்னைக் கிறித்துவக் கல்லூரியிலிருந்து ஓய்வு பெறுவதற்குச் சில காலம் முன்பே, 1909-ல் தம்முடைய அச்சகத்தை மீண்டும் நடத்தத் தொடங்கினர்; இதனல் சமஸ்கிருதத்திலும் தெலுங்கிலுமாக அவர் பல நூல்களை வெளியிடத் தொடங்கினர். அச்சமயத்தில் பொதுவாகவே சமஸ்கிருதக் கல்வியில் ஒரு பெரிய மறுமலர்ச்சி ஏற்பட்டது; ஆங்கிலம் கற்றறிந்த பலரும் சமஸ்கிருத மொழியின் தேவையினை உணர்ந்து அதனைக் கற்க முனைந்தனர். இத்தகைய புதிய மாணவர்களுக்கேற்பப் போதிக்கத்தக்க திறமை வாய்ந்த ஆசிரியர்களின் பற்றுக்குறை மிகத் தெளிவாகத் தெரிந்தது. மேலும் தாமாகவே கற்றுக்கொள்வதற்கேற்ற பயிற்சி நூல்களும் அன்றில்லை. சமஸ்கிருதக் கல்வியின் இன்றியமையாமையினை அறிவுறுத்தும் நோக்கத்திலும், அம்மொழியின் வளமையும் பண்பும் புலப்படும் வகையிலும், சில வரலாற்றுக் காரணங்களால் அது தன் சொந்த மண்ணில் புறக்கணிக்கப்பட்டாலும் மேற்கு நாடுகளில் பெருமளவில் போற்றப்பட்டமையும் விளங்கிட நம் சாஸ்திரியார் பல நூல்களை வரிசையாகப் பதிப்பித்து வெளியிட்டார்; இவை யாவும் தாமாகவே ஆசிரியர் துணையின்றிக் கல்வி கற்பிக்கும் தன்மையில் எழுதப்பட்ட பயிற்சி நூல்களாகும். உரைநடையிலும் கவிதையிலுமான இந்நூல்கள் யாவும் மிகச் சிறந்த தெலுங்கு உரையுடனும் பொருள் விளக்கங்களுடனும் வெளியிடப்பட்டன. இந்தப் பதிப்புகள் யாவும், எந்த நிலையிலுள்ள மனிதரும் சமஸ்கிருதம் கற்க விரும்பினல் ஆசிரியர் உதவியின்றியே எப்பொழுது வேண்டுமானலும் கற்றுக்கொள்ள ஏற்றவையாய் அமைந்திருந்தன.

இந்தத் திட்டம் அவர் 1890ல் முதன்முதலாக அச்சகம் ஒன்றை நிறுவியபோதே அவர் உள்ளத்தில் எழுந்தது. போஜ சரிதம், விக்ரமார்க சரிதம் போன்ற எளிய உரைநடை நூல்களைக் கையடக்கப் பதிப்பில் அவர் வெளியிட்டமைக்கு இதுவே காரணம். அவர் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற இப்பொழுது இத்திட்டத்தை செயல்படுத்துவதில் அவருக்கு எந்த இடையூறும் இருக்கவில்லை. மேற்குறித்த அவருடைய இரு நூல்களையும் மேலும் விரிவான விளக்கவுரைகளுடனும் தெலுங்கு மொழிபெயர்ப்புடனும் பெரிய அளவில் மறுபதிப்

பாக மீண்டும் வெளியிட்டார். 1910–லிருந்து சில காலம் அவருடைய அச்சகம் மிகச் சிறப்பாக இயங்கி வந்தது. காளிதாசரின் ‘இரகுவம்ச’த்தின் முதல் ஆறு காண்டங்களையும், ‘குமாரசம்பவ’த்தையும், மல்லிநாதரின் சமஸ்கிருத உரையுடனும் தமது விளக்கவுரையுடனும் பதிப்பித்தார். சமஸ்கிருதம் கற்போர் முதலில் இலக்கண அடிப்படைகளைக் கற்றுத் தெளியும் பொருட்டு ‘அமரம்’ அல்லது அமரகோஷம், தாதுமஞ்சரி, சப்தமஞ்சரி, சமாசகுசுமாவலி ஆகிய இலக்கண நூல்களைப் பதிப்பித்தார். சப்தமஞ்சரி (பெயர்ச்சொல் பற்றியது) தாதுமஞ்சரி (வினைச் சொல் பற்றியது) ஆகிய இரு பகுதிகளையும் இணைத்து விளக்கி, சமஸ்கிருதம் கற்போரின் பயன் கருதி “பண்டார்க்கர்” எழுதிய சமஸ்கிருத இலக்கணம், “ஹென்றி” யின் இலத்தீன் இலக்கணத்தைப் போன்றே ஐரோப்பிய அறிஞர்கள் சமஸ்கிருதம் கற்றிட மிகவும் பயன்பட்டது. “சமாசகுசுமாவலி” சமஸ்கிருதச் சொற்றொடர்களை விளக்குகின்றது. இந்திய முறைப்படி அகராதிகளை மனப்பாடம் செய்வதன் மூலமாகக் கற்க வேண்டியனவற்றை விரைவாகவும் எளிதாகவும் கற்க முடியும்; மேலும் இம்முறையினால் சிறந்த புலமையும் உருவாகும் என்பதை உணர்ந்த வேங்கடராய சாஸ்திரிகள் இதனைப் பரிந்துரை செய்தார்.

தம்முடைய பதிப்புகளைக் கற்கின்ற எந்த மாணவனும் அவற்றை முழுமையாகக் கற்றவுடன், எந்த ஒரு சுலோகத்தையும் படித்தவுடன் புரிந்து கொள்ளும் அளவிற்குச் சமஸ்கிருத அறிவு பெற்றவனாயிருப்பான் என்பது சாஸ்திரியாரின் துணிபு. அடுத்து, தமது சிருங்கார காவியத்தின் முன்னோடியாகப் பில்ஹணீயம் நூலை விளக்கவுரையுடன் வெளியிட்டார். மேகசந்தேசம் எனும் காவியம் மிகச் சிறந்த விரிவுரையுடனும் காளிதாசரின் புலமைச் சிறப்பைப் பலபடப் போற்றிடும் பாங்குடனும் பதிப்பிக்கப் பெற்று முன்னரே வெளியிடப்பட்டது. அடுத்ததாக, தெலுங்கு மொழிபெயர்ப்பாளர்களுக்கும், ஒப்பியல் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் உதவிடும் வகையில் மத்திய காலத் தெலுங்குப் புலவர்கள் படைத்த இலக்கியங்களைக் கண்ட சாஸ்திரியார், ‘பர்த்ருகரி’ யின் மூன்று சதகங்களைத் தெலுங்கு உரையுடனும், பழைய சமஸ்கிருத உரையுடனும், தெலுங்கு மொழி பெயர்ப்புடனும் எழுதி வெளியிட்டார். ஹிதோபதேசம் மற்றும், தசகுமார காவியம் ஆகிய இரு நூல்களைத் தெலுங்கில் மொழி பெயர்த்து வெளியிட்டார். இவ்வாறு, தாமதமாகப் படித்துக் கல்வி கற்றிடும் மாணவர்களைச் சமஸ்கிருதத்தில் எந்தப் பகுதியையும் படித்துப் பொருள் புரிந்து கொள்ளும் அளவிற்கு உருவாக்கிய பின்னர், பஞ்ச

தந்திரம் என்ற நூலை மூலவடிவில் வெளியிட்டார். சமஸ்கிருத நாடகவியலை விளக்கிடும் பான்மையில், அவர், பிரிய தர்சிகா என்ற எளிய நாடகத்தைச் சொல்லுக்குச் சொல் பொருளுடனும், மொழிபெயர்ப்புடனும், நாடகவியல் விளக்கங்களுடனும் எழுதிப் பதிப்பித்தார். கற்கும் மாணவரின் நலன் கருதி, அவர் தம்முடைய நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் மேற்பகுதியின் இடப்புறத்தில் சமஸ்கிருத மூலமும், வலப் பகுதியில் மொழிபெயர்ப்பும், பாதிக்குக் கீழுள்ள பகுதியில் பொருளும் விளக்கவுரையும் அச்சிட்டிருப்பார். மேலும் நாடக மேடைக்காகவும் பல்கலைக்கழகத்திற்காகவும் இந்நாடகத்தினை தனியாகத் தெலுங்கில் மொழிபெயர்த்தார்.

அவருடைய சமஸ்கிருத நாடகங்களின் மொழிபெயர்ப்புகள் பற்றிய ஒரு கருத்தினை இங்கு நாம் குறிப்பிட வேண்டும். நாகாநந்தம் மற்றும் சாகுந்தலம் நாடகங்களின் அவருடைய மொழிபெயர்ப்புகள் மேடைக்கும், படிப்புக்கும் ஆக இரு வகையிலும் பயன்பட்டன. மொழியின் வகைப்பாடும், பல் வேறு அடிகளில் அமைந்த கவிதைகளும், மேடைகளில் சிறப்பாக அமைந்தன. அதேவேளை மொழிபெயர்ப்புகள் மூலப் பகுதியை அப்படியே சொல்லுக்குச் சொல் தழுவிய நிலையில் அமைந்து, கற்பாரது நெஞ்சில் மூலத்தின் முழுப்பொருளோடு உட்கருத்தும் தோன்ற நின்றன. முற்காலத்திய மொழி பெயர்ப்பாளர்களான நன்னயர், திக்கண்ணு ஆகியோர் புராணங்களையும் இதிகாசங்களையும், அவற்றின் மூலக்கருத்து மாருத வகையில் கூட்டவேண்டிய இடங்களைக் கூட்டியும் குறைக்க வேண்டிய இடங்களைக் குறைத்தும் மொழிபெயர்ப்புகளை உருவாக்கினர். அவர்களுக்குப் பிற்பட்ட மத்தியகால மொழிபெயர்ப்பாளர்களும் இம்முறையினையே பின்பற்றி அதிக சுதந்திரத்தோடே செயல்பட்டு வந்தனர்; 'பிரபந்த' காலத்தில் மொழிபெயர்ப்புகள் ஒதுக்கப்பட்டு, படைப்பாளர்களின் காவிய உணர்ச்சிக்கே முதலிடம் அளிக்கப்பட்டது. தற்கால எழுத்தாளர்கள் நாடகங்கள் மூலநூலினை மிக நெருக்கமாகத் தழுவிச் செல்வன என்ற கருத்தினைக் கொண்டிருந்ததால், சமஸ்கிருத மூலத்தின்பால் மிகுந்த ஈடுபாடும் புலமையும், தெலுங்கு மொழியில் படைப்பாற்றலும் மிகுதியும் வேண்டப் பட்டன. இவ்வகையில், சென்னைக் கிறித்துவக் கல்லூரி மலரில் மதிப்புரையாளர் ஒருவர் முன்பு குறிப்பிட்டவாறே, நம் சாஸ்திரி யார் சமஸ்கிருத இலக்கியங்களை மாறுபாடின்றித் தெலுங்கில் மொழிபெயர்ப்பதில் தமக்கென ஒரு சிறப்பிடத்தைப் பெற்றிருந்தார். சமஸ்கிருத உரையாசிரியர்கள் அனைவருமே ஒரு பகுதியின் சிறப்புகளை பின்வருமாறு பகுத்துக் காண்பர்

(அ) பொதுவான பொருள், (ஆ) உட்கருத்து, (இ) சொல்லணி, (ஈ) சிலேடை நயம், (உ) காவிய நயம் மோனைகள், (ஊ) தத்துவார்த்தங்கள்; நம் சாஸ்திரியாரின் மொழிபெயர்ப்புகளில் இந்நலங்கள் யாவுமே நிறைந்திருக்கக் காணலாம். அதற்கும் மேலாகப் பல இடங்களில் இவர் மொழி பெயர்ப்புகள் மூல நூலினும் செறிவுடையதாக விளங்கிடவும் காணலாம். இலக்கிய உலகில் இத்தகைய வியத்தகு சாதனை புரிந்த சாஸ்திரியாருக்கு இதனாலேயே மொழிபெயர்ப்புத் துறையில் சிறப்பான பெயர் கிடைத்தது. மேலும் மூலநூலை அப்படியே தழுவியதெனினும் அவருடைய மொழிபெயர்ப்புகள் அனைத்துமே மூல இலக்கியங்களாகக் கருதி போற்றத்தக்கனவாகும். அதுமட்டுமின்றி, ஒரு நூலை மொழிபெயர்க்கப் புகுமுன், அந்நூலின் பல்வேறு பதிப்புகளையும் கையெழுத்துப் படிகளையும் நன்கு படித்து, தெளிவாக்கிக் கொண்ட பின்பே அந்நூலை மொழிபெயர்ப்பது சாஸ்திரியார் வழக்கம். இதற்குச் சாஸ்திரிகளின் புலமையே காரணம் எனலாம். இந்த மொழிபெயர்ப்புத் துறையில் வீரேசலிங்கம் பந்துலு, நரசய்ய சாஸ்திரி போன்ற பல அறிஞர் பெருமக்கள் இருந்தனர். ஆயினும் அவர்கள் யாரும் இம்முறையிலான மொழிபெயர்ப்புகளைச் செய்திடவில்லை; மாறாக, தம் வாசகர்கள் எளிதில் அறிந்துகொள்ளும் நோக்கத்தோடேயே அவர்கள் எழுத்துகள் அமைந்ததால் அவற்றைச் சிறப்புறக் கற்கின்ற மாணவர்களுக்குச் சமஸ்கிருதத்தின் முழுமையான நலத்தை அளித்திடத் தவறிவிட்டன.

சமஸ்கிருதக் கல்வியில் அடுத்ததாக நாம் காண்பது அணியிலக்கணம்; இஃது இலக்கியத்திற்கு மிக இன்றியமையாதது; "ரசா" "பாவம்" (Rasaa, bhavam) போன்றவற்றை விளக்கிட வேண்டி "அமரு சதகம்" (அமரு காவியம்) மற்றும் "ரஸமஞ்சரி" ஆகிய "பானுமிஸ்ரா"வின் நூல்களை மிகச் சிறந்த உரையுடன் வெளியிட்டார். இவற்றின் மூலமாகச் சமஸ்கிருத நாயக நாயகியாரை இலக்கிய உலகில் உலவவிட்டார். பின்னர் விசுவநாதரின் "சாஹித்யதர்ப்பணம்" நூலை முழுமையாக மொழிபெயர்த்தார்; இந்நூல் அவருடைய மறைவுக்கு வெகுகாலம் பின்பே பதிப்பிக்கப் பெற்றது. மேலும் "புஷ்ப பாண விலாசம்" என்ற நூலையும் உரை எழுதி வெளியிட்டார். இச்சாதனைகளனைத்தையும் அவர் தொடர்ச்சியாகச் சாதிக்க வியலாதவாறு அவருடைய வாழ்க்கை பல தடைகளைக் கொண்டிருந்தது; பல இடையூறுகளுக்காட்பட்டது. 1919ஆம் ஆண்டிற்குப் பிறகு அவருடைய அச்சகத்தை அவர் விற்றுவிட நேர்ந்தது. காளிதாசர் மற்றும் ஸ்ரீஹர்ஷர் ஆகியோர் படைப்பு

களை மொழிபெயர்த்திடவும், மாளவிகாக்னிமித்ரம், விக்ரமோர் வசியம், இரத்னுவளி ஆகிய காவியங்களின் தெலுங்கு மொழிபெயர்ப்புகளை எழுதி வெளியிடவும் அவர் ஏறத்தாழ தம்முடைய எழுபதாவது வயது வரையில் உழைக்க வேண்டியிருந்தது. பவபூதியின் உத்ர ராமசரிதம் எனும் நூலை மொழிபெயர்த்த சாஸ்திரியார் அதன் முன்னுரையில் பவபூதியின் பிற நாடகங்களைப் பற்றிய மிக விரிவான பல குறிப்புகளையும் அளித்திருக்கக் காணலாம். நாடகவியலில் "கருணரஸ" வாதத்திற்கு எதிராக இவர் கொடுத்த "கருண விப்ரலம்பா" வாதங்கள் மிகத் திறமையானவை. சமஸ்கிருத நாடகங்களைப் பற்றிய இவருடைய "பரத-ஆபரத-ரூபக-மரியாதலு" எனும் கட்டுரை, சமஸ்கிருத நாடக வரலாற்றை மட்டுமின்றி, நாடகாசிரியராகவும், மொழி பெயர்ப்பாளராகவும், நாடக இயக்குநராகவும் இருந்த சாஸ்திரியாரின் பட்டறிவினைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

திரு. வேங்கடராய சாஸ்திரிகளின் "சாகித்யதர்ப்பணம்" மொழி பெயர்ப்பு குறித்து "சென்னை இந்திய கட்டமைப்பு" (The Federated India of Madras) 1-4-1936ல் பின்வருமாறு குறிப்பிட்டது; 'இது விசுவநாத கவிராஜர் அணியிலக்கணம் குறித்து எழுதிய வடநூலின் தெலுங்கு மொழி பெயர்ப்பு நூலாகும். இதனைப் படைத்தவர் சிறந்த அறிஞரான காலஞ்சென்ற திரு. வேங்கடராய சாஸ்திரியாவார். விசுவநாத கவிராஜர் ஒரு வங்காள அறிஞர். (உண்மையில் அவர் ஒரிய மொழியினரே) எனினும் சமஸ்கிருத இலக்கிய உலகில் தனியிடம் பெற்றவராவார்; திரு. வேங்கடராய சாஸ்திரிகள் அவருடைய வடமொழிப் படைப்பைத் தெலுங்கில் மொழி பெயர்த்ததன் வாயிலாகத் தெலுங்கு இலக்கிய உலகிற்கு அரும்பணி ஆற்றியுள்ளார்'. இந்நூலின் பயனாக, தெலுங்கு மொழியறிஞரிடையே காணப்பட்ட ஒரு பெரிய வெற்றிடம் நிரப்பப்பட்டது. தெலுங்கு மொழி, படைப்புகளால் மட்டுமன்றி எண்ணத்தாலும் பண்பாலும்கூட முழுவதும் சமஸ்கிருத மயமாகவே ஆக்கப்பட்டு வந்ததால் பழைய தெலுங்கு எழுத்தாளர்கள் தமது மொழிக்குரிய விதிகளை அப்படியே சமஸ்கிருத 'இலட்சணிகா'வினிடமிருந்தே பெற்றுக் கொண்டனர்; அதனைக் கற்கத் தொடங்குகின்ற எவரும் முதலில் வடமொழியின் அலங்கார சாஸ்திரத்தையே கற்க வேண்டியிருக்கிறது. அணியிலக்கணம் பற்றிக் கூறிடும் தனியான சிறந்த தெலுங்கு நூல் வெகுசிலவே இருக்கின்றன; அவற்றிலும், காவியாலங்கார சங்கிரகம், அல்லது காவியாலங்கார சூடாமணி போன்ற

குறிப்பிடத்தக்க நல்ல நூல்களிலும்கூட போதிய தெளிவில்லா மையும் சில இடங்களில் தவறுகளும் காணப்படுகின்றன. எனவே சமஸ்கிருத நூல்களின் உதவி இங்கு தவிர்க்க முடியாத ஒன்ருகிறது. ஆனல் சமஸ்கிருத மூல நூல்களைக் கற்பதென்பது இக்காலத்திய சாதாரண தெலுங்கு அறிஞர் களுக்கு இயலாத காரியமே. எனவே அத்தகையோருக்கும், படிக்கும் பொது மக்களுக்கும்கூட இப்போதுள்ள வகையிலான மொழியாக்கங்கள் ஏற்புடையதாகின்றது. சில ஆண்டுகளுக்கு முன்பு காலஞ்சென்ற அவ்வாரி சுப்ரமணிய சாஸ்திரி அவர் களால் மொழிபெயர்க்கப்பட்ட ''மம்மதா'' அவர்களின் காவிய பிரகாசிகா எனும் நூலும் இப்போது வெளியிடப்படுகிற ஆந்திர சாஹித்யதர்பணு எனும் நூலும் இவ்வகைக்கு ஏற்ற அரிய சான்றுகளாம்.

மொழிபெயர்ப்பைப் பற்றி நாம் எதுவும் குறிப்பிடத் தேவையில்லை. ஏனெனில் திரு. சாஸ்திரி அவர்களின் பெயர் ஏற்கெனவே இத்துறையில் மிகச் சிறப்பான இடம் பெற் றுள்ளது. இத்துறையில் அவர் கொண்டிருக்கும் ஆழ்ந்த புலமையும் தெளிவாகப் பொருள் விளக்கும் ஆற்றலும் குறிப் பிட்ட இப்பணியில் பெரும்பயன் விளைத்திருக்கக் காண்கிரும். மூல நூலின் சுலோகங்கள் முதலில் எளிய நடையில் மொழி பெயர்க்கப்பட்டு, பின்னர் மிகவிரிவான, தெளிவான விளக்கங் கள் தரப்பட்டுள்ளன; இதனுல் முதன்முதலாகக் கற்கத் தொடங்குவோருக்கும் எளிதில் புரியத்தக்க வகையில் இந்நூல் அமைந்திருக்கிறது.

திரு. சாஸ்திரியாருடைய வாழ்வில் படைப்புத் தொழில் சிறந்திருந்த இக்கால கட்டத்தில் (1909-1913) அவரால் படைக் கப்பட்ட தெலுங்குப் படைப்புகளாகப் பின்வருவனவற்றை நாம் காண்கிரும்; பழம்பெரும் காவியங்களான பாரிஜாதா பகரணம், பில்ஹனீயம், காவியலங்கார சூடாமணி, ஹரிச்சந்திர சரிதம் (துவிபாத அமைப்பில்) சாரங்கதாரா (துவிபாதம்), விஜயவிலாசமு மற்றும் தஞ்சை வெங்கடராஜுவின் சாரங்க தாரா ஆகியவை. சாஸ்திரியார் தெலுங்குக் கவியான ஸ்ரீநாதரின் 'சிருங்கார நைஷதா' நூலுக்கு, 'சர்வாங்கஷா' என்ற பெயரில் ஒரு சிறந்த உரையினை 1913ல் எழுதி வெளியிட்டார். இதுவே, 12ஆம் நூற்ருண்டில் கனேஜியிலிருந்த ஸ்ரீ ஹர்ஷர் எழுதிய 'நைசத்ய சரிதம்' என்ற சமஸ்கிருத நூலின் மொழிபெயர்ப் பாகவும் அமைந்தது. தெலுங்கு உரையாசிரியர் என்ற முறையில் சாஸ்திரியார் ஆற்றிய அரும்பணிகளைப் பின்பு ஓர் அத்தியா யத்தில் நாம் மேலும் காணலாம். இலக்கியப் பணிகளை மிக

வாக ஆற்றி வந்த இக்காலத்திலேயே அவர் பல்வேறு இலக்கிய அமைப்புகளிலும் பொறுப்பேற்றுப் பெருந்தொண்டாற்றி வந்திருக்கிருர். "ஆந்திர சாகித்திய பரிட்சத்"தின் செயலாள ராகச் சில காலம் பணியாற்றிய அவர் அக்காலத்தில் தான் குரு ஜடா அப்பாராவ் மற்றும் ஜி. வி. இராமமூர்த்தி பந்துலு ஆகி யோரின் "வியவகாரிகா" இயக்கத்திற்கு எதிராக எழுந்தார். மேலும் ஆந்திர சாகித்ய பரிட்சத்தின் "சூரியராயர் அகராதி" யின் பதிப்புப் பணிகளில் தலைமைப் பதிப்பாசிரியராக இரண் டாண்டுக் காலம் பணியாற்றினர். இவையனைத்திற்கும் மேலாக நெல்லூர், "ஆந்திரபாஷாபிமானி சமாஜம்" என்ற நாடகக் குழுவின் தலைவராகவும் இவர் இருந்து வந்தார்; இக்குழுவினர் இவருடைய நாடகங்களை இவரே இயக்கிட நடித்து வந்தனர்.

# 7. இலக்கியங்களில் பேச்சுமொழி

உலகில் எந்த நாட்டிலுமே பேச்சுமொழியும் இலக்கிய மொழியும் ஒரே மொழியாக இருக்கவில்லை. ஆங்கில மொழியில் மட்டுமே பேச்சுமொழியும் எழுத்துமொழியும் ஓரளவிற்கு ஒத்திருக்கிறது; எனினும் அந்த மொழியும் முற்றிலும் ஒத்துள்ளது என்று கூறமுடியாது. படித்தவர்கள் பண்பட்ட இலக்கணம் தழுவிய மொழியில் பேசுகின்ற அதே வேளையில், கல்லாத பாமர மக்கள் உயர்ந்தோர் பேசும் மொழி பற்றிக் கவலைப்படாமல் மரபான கொச்சை மொழிகளையே வழங்கிடக் காண்கிறோம். இஃது உலகம் முழுமைக்கும் பொதுவான வரலாறாகும். குறிப்பாக இந்தியாவில் பல வட்டார மொழிகள் வழக்கத்திலிருந்த போதும், இஸ்லாமியர் படையெடுப்புக்கு முன்புவரை கற்றவர்களின் மொழியாகச் சமஸ்கிருதமே இருந்து வந்திருக்கிறது. அதன் பிறகு பாரசீகம் அரசு மொழியான போது, இந்தியர்கள் பலரும் படைவீடுகளில் வழங்கிவந்த உருது மொழியுடன் பாரசீக மொழியைக் கற்கலாயினர்; இவை தவிர மாநில மொழிகளும் வளர்ச்சியுறத் தொடங்கின. அவற்றிலும் பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் காணப்பட்டன.

ஒரு காலத்தில் ஆந்திராவில் பிராகிருதமும் சமஸ்கிருதமும் தலையான மொழிகளாயிருந்த போதிலும் தெலுங்கு ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டது. அக்காலத்தில் புலவர்கள் கவிதைகளை மட்டுமே எழுதினர். உரைநடைகளும், அன்றாட வணிக மொழியும் சாசனமொழியும் காவியங்களில் காணப்படும் உரை நடையோடு பெரிதும் மாறுபட்டிருந்தன. நான் முன்பே ஒரு முறை குறிப்பிட்டாற் போன்று, 18-ஆம் நூற்றாண்டு உரை நடை கூட கவிதை நடையிலேயே அமைந்திருந்தது. சின்னையாசூரி அவர்கள் நீதிசந்திரிகா என்ற நூலை எழுதியதி லிருந்து தெலுங்கு உரைநடையை எளிமைப்படுத்த முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. எனவே, இலக்கிய அமைப்பிலான தெலுங்கு உரைநடை மேலும் எளிமையாக்கப் பட வேண்டும்; கற்றவர் வழங்கும் உயரிய பேச்சுநடையில் ஆந்திரம் முழுமைக்கும் பொதுவான ஓர் எளிய உரைநடை உருவாக வேணடும் என்ற எண்ணம் தோன்றியது. இதன் பின்னரே மெதுவாகப் பழைய நடைகள் மறைந்து புதிய நடைக்கு ஆதரவு ஏற்பட்டது. இதில் குறிப்பிடத்தக்க ஒரு

மாற்றம், பழங்கால எழுத்துக்களில் வழங்கப்பெற்ற முழுப் பூச்சியங்கள் (full zero) விலக்கப்பெற்று அவ்விடத்தில் அரைப் பூச்சியங்கள் கையாளப்பட்டமையாகும்; இதனை "அர்த் தானுஸ்வாரம்" என்பர்.

அம்மொழியில் இரண்டு 'ர'கரங்கள் உண்டு; அவற்றில் ஒன்று "லகு ரீபம்" – மற்றது "சகட ரீபம்"; இவையிரண்டும் ஒரு வண்டியின் இரண்டு சக்கரங்களைப் போன்றனவெனலாம். இவற்றுள் "சகட ரீபம்" திராவிட மூலத்தை உடையது; இவ்வமைப்பு தெலுங்குச் சொற்களில் மட்டுமே காணப்படு கிறது. இதனுடைய இணை வடிவங்கள் தமிழிலும் கன்னடத் திலும் காணப்படுகின்றன. ஒலி இவ்விரு 'ர'கரங்களும் வட மொழி 'ர'கரத்தைப் போன்ற ஒரே ஒலி அளவினையே உடை யன. இந்த 'அர்த்தானுஸ்வாரம்', 'சகடரீபம்' ஆகிய இரு அமைப்புகளுக்கும் வளரும் எழுத்தாளர்களுக்கும் புலவர்களுக் கும் ஒரு பெரிய தடைக்கல்லாக நின்று அவர்தம் வளர்ச்சியைப் பாதித்தன. எனினும் எவருமே இப்பழமைப் பண்பினை உடைத் தெறிய முன்வரவில்லை. இதற்கு அடுத்தபடியாகப் பெரிய சிக்கலாக நின்றது 'சந்தி' யமைப்பாகும்; சொற்களின் கூட் டமைப்பு முறை பற்றிக் கூறும் இச்"சந்தி" அமைப்பு முறையில் தெளிவான அறிவு பெற்றிருந்தாலொழிய இலக்கியப் படைப்பு கள் எதனையும் படைத்திட முடியாது.

பல அறிஞர்களும் இவ்விடர்பாட்டினை அறிந்தே இருந் தனர்; எனினும் வேங்கடராய சாஸ்திரிகளே இதற்கு மாற்று வழி காண முயன்றவர். கருத்துகளை விளக்கிடும் மொழியில் இடர்ப்பாடுகள் இருந்திடக் கூடாது என்றெண்ணிய அவர் "விசந்தி" முறையே அல்லது சொற்கூட்டுகளுள் உள்ள கையாளற்கரிதான அமைப்புகளை விலக்கிவிட்டு எழுதும் முறை யினை உருவாக்கிய அவர், தமது இச்செயலுக்குப் பழைய சமஸ்கிருத இலக்கணத்திலிருந்து சான்றுகளையும் காட்டினார். ஆயினும் இச்செயல்கள், எழுத்துகளில் முழுவதும் பேச்சு மொழியையே பயன்படுத்திட வேண்டும் என்றெண்ணிய தீவிர சீர்திருத்தவாதிகளுக்குப் போதிய மனநிறைவை அளிக்க வில்லை. இத்தகைய சீர்திருத்த இயக்கத்தை உருவாக்கியவர் கன்யாசுல்கம் எனும் நாடகத்தை எழுதிய திரு. குருஜடா அப்பாராவ் அவர்களே. அவருக்குப் பின்பு இக்கருத்தினை ஆதரித்தவர் திரு. ஜி. வி. இராமமூர்த்தி பந்துலு ஆவார். கன்யாசுல்கம் 1897ல் வெளியானபோது (இதே ஆண்டிலேயே பிரதாபருத்ரீயமும் வெளியானது) இவ்வாறான பேச்சுமொழி இலக்கிய இயக்கம் உருப்பெறவில்லை; எனினும் 1911-12ஆம்

ஆண்டுகளில் இந்நூலின் மறுபதிப்பு வெளியானபோது இவ்வியக்கம் மிகத் தீவிரமாகத் தொடங்கியது. என் பாட்டனர் தம்முடைய நாடகத்தில் பாத்திரத்தின் தரத்திற்கும் நிலைக்கும் ஏற்பப் பேச்சுமொழியினைப் பல இடங்களில் கையாண்டிருந்த போதும் அவ்வியக்கத்தை மிகக் கடுமையாக எதிர்த்தார்; பொதுவாகவே பயன்படுத்தற்கேற்ற சிறந்த தன்மை பேச்சு மொழிக்கில்லையென்பதோடு கற்றவர் பயன்படுத்தும் உயரிய பேச்சுமொழிகூட இடத்திற்கு இடம் வேறுபாடு கொண்டிருந்தது என்பதே இதற்கான காரணம். மேலும் இவ்வாருன இயக்கம் வெற்றி பெற்றுப் போற்றப்படுமாயின் மொழி தாழ்ந்து விடும் எனவும் இராஜராஜநரேந்திரா, கிருஷ்ண தேவராயர், இரகுநாத நாயக்கர் போன்றவர் காலத்திய பழைய மரபு இலக்கியங்கள் மக்களால் புறக்கணிக்கப்படுவதற்கு வழி யேற்படக்கூடும் எனவும் அவர் பெரிதும் அஞ்சினர். 1912ல் நிடடவோலு எனுமிடத்தில் கூடிய அறிஞர் மாநாட்டில், இத் தகைய தமது எண்ணங்களை வெளியிட்டுப் பேசிய அவர் ஆந்திராவின் பல பகுதிகளிலும் வழங்கப்பெறும் பல்வேறு வகையான பேச்சுமொழிகளையும், அவை ஒவ்வொன்றும் தமக்குள் மாறுபடும் தன்மைகளையும் சுட்டிக் காட்டினர்.

திரு. ஜி. வி. அப்பாராவ் அவர்கள் 1912ஆம் ஆண்டு சூன் திங்கள் 2ஆம் நாளில் சாஸ்திரியாருக்கு எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய நண்பருக்கு,

சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கின்போது, தாங்கள் என்னுடன் சிற்சில இடங்களில் கருத்தால் மாறுபட்டாலும் என்னேடு பெருமளவு கருத்தொருமித்துச் செயல்படுவதாகக் குறிப்பிட்டதற்குப் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். உரை நடையிலக்கியம் படைக்கின்ற முறையில் நம்மிடையே மாறு பாடுகள் இருந்தபோதிலும் படைப்பின் தரநிலை குறித்து நமக்குள் எவ்வித மாறுபாடும் இல்லை. நாம் மூலாதாரமாக, பொதுவான ஒன்றையே நாடுகின்ருேம். அதற்காகவே நான் தங்களைப் போற்றுகிறேன். தாங்கள் விவாதிக்கும் எந்தப் பொருளும் தங்களுடைய விரிவான விளக்கத்துடன் இருப்பதைக் காணுகிறேன். ஆனல் மற்ற மொழிவாணர்களும் இவ்வாறுதான் என்று என்னல் கூற இயலவில்லை. இத்தகைய நிலைகளில் அவர்கள் அளிக்கின்ற தீர்ப்புகள் முற்றிலும் உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டதாக இருக்குமேயல்லாமல் பழைய சமஸ்கிருத மரபுகளை ஆராய்ந்து பார்க்க அவர்கள் ஒருபோதும் முன்வந்ததில்லை. 'தேசமாதா' என்ற ஏட்டில் வேடிக்கையான

ஒரு வரியைக் கண்டேன். அதன் பொருளைத் தருகிறேன்; "ஒன்றிரண்டு நபர்கள் நாடகங்களில் கிராமிய மொழியைப் பயன்படுத்திட முனைந்தனர். அவர்களுடைய செயல்களைப் பண்டிதர்கள் பெரிதும் கண்டித்துள்ளனர்." "பண்டிதர்கள்" எங்கே இருக்கின்றனர்? நான் அவர்களைக் காண விரும்புகிறேன். பச்சையப்பனில் குழுமியிருந்த அவர்களில் எத்துணை பேர் அந்தப் பெயருக்குத் தகுதியுடையவராவர் என்பதை எண்ணி வியக்கிறேன்.

நிடடவோலு மாநாட்டில் நீங்கள் நிகழ்த்திய உரையை அறிந்துகொள்ள நான் பெரிதும் விரும்புகிறேன். முழுவதும் இல்லாவிட்டாலும் தங்களுடைய தலையாய வாதங்களையும் முடிவுரையான கருத்தையுமாவது நான் அறிந்துகொள்ள ஆவலாயுள்ளேன். ஆனால் துரதிருஷ்டவசமாக உங்களுடைய பேச்சு சென்னை நாளிதழ்களில் வெளியாகவில்லை. ஆந்திர பிரகாசிகா நாளிதழ் மட்டும் சந்தி குறித்த தங்களுடைய கருத்தரங்கப் பேச்சினை வெளியிட்டது. அதில் தங்களுடைய பேச்சின் ஒரு சில வரிகள் என்னால் புரிந்துகொள்ள இயலாத தெலுங்கில் வெளியிடப்பட்டிருந்தது. எனவே தங்களுடைய நிடடவோலு பேச்சுக்களை யாதேனுமொரு நாளிதழில் முழுமையாக இல்லாவிட்டாலும் சுருக்கத்தையாவது வெளியிட்டால் மிகவும் நன்றியுடையவனாவேன். ஐயா, அருள்கூர்ந்து என்னுடைய நலத்திற்காகவும், தெலுங்கு மொழியின் நலத்திற்காகவும், தங்களுடைய எண்ணங்களையும் கருத்துகளையும் சிரமம் பாராட்டாது எனக்கு எழுதுங்கள்; எந்த அளவிற்கு நாம் ஒத்துப்போகிறோம்: எங்கு வேறுபடுகிறோம் என்பதையும் எனக்கு எழுதுங்கள்.

தங்கள் அன்புள்ள,

ஜி. வி. அப்பாராவ்.

பி. கு. "அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய நண்பருக்கு: காலையில் எழுதிய எனது கடிதத்தின் தொடர்ச்சியாகவே இதனை எழுதுகிறேன். அதில் நான் குறிப்பிட்டிருந்தபடி, தற்கால உரைநடை மற்றும் செய்யுள் இலக்கியங்களில் தரமானவை என்று உங்களால் குறிப்பிடக்கூடியவை உள்ளனவா? உங்களுடைய கதாசரித் சாகரத்தை உரைநடை இலக்கியத்திற்கும், உஷா முதலிய நாடக இலக்கியங்களைக் கவிதை இலக்கியத்திற்கும் தரநிலை அளவுகோலாகக் கொள்ளலாமா?

பழங்கவிஞர்களின் மொழியில் காணப்படும் முன்மாதிரிகளுக்கும் விதிகளுக்கும் நீங்கள் எந்த அளவிற்கு விலகி

நிற்கிறீர்கள்? சரி பார்ப்பதற்கான தங்களுடைய சோதனை யாது? உரைநடை எழுத்தாளர்களுடைய எழுத்துகளுக்கிடையே முற்றிலும் பொதுவான ஒரு தரத்தை நிர்ணயிக்கும் சோதனையொன்றை நடத்திட முடியும் என்று தாங்கள் நம்புகிறீர்களா? வீரேசலிங்கம் பந்துலு அவர்கள் தெலுங்கு மொழிக்கு அளித்திட்ட மொழி அமைப்பு குறித்துத் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்? அவருடைய சீடர்கள் தெளிவான, அழகான, ஒப்புமையான தரம் எதையாவது பின்பற்றுகிறார்களா? இலக்கிய முறைகளில் பழகிய அறிஞர்களுக்குப் பேச்சு மொழியில் எழுதும் நடை மதிப்பற்றதாகத் தோன்றும் என்று ஏற்றுக்கொண்டு பார்க்குமிடத்து, வீரேசலிங்கம் தலைமை தாங்கிடும் தற்கால எழுத்தாளர்களின் பெருவழக்கான உரைநடை பண்டிதர்கள் மற்றும் மேனாட்டு அறிஞர்கள் ஆகிய இருதரப்பாரின் தகவுணர்வினைப் புண்படுத்திடாதா?

தங்கள் உண்மையுள்ள,
ஜி. வி. அப்பாராவ்.

1912ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12ஆம் நாளிட்ட தம்முடைய கடிதத்தில் திரு. அப்பாராவ் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்; இம்மாதம் 9ஆம் தேதிய தங்களுடைய குறிப்புக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்களுடைய கதாசரிச் சாகரத்தின் முதற்பதிப்பு என்னுடைய இல்லத்தில் இருக்கிறது. ஆயினும் இந்நூலின் புதிய பதிப்பு வெளியாகும்போது எனக்கொரு நூலினை அனுப்பி வைக்குமாறு தங்களுடைய பதிப்பாளர்க்குச் சொல்ல வேண்டுகிறேன். தாங்கள் எனக்கு அனுப்புவதாகக் குறிப்பிட்டிருந்த சிறு புத்தகம் இதுவரை என்னிடம் வந்து சேரவில்லை.

தங்களைப் பற்றிக் கூறியிருந்த தங்கள் குறிப்புகள் தங்களுடைய அடக்கவுணர்வை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. என்னைப் போன்றவர்களால் நாம் வாழுங்காலத்துப் பழக்கங்களையும் உணர்வுகளையும் உதறியெறிந்து வாழ முடிவதில்லை; ஆனால் தங்களைப் போன்ற சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் மிக்கவர்கள், உண்மையான புலமைநலத்தையும் இலக்கியப் படைப்பாற்றலையும் இணைத்து எந்தச் சூழ்நிலையையும் சந்திக்கத்தக்க புதிய பாதையை வகுத்திட இயலும்; இதனாலேயே இலக்கியங்களைத் தேக்க நிலையிலிருந்து காப்பாற்றிடவும் கூடும். அதனாலேயே தங்களுடைய எழுத்துக்களை நான் படிக்க விரும்புகிறேன். தங்களுடைய கவிதைகள் இலக்கணம் வழுவாதவையாக, பழங்காலக் கவிஞர்களுடைய மொழி

நடையில் அமைந்திருக்கின்றன. ஆயினும் உரைநடையில் குறிப்பிடத்தக்க அளவிற்குப் பழமையினின்றும் விலகிச் சென்றிருக்கிறீர்கள். ஆனாலும் தாங்கள் ஒருபுறம் திரு. வாவிலிக் கொலநு சுப்பராவ் போன்றவர்களுடனும், மறுபுறம் வீரேச லிங்கம் வழியினருடனும் எவ்வாறு ஒத்துப் போகிறீர்கள் என்பதுதான் எனக்குப்புரியவில்லே. திரு. சுப்பராவ் உரைநடையில் தீவிரப் போக்கினைக் கடைபிடிக்கும் அதேவேளையில், கவிதையில் தரங்குறைந்த நிலையைப் பிரதிபலிக்கின்றார். கிளேமொழி வளர்வதை ஆதரிக்கின்றவர்களால் பழைய இலக்கியக் கிளே மொழிக்கு ஏற்படும் இடர்பாட்டை விட இத்தகையோரால் ஏற்படுகிற இடர்பாடு அதிகமாகும். தலைவர் என்ற முறையில் தங்களுடைய உயர் இலக்கியப் பாணியைக் காட்டிலும் அக் குழுவினரின் உரைநடையமைப்பின் நன்மை தீமைகளை நன்கு ஆராய்ந்து பார்த்திடல் தங்கள் கடமையாகும்.

கிராமியம்... பற்றிய தங்களுடைய அறிக்கையை நான் வெகு ஆவலோடு எதிர்பார்க்கிறேன். நிடதவோலு பயணத்தினால் உண்டான களைப்பிலிருந்து மீண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
ஜி. வி. அப்பாராவ்.

பி. கு. தற்பொழுதுதான் தங்களுடைய அறிக்கையினை நான் பெற்றேன்; அதற்காக என்னுடைய மிகுந்த நன்றியினைத் தயைகூர்ந்து ஏற்றுக்கொள்ளுங்கள். என்னுடைய கருத்துகளுக்கு எதிரான போக்குடையவர்களுடைய எண்ணங்களையும் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். உங்களுடைய எதிர் வாதங்களை-மறுப்புவாதங்களைச் சந்திக்கவே நான் முயற்சி செய்வேன். தரநிலை பற்றிய பிரச்னையில் நமக்குள் வேறுபாடு அரிதே. கருத்தரங்கத்தில் நான் போதுமான அளவிற்குப் புரியவைக்கவில்லை என்றே எண்ணுகிறேன். நான் எழுப்பாத வகையிலான வாதங்களையும் நீங்கள் சமாளிக்கிறீர்கள்.

நான் தங்களைப் பல காரணங்களுக்காகப் பாராட்டலாம் எனினும் குறிப்பாக வரலாற்றுச் சூழலில் காதலும் இலக்கியப் பற்றும் மிளிரப் பிரதாபருத்ரீயம் நாடகத்தைப் படைத்துள்ள பாங்கினை நான் வெகுவாகப் போற்றுகிறேன். இக்காலத்தில் நடப்பனவெல்லாம் எவ்வாறு சுவையற்று இருப்பதாக இக் காலத்தவர் எண்ணுகிறார்களோ அதைப்போன்றே அக்காலமும் இன்றுபோலவே சுவையற்றதாகவே இருந்தது; ஆனாலும் தாங்கள் உயர்ந்த இலட்சியங்களை உடைய பாத்திரங்களையும்

சமூக அமைப்புகளையும் உருவாக்கிக் காட்டியிருக்கிறீர்கள். திறனாய்வாளர் எனப்படும் மிகச் சிலரே இந்த நாடகத்தின் நல்லியல்புகளை நன்குணர்வர். தெலுங்குத் திறனாய்வாளர்கள் இலக்கணத் துல்லியம் எனும் சேற்றிலேயே உழன்றுகொண்டிருக்கின்றனர். இலக்கணப் பிழையில்லாச் செயற்கையான கலையினையே அவர்கள் போற்றுகின்றனர். தங்களைப் பாராட்டுகின்ற அதே வேளையில் தங்களுடன் வாதம் புரிவதை விரும்பக் கூடாது. ஆனாலும் தாங்கள் நமது நிலையை மாற்றிக்கொள்ள வாய்ப்பு அளிக்கவில்லை. எனவே, பாண்டவர்கள் பீஷ்மருடைய அனுமதியை யாசித்ததுபோல், நானும் தங்களுடைய அனுமதியை யாசிக்கிறேன். மிகக் குறைந்த அளவிற்கும் குறைவான அளவிற்கேனும் தங்களை இசைவிக்க என்னால் முடியுமானால் அதுவும் தங்களுடைய ஒத்துழைப்போடேயே முடியும் என நம்புகிறேன்.

அன்போடும் பணிவோடும்
தங்கள் உண்மையுள்ள,
ஜி. வி. அப்பாராவ்.

1914ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள் 8ஆம் நாள் கூனூர் என்ற இடத்திலிருந்து அவர் எழுதிய இன்னொரு கடிதத்தில் பின்வருமாறு கூறுகிறார்; "உங்களிடம் நான் கேட்கவேண்டிய கேள்வி ஒன்று உண்டு; உங்களுடைய நாடகத்தில் "ஔசித்ய" வாதப்படி தாங்கள் பல்வேறு வகையைச் சேர்ந்த மொழிஅமைப்புகளைக் கையாண்டிருக்கிறீர்கள். ஆயினும் அம்மொழிகளுள்ளும் உயர்ந்த மொழியமைப்பை, அஃதாவது கற்ற பிராமணருடைய மொழியை ஏன் தங்களுடைய எழுத்துக்களில் ஒதுக்கிவிட்டிருக்கிறீர்கள்? எவ்விடத்திலும் அது பயன்படவில்லையா? அதே 'ஔசித்யம்' வாதப்படி அப்பாத்திரங்களின் தரத்திற்கேற்ப அம்மொழியைப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படவில்லையா?

இவ்வாறான இவருடைய கடிதங்களுக்குச் சாஸ்திரியாருடைய பதில்கள் நமக்குக் கிடைக்கவில்லை. எனினும் என் பாட்டனாருடைய கருத்துகளை நாம் ஓரளவிற்கு ஊகித்துக் கொள்ளுதல் இயலும். கற்றவர்களுடைய பேச்சுமொழியை ஆந்திரம் முழுமைக்கும் பொதுவாக வழங்கும் 'கிரந்திகா' மொழிக்குப் பதிலாகப் பயன்படுத்தும் போக்கினை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. காரணம் உயர்ந்தவர்களுடைய பேச்சு நடையிலும்கூட ஒற்றுமையோ தரநிலையோ இல்லாமையே எனலாம். இதற்காக அவர் தொடர்ச்சியான இயக்கம்

ஒன்றையே நடத்தினர்; அதன் பயனாக, அரசாங்கத்திலும் சரி, பல்கலைக்கழகத்திலும் சரி, தரமான தெலுங்கு மொழிக் கல்விக்கு எந்தவொரு இடையூறும் ஏற்படாமல் காத்திட்டார். இதனால், அப்பாராவ் அவர்களின் இயக்கம் தோல்வி கண்டது. தனி மனிதன் தெருவில் பேசும்போது அவன் விரும்பும் சொந்த மொழிநடையில் பேசலாம்; அஃது அவன் சுதந்திரம்; ஆனால் கல்விக் கூடங்களில், கல்விப் பயிற்சிகளில் தரமான மொழியும் இலக்கியங்களுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்று அவர் கருதினர். பேசுகின்ற மொழிக்கு ஆசிரியர் தேவையில்லை. அதனைத் தரநிலைப்படுத்திடவும் இயலாது. அவருடைய சொற்பொழிவொன்றில், பல பகுதிகளிலும் வழங்கப்பெறும் பல்வேறு மொழி அமைப்புகளையும் அவற்றிற்கிடையே காணப்படும் மாறுபாடுகளையும், ஒரு பகுதியில் ஒரு சொல்லுக்குப் பண்பார்ந்த பொருள் வழங்கப்படுதலும் அதே சொல்லுக்குப் பிறிதொரு பகுதியில்பண்பிழந்த பொருள் வழங்கப்படுதலுமான நிலையினையும் வெகு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டினர்; இச்சொற்பொழிவே பின்னர் 'கிராமியதேச நிரசனமு' என்ற பெயரில் அறிக்கையாக வெளியிடப்பட்டது. மேலும் மக்களின் கவனமின்மையால் பல சொற்கள் சிதைவடைந்தும் இழிவடைந்தும் ஓரிடத்தில் ஒரு பொருளும் பிறிதோர் இடத்தில் முற்றிலும் மாறான பொருளும் தந்திடக் காண்கிறோம். அது மட்டுமன்றி கற்றவர்கள் பயன்படுத்திய உயரிய பேச்சுமொழி கூட சின்னையசூரி காலத்திலிருந்தே சீரமைக்கப்பட்ட கிரந்திகா மொழி நடை அளவிற்கு உயர்வடைய முடியவில்லை.

பல எழுத்தாளர்கள் வீரேசலிங்கம் அவர்களே தற்கால உரைநடையின் தந்தை எனக் கொண்டாடிய போதிலும் அப்பாராவ், அவரின் உரைநடையை விரும்பவில்லையென்பதை அவருடைய மேற்கண்ட கடிதங்களின் மூலமாகவே நாம் உணரலாம். சின்னையசூரி அவர்கள் அழுத்தமான பழமைவாதியே எனினும் வீரேசலிங்கம் அவர்களைவிட, சின்னயசூரியையே திரு. அப்பாராவ் விரும்பியதாகத் தோன்றுகிறது. பேச்சுமொழிக்கு ஆதரவாக அவருடைய வாக்கு அமையவில்லை. சிறப்பான செயலாற்றலால் வீரேசலிங்கம் அவர்கள், அவருடைய சமகால இலக்கிய உலகில் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்தபோதும் திரு. அப்பாராவ் அல்லது திரு. ஜி. வி. இராமமூர்த்தி போன்றோரால் அவருடைய கருத்துகளை ஒப்புக்கொள்ள முடியவில்லை. அவர்கள் தங்களுடைய வாதத்தாலும் செல்வாக்காலும் எவரையும் வெல்ல முடிந்தது; எனினும் திரு. வேங்கடராய சாஸ்திரி அவர்களே

ஒரு தீரமுள்ள எதிரியாக விளங்கினர். சாஸ்திரியாரை அவர்கள் எவ்வாறேனும் வெற்றிகொள்ள முனைந்தனர். சாஸ்திரியாரை, புதிய பாதைக்கு மாற்றுவது அவர்களுடைய மகத்தான செல்வாக்கிற்குச் சான்றாக விளங்கும். புதுமைக் கருத்துக்களைப் பழமைப் பிடிப்புள்ள பெரியவர்கள் ஆமோதிப்பதால் அப்புதிய கருத்திற்கு மரபுமுறையான ஒப்புதல் கிடைத்த மாதிரியாகின்றது; இதனால் அப்புதிய கருத்து வலிமையும் பலராலும் ஏற்றுக்கொள்ளப்படும் பான்மையும் பெறுகிறது. இச்செய்தியினை அப்பாராவ் அவர்களுடைய கடிதங்கள் வாயிலாக நாம் தெளிவாக உணரலாம்.

திரு. ஜி. பி. அப்பாராவ் அவர்கள் 1915ல் காலமானதும் திரு. ஜி. பி. இராமமூர்த்தி அவர்கள் வியவகாரிகா இயக்கத்தின் தலைவர் ஆனார். திரு. அப்பாராவ் அவர்கள் நட்பு முறையிலும் தனிப்பட்ட வேண்டுகோள்கள் மூலமாகவுமே திரு. வேங்கடராய சாஸ்திரிகளை வெற்றிகொள்ள முயன்றார்; ஆனால் திரு. இராமமூர்த்தி அவர்கள் நேர் எதிரான வழிகளைக் கையாண்டு சாஸ்திரியாரை வெல்ல முயன்றார்; வேங்கடராய சாஸ்திரிகளின் எழுத்துகளில் தவறுகளைக் கண்டுபிடிக்க முனைந்தார். கிரந்திகா மொழியின் மூலமாகக் கருத்துகளைத் தெரிவிக்க முயலும்போது சாஸ்திரிகளைப் போன்ற புலமைமிக்க சான்றோரும் தவறுசெய்ய நேருகிறது. அந்த அளவிற்குக் கிரந்திகா மொழி திறமையற்ற ஒன்றாகும்; எனவே அம்மொழியை விட்டொழித்து வழக்கிலுள்ள பேச்சு மொழியையே எழுத்திற்கும் பயன்படுத்தல் வேண்டும் என்று அவர் கொள்கை வகுத்துப் பேசலானார். வேங்கடராய சாஸ்திரிகள், தமக்கும் இராமமூர்த்திக்கும் இடையே எந்தவிதமான வாக்குவாதமோ, பேச்சு வார்த்தையோ இல்லாதிருந்தபோதும் தமது நிலையினை விளக்கி முதற்காலம் பின்வருமாறு கூறினர்; 'எந்த ஒரு மொழிக்கும் தரத்தை நிர்ணயிக்கும் அளவுகோலாக நான் இருக்கமுடியாது; மாறாக அம்மொழியும் அதன் இலக்கணமுமே அதன் தரத்தை நிர்ணயிக்க முடியும்; அதுமட்டுமன்றி எனது எழுத்துகளில் தவறுகளோ, குறைபாடுகளோ காணப்பட்டால் அவை யாவுமே திருத்தப்படக்கூடியன – சரி செய்யப்படக் கூடியனவே'. சிறந்த புலமை மிக்கவர்கள்கூட சில நேரங்களில் அந்த அள்வு உயர்ந்ததை எட்ட இயலவில்லை என்பதற்காகவே தரமான ஒரு மொழியினை வழக்கிலிருந்து நீக்கிவிட்டு அந்த இடத்தில் வட்டார மொழிகளைப் பயன்படுத்தல் மிகப் பெரிய தவறாகும்; ஆயினும் திரு. 'கிடுகு' அவர்களின் தாக்குதல்கள் ஆழ்ந்த ஆராய்ச்சியோடு வெளிவரலாயின.

இதனால் பல புதிய கருத்துகளும் கண்டுபிடிப்புகளும் தோன்றி, பழைய கோட்பாடுகள் பலவற்றை மாய்த்தனவேயன்றி, தரமான மொழியை ஏதும் செய்ய முடியவில்லை.

1919ஆம் ஆண்டில்தான் கிடுகு இராமமூர்த்தி அவர்களுக்கு வேங்கடராய சாஸ்திரி மீது தமது முதல் தாக்குதலைத் தொடங்கிட வாய்ப்புக் கிடைத்தது. நெல்லூரில் "ஆந்திர சாகித்திய பரீட்சத்"தின் ஆண்டுக் கூட்டம் திரு. சாஸ்திரி அவர்களின் தலைமையில் கூடியபோது, அக்கூட்டத்தில் அவர் ஆற்றிய தலைமையுரையே தாக்குதலின் முதல் இலக்காயிற்று. கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் இருந்த பாடநூல்களிலும், பொதுவானசில இலக்கிய வெளியீடுகளிலும் காணப்பட்ட மொழியியல் தவறுகள் சிலவற்றை, பெயர் குறிப்பிடாது, சுட்டிக்காட்டிப்பேசினார் சாஸ்திரி அவர்கள். திரு. கிடுகு அவர்கள் அச்சொற்பொழிவில் சாஸ்திரிகளால் தாக்கப்பட்ட வெளியீடுகள் திரு. வீரேசலிங்கம் அவர்களுடையனவே என்பதை உணர்ந்துகொண்டு தமது ஆராய்ச்சியினைத் தொடங்கினார். 1921 ஆம் ஆண்டில் இதற்குப் பதிலுரையை வெளியிட்ட அவர் சாஸ்திரிகளின் தாக்குதல் நியாயமற்றது என்று குறிப்பிட்டார். பின்னர் அவர், 1897ல் வெளியான திரு. கோதண்ட வேங்கடரத்னம் அவர்களின் வெளியீடுகள் ஏற்புடையன என வாதிட்டதுடன் திரு. சாஸ்திரிகளின் சிருங்கார நைசதம் எனும் நூற்பதிப்பில் குற்றங்குறைகளை எடுத்துரைத்தார். 1921ல் திரு. கிடுகு அவர்களுக்குச் சிறப்பான ஆராய்ச்சி மற்றும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கையெழுத்துப் படிகள் ஆகியவற்றின் பெரும்பயன் கிட்டியது. இதிலிருந்து ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு இதனால் திரு. கிடுகு போன்ற மொழிவாணர்கள் திரு. கோகண்டா அவர்களின் எழுத்தினைக் கற்கவும் அவற்றை ஏற்றுக் காத்திடவும் வாய்ப்பு ஏற்பட்டன ; எனினும் இது ஒரு பகுதிதான் ; மறுபகுதியில் திரு. சாஸ்திரி அவர்களின் கருத்துகள் எப்போதும் இடம் பெற்றிருந்தன. கிடுகு அவர்களின் ஆய்வுகள் அவருடைய தனிப்பட்ட தாக்குதல்களினின்றும் வேறானவை ; அவர் சாஸ்திரிகளிடமிருந்து பதிலை வெகுவாக எதிர்பார்த்தார் ; ஆயினும் 67 வயதின் முதுமையினாலும் நோயில் வீழ்ந்த துன்பமான நாட்களிலும் வாழ்ந்துகொண்டிருந்த சாஸ்திரி அவர்கள் தாக்குதலினின்றும் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கான எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. திரு. கிடுகு அவர்கள் தமது கருத்தினைத் தனிப்பட்ட முறையில் கூறும்போது, பழமை மீது தாம் நடத்தும் தாக்குதல் ஏற்புடையதன்று என்று ஆராய்ச்சிகள் புலப்படுத்துமேயானால் தாம் பெரிதும் மகிழ்ச்சியே கொள்வதாகக் குறிப்பிட்டார். ஆயினும்

தம்முடைய கேள்விகளுள் ஒரு பாதிக்கே பதில் கிடைத்திருப் பதையும் மீதி அப்படியே இருப்பதையும் அவர் உணர்ந்தே யிருந்தார். கோகண்டாவையோ வீரேசலிங்கத்தையோ யாருமே முழுமையாக ஆதரிக்க முடியாது. ஒரு சில சொற்கள் சரியான வையாகத் தோன்றுவது போதுமானதல்ல. ஆராய்ச்சி மற்றும் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கையெழுத்துப்படிகளின் துணை கொண்டு சில சொல்லாட்சிகள் சரியானவையெனக் கண்டறியப்பட்ட போதிலும் அதுவே முழு இலக்கியத்திற்கும் போதுமானதன்று; அதுமட்டுமன்றி, தரமான தெலுங்கு உரை நடையை விலக்கிவிடுவதற்கு இது போதுமான வாதமாகாது. ஆமுக்த மால்யதா என்ற கிருஷ்ணதேவராயரின் இலக்கியத் திற்கு எழுதிய உரையின் வாயிலாக, பல இடங்களில் திரு. கிடுகு அவர்கள் பல சொற்றொடர்களின் உண்மைப் பொருளை உணராததையும் அதில் அவர் பல அடிப்படைத் தவறுகள் செய்திருப்பதையும் சாஸ்திரியார் சான்றுகளுடன் நிறுவினார்.

தற்பொழுது சீர்திருத்த வேகத்தால் உந்தப்பட்ட பொது மக்கள் பேச்சுமொழியையே எழுத்திற்கும் பயன்படுத்தி வரு கின்றனர். எனினும் கற்றோரனைவரும் வேங்கடராய சாஸ்திரி களின் கோட்பாடுகளையே பின்பற்றி மொழியின் தூய்மை யினைக் காப்பாற்றிடக் காண்கிறோம்; இத்தகைய மொழியே பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயன்படுத்தப் பெறுகின்றது. என் பாட்டனார் இங்குள்ள இலக்கியம் பற்றிக் கொண்டிருந்த மனப்பான்மையினை ஆங்கில மேதையான எட்மண்ட் பர்க் (Edmund Burke) அவர்கள் அமெரிக்க மற்றும் பிரெஞ்சுப் புரட்சிப் பற்றிக் கொண்டிருந்த மனப்பான்மையுடன் ஒப் பிட்டுக் காணுகிறேன். அமெரிக்கப் புரட்சியை ஆதரித்த பர்க் அவர்கள் பிரெஞ்சுப் புரட்சியை எதிர்த்தார். தற்பொழுது, வெகு காலம் கடந்துவந்த இன்று நமக்கு உண்மை புலனாகிறது. தற்கால உரைநடையாசிரியர்கள், வரலாற்றாசிரியர்கள், இலக் கியப் படைப்பாளர்கள் ஆகிய அனைவருமே தரமான கிரந்திகா மொழியே உயர்ந்த எண்ணங்களையும் தத்துவங்களையும் வெளி யிட மிக ஏற்புடைய மொழி எனக் கருதுகின்றனர். அதே நேரத்தில் நாளிதழ் ஆசிரியர்களும், அரசியல்வாதிகளும், வளரும் புதிய கவிஞர்களும் புதிய எண்ணத்தோடு அந்தந்த வட்டார மொழியில் படைப்புகளை உருவாக்கிடக் காணு கிறோம்; ஆயினும் ஒரு பகுதியில் வழங்கும் இம்மொழிகள் பிறிதொரு பகுதியில் வாழும் மக்களுக்கு எளிதில் புரியாத நிலையில் இருந்திடக் காண்கிறோம்.

# 8. நாடகப் பணிகளும் ஆந்திர பாஷாபிமானி சமாஜமும்

திரு. வேங்கடராய சாஸ்திரிகளின் வாழ்வில் அடுத்ததாகக் குறிப்பிடத் தக்க செய்தி, அவர் இலக்கியப் பொழுதுபோக்காக நடத்திவந்த நாடகப் பணிகளாகும். இவர் நாடக ஆசிரியராக மட்டுமன்றி, சிறந்த நாடக இயக்குநராகவும் விளங்கினுர். மற்ற எழுத்தாளர்களைப் போலல்லாது இவர் மேடையை மனத்தில் கொண்டே நாடகங்களை எழுதிவந்தார். கடந்த நூற்றுண்டின் இறுதியில் கல்லூரியில் இவருடைய மாணவர்களைக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆண்டிற்கான சமஸ்கிருத நாடகத்தைத் தவருமல் இவர் நடத்தி வந்ததாக நாம் அறிகிறேம். இந்த வகையில் இவருடைய முயற்சியால் அபிக் ஞான சாகுந்தலம், நாகாநந்தம், பிரியதர்சிகா ஆகிய நாடகங் கள் ஒன்றன்பின் ஒன்ருக நடிக்கப்பட்டன. உத்தரராம சரித நாடகம் பல மேலைநாட்டு உத்திகளோடு அமைந்து மேடையில் நடிப்பதற்கு அரிதான ஒன்ருக இருந்த நிலையினை மாற்றி, அந்நாடகத்தை வெற்றிகரமாக நடிக்கச் செய்தார். சாஸ்திரியாரின் மாணவர்கள் திறமைவாய்ந்த பயிற்சியால் மிகச் சிறப்பாக நடித்தமையால் இந்த நாடகங்கள் சென்னை மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன ; காளிதாசரின் சாகுந் தலம் மூல நூலைவிட சாஸ்திரியாரின் மாணவர்கள் நடித்துக் காட்டிய நாடகம் மிகச் சிறப்பான முறையிலே மக்களின் உணர்ச்சிகளைக் கொள்ளை கொண்டமையால் அதனை "அதி சாகுந்தலம்" என்றே அழைக்கலாயினர். இவ்வாறு கல்வி நிலை யங்களில் மட்டுமன்றி வெளியிலேயும் சமஸ்கிருத விரும்பி களால் இவருடைய நாடகங்கள் நடிக்கப் பெற்றன ; இவ் வகையில் சிறந்த வடமொழிப் புலமையுள்ளவரும் வழக்கறி ஞருமான காலஞ்சென்ற திரு. டி. எஸ் நாராயண சாஸ்திரி அவர்கள், வேங்கடராய சாஸ்திரியார் இயக்குநராக இருந்து நடத்திய உத்தரராம சரிதத்தில் இராமராக நடித்துவந்தார்.

பிரதாபருத்ரீயம் நாடகம் எழுதப்பட்டவுடனேயே நெல் லூரிலிருந்த கற்றேர் சிலர் அதனை மேடையேற்றிட முயன் றனர் ; ஆயினும் திறமையான இயக்குநரின்மையால் இத் தகைய தொடக்க கால முயற்சிகள் பெரும்பாலும் தோல்வியே கண்டன. சிறந்த மொழிவாணர்களான திரு. பூண்ட்ல இராம கிருஷ்ணய்யா, குணுபதி எனடி ரெட்டி முதலியோர் திரு.

சாஸ்திரி அவர்களின் நாடகங்களை நடத்துவதற்கென்றே ஒரு சங்கத்தை நிறுவினர்; இதுவே 'ஆந்திர பாஷாபிமானி சமாஜம்' என்றழைக்கப்பட்டது. இதில் சாஸ்திரியாரின் நாடகங்கள் மட்டுமே நடிக்கப்பட்டன; மற்ற நாடகாசிரியர்கள் நாடகபாணிக்கான பேச்சுமொழியில் உரையாடல்களை அமைக்காமையால் அவை நடிப்பதற்கு ஏற்றதன்று என இச்சங்கம் கருதியது. வேங்கடராய சாஸ்திரிகள் மட்டுமே நாடகாசிரியர் என்ற தகுதிக்குரியவர்; ஏனைய எழுத்தாளர்கள் அவ்வாறல்லர் என்பது அச்சங்கத்தினர் துணிபு. இச்சங்கம் நெல்லூரிலிருந்த படித்தவர்களையும், கவிஞர்களையும், எழுத்தாளர்களையும், சாஸ்திரியாரின் பழைய மாணவர்களையும் பெருந்திரளாகத் தம்பால் ஈர்த்தது. திரு. சாஸ்திரி அவர்களே அச்சங்கத்தின் தலைவராகவும் ஆனார்; அவரால் இயக்கப்பட்டு அவருடைய நாகாநந்தம், பிரதாபருத்ரீயம், சாகுந்தலம் ஆகிய நாடகங்கள் பன்முறை நடிக்கப்பட்டன.

நாடக மறுமலர்ச்சியால் "யக்ஷகானம்" வழக்கிழந்தது. பார்சி (Parsee) நாடகங்கள் கவர்ச்சியான உடை, காட்சியமைப்பு மற்றும் திரைசீலைகளால் மக்களிடம் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தன; மேடையமைப்புக் கலையால் நாடகங்கள் பெருஞ்செல்வாக்குப் பெறலாயின. ஆந்திராவின் ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்தனி நாடகக் குழுக்கள் தோன்றலாயின. ஜமீன்தார்கள் பலரும் அதில் பெரிதும் ஈடுபாடு கொண்டு ஆதரவு நல்கினர். இதற்கு முன்பே 'தர்மாவரம் இராமகிருஷ்ணமாச்சார்யலு' அவர்களுடைய புராண நாடகங்கள், இராயலசீமாப் பகுதியில் (பெல்லாரி, அனந்தபூர், கடப்பை, கர்நூல் மாவட்டங்கள்) பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தன. சென்னை 'சுகுணவிலாச சபா' அதனுடைய கலைப்பணிகளால் பெரும்பெயர் பெற்றிருந்தது. இச்சபாவின் பணிகளில் பெரும்பங்கு கொண்டிருந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ராவ்பகதூர் சம்பந்த முதலியார் ஆவார். இவரைத் தவிர திரு. வேதம் வேங்கடாசலய்யா என்ற 'நல்லையா' அவர்களும் இச்சபாவின் குறிப்பிடத் தக்க சான்றோருள் ஒருவர்; இவர் நம் சாஸ்திரியாரின் ஒன்றுவிட்ட சகோதரர் ஆவார். இச்சபையின் நடிகராக, நாடக ஆசிரியராக இயக்குநராக, ஒப்பனை வல்லுநராக இருந்து சபையின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றினர். சென்னையில் அண்ணா சாலையிலுள்ள இச்சபாவின் உட்சுவர்களில் உள்ள பல படங்களுக்கிடையே இன்றும் திரு. நல்லையா அவர்களுடைய முழு உருவ வண்ண ஓவியம் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்; மேலும் சென்னைத் திரைப்பட உலகின் ஒப்பனைக்

கலைஞர்கள் பலர் இன்றும் அவரைத் தம் குருவாகக் கருதிக் கொண்டிருக்கவும் காண்கிறோம்.

இக்காலத்தில் பிரதாபருத்ரீயம் நாடகம் நெல்லூரிலும் சென்னையிலும் மட்டுமன்றி ஆந்திரா முழுவதிலுமே மிகப் புகழ் பெறத் தொடங்கியது. எல்லோரும் வியக்கத்தக்க வகையில் வழக்கறிஞர்களும், பட்டதாரிகளும், பண்டிதர்களும், இலக்கிய எழுத்தாளர்களும் நாடகக்கலையில் மிக ஈடுபாடு கொண்டு தனித்தனிக் குழுக்களை உருவாக்கிக் கொண்டனர். ஒரு பிராமணர் நாடகத்தில் நடிப்பது இழிவான காரியம் என்றெண்ணி நாணங்கொண்ட அக்காலகட்டத்திலேகூட சாஸ்திரியாரின் சீடராயிருந்து அவர் நடத்தும் நாடகங்களில் நடிப்பதை யாரும் எதிர்த்திடவில்லை. சாஸ்திரி அவர்கள் ஒருபோதும் நாடகத்தில் நடித்ததில்லை; எனினும் அவருடைய நாடகங்களால் ஈர்க்கப் பட்ட ஆந்திர மக்களில் அநேகர் அவருடைய பிரதாபருத்ரீயம் நாடகத்தில் 'யௌகதந்திர'னை நடிப்பது அவரேதான் என்று எண்ணினர்.

இச் சமாஜம் தன்னுடைய நான்காவது நாடகமாக உஷா பரிணயம் நாடகத்தை 1904ஆம் ஆண்டில் அரங்கேற்றியது; அதன் பின்பு 1909ல் பிரியதர்சிகா நாடகம் அரங்கேற்றப் பட்டது. பொதுவாகவே இந்நாடகங்களில் பெண்கள் எவரும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை; 1930ஆம் ஆண்டுக்குப் பிறகே நாடகத் துறையிலும், திரைபடத் துறையிலும் பெண்கள் பங்கேற்கலாயினர். மிகக் கட்டுப்பாடான ஒழுங்கு நெறிகளைக் கடைபிடித்த சாஸ்திரி அவர்கள் ஒரு தலைவர் என்ற முறையில் தமது நாடகக் குழுவினர் அனைவரும் முழுமையான பயிற்சி பெற்ற அணியாக இல்லாத வரையில் தமது நாடகங்களை நடத்துவதற்கான விளம்பரத்தைக்கூட வெளியிட மாட்டார். சபாவின் ஓர் உறுப்பினருக்கு எழுதிய தமது கடிதத்தில் சாஸ்திரியார் பின்வருமாறு எழுதுகிறார்: "நாடக நடிகர்கள் அனைவரும் தத்தம் பாத்திரங்களை முழுமையாகப் பாடம் செய்து நிறைவான பயிற்சியினைப் பெறாத வரையில் நாடகத்தை மேடையேற்றமாட்டேன்; உடல் நலத்தையும் நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள். தேவையெனில் காட்-லிவர்-ஆயில் அருந்திடவும் தயங்க வேண்டாம்".

பிறகு 1916ஆம் ஆண்டில் சாஸ்திரியார் தம்முடைய மூன்றாவது சொந்த நாடகமும் இரண்டாவது வரலாற்று நாடகமு மான "பொப்பிலியுத்த நாடகத்'தை வெளியிட்டார். இந்நாட கத்தில் கதையின் தன்மைக்கேற்ப மொழிநடையிலும் ஒரு மாறுதலை நாம் காணுகிறோம்; இது நேரடியான, எளிய, தற்கால

மொழி அமைப்புகளுக்கேற்ப அமைந்து, ஆந்திராவின் பலதிறப்பட்ட மக்களின் உள்ளங்களையும் தொடுகின்ற அளவிற்கு அமைந்திருந்தது. அவருடைய பிரதாபருத்ரீயம் மற்றும் உஷா நாடகம் ஆகியவற்றில் வரும் கவிதைகள் யாவும் முற்றிலும் வேறான அமைப்பில் இருந்திடக் காணுகிறோம். இவற்றில் காணப்பெறும் 'பிரபந்தம்' அல்லது காவிய அமைப்புகள் மறையத் தொடங்கி, அந்த வட்டாரத்திலிருந்த ஜமீன்தாரி முறைச் சூழல்கள் இடம் பெறலாயின. இவ்வகையில் வரலாற்றுப் பாத்திரங்களாகவும், நம்முடைய இன்றைய வாழ்வு முறைக்கு அப்பாற்பட்ட பாத்திரங்களாகவும் தோன்றிய போதும் இவை அன்றுட வாழ்வு நெறியில் இன்றைய மக்களின் வாழ்வு நெறியை ஒத்து நடந்து அவர்தம் அனுதாபத்தைப் பெறுவனவாகவே அமைந்துள்ளன. ஆயினும் நூல் வடிவிலான இந்நாடகம் படிக்கின்ற சிறந்த இலக்கியச் சுவைஞருக்கும் திறனாய்வாளருக்கும்கூட இதற்கு மாறான எண்ணத்தையே தோற்றுவித்தன. சாஸ்திரியாரின் நண்பரும் சிறந்த நாவலாசிரியரும் திறனாய்வாளருமான காலஞ்சென்ற திரு. D. வேங்கடராம ரெட்டி, தம்முடைய மன நிறைவின்மையைக் கடிதம் மூலமாகப் பின்வருமாறு தெரிவிக்கிறார்; 'உயரிய கருத்து வளமிக்க கதையினைக் கீழ்த்தர மக்களுடைய எண்ணங்களுக்கேற்றதாக அமைந்திருப்பது மட்டமான தியாகச் செயலாகும்'' ஆனால் இந்நாடகத்தை மேடையில் காண நேர்ந்தபொழுது அவருக்கு தம்முடைய முந்தைய எண்ணத்தை முழுமையாக மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. மேடையில் நாடகத்தைப் பார்த்த பின்பு மீண்டும் ஒருமுறை மூலநூலை ஓய்வு நேரத்தில் படித்தும் பார்த்தார். அதன்பின் அவர் சாஸ்திரியாருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு எழுதலானார்;

''பொப்பிலி நாடகம் வெளியான பிறகு இதுவரை அதனை மேடையில் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. நேற்று சில பணிகளின் பொருட்டாக நான் நெல்லூரில் தங்க நேர்ந்தது. என்னுடைய பணிகளை முடித்த பிறகு நான் படுக்கைக்குச் சென்றேன். ஏறக்குறைய இரவு 12 மணியிருக்கும்; நகர்மன்றத்திலிருந்து இசையொலிகள் எழுந்தவண்ணமிருக்கக் கேட்டேன். முதலில் அது ஏதோ திரைப்பட நிகழ்ச்சியென்றே எண்ணியிருந்தேன். மேலும் சிறிது நேரம் பொறுத்திருந்தேன். ஆயினும் எனது ஆவலை அடக்கிக்கொள்ள முடியாதவனாக நகர்மன்றத்தின் பக்கமாகச் சென்றேன். மன்றத்தின் முன்பாக வைக்கப்பட்டிருந்த விளம்பரப் பலகையின் மூலமாக அன்று நடந்துகொண்டிருந்த நிகழ்ச்சி,

சமாஜத்தாரால் நடத்தப்பெறும் பொப்பிலி நாடகமே என்பதை அறிந்தேன். உடனே அனுமதிச்சீட்டு கூடப் பெற்றுக் கொள்ளாது நேராக மன்றத்தினுள்ளே சென்றேன். நான் காவது அங்கம் அப்பொழுதுதான் முடிந்திருந்தது திரு. சிவராமையா அவர்களும் அங்கிருந்தார்; நாங்கள் அதி லிருந்து நாடகம் முடியும் வரை அங்கேயே இருந்தோம்.

இக்கலைநிகழ்ச்சி மிக வனப்புடையதாக இருந்தது. இந் நாடகத்தின் சிறப்பியல்புகள் இதற்குப் பின்பே எனக்கு விளக்கமாயிற்று. இதனால் நான் பெருமகிழ்ச்சியுற்றேன். இந் நாடகத்தின் முற்பகுதி மிக அழகாக நடிக்கப் பெற்றதென்று திரு. சிவராமய்யா கூறினர். ஆனால் முழுவதும் பார்க்கமுடிய வில்லையே என்ற வருத்தம் எனக்கு மிக உண்டு. பாத்திரப் படைப்பும், உணர்ச்சிமயமான நிகழ்ச்சிகளும் மொழியமைப்பும் ஒருங்கு சேர்ந்து இந்நாடகத்தை மிகச் சிறந்த படைப்பாக்கி யிருக்கிறது.

நாடக நடிகர்களும் மிகச் சிறப்பாகத் தங்கள் பணியை நிறைவேற்றி நமது பாரட்டிற்குரியவர்களாகின்றனர். ஆயினும் 'புஸ்ஸி' தம்முடைய உரையாடலை அயல்நாட்டு மரபோடு பேசியிருந்தால் மேலும் சிறப்பாக இருந்திருக்கும். எனினும் அவருடைய பாத்திரம் வாழ்வியலோடு ஒத்தே இருந்தது.

நாடகத்தைக் காணுகின்ற மக்களைச் சோகம், வீரம், ஆற் றல் ஆகிய உணர்ச்சிகள் ஒத்த தன்மையில் ஆட்கொண் டன. இவ்வகையில் இந்நாடகம் மகத்தான வெற்றிபெற்ற தாகவே கொள்ளலாம். முன்பொருமுறை பொப்பிலி நாடகம் பிரதாப நாடகத்தை விடக் கீழானதே என்று நான் கூறியிருந்த தவறான கருத்தை எண்ணி மிக வருந்துகிறேன்.

'ஆமுக்தா'*வின் வளர்ச்சி எந்த அளவிலுள்ளது? உத்தர ராம சரித நாடகத்தையும் மேடையில் காண நான் மிக ஆவலா யுள்ளேன்.''

தங்கள் பணிவுள்ள,

D. வெங்கடராம ரெட்டி.''

இவ்வாறான இந்த பொப்பிலி நாடகம் நூல் வடிவில் அச்சிடப்பட்டு வந்தபோது, சாஸ்திரியாரின் தலைசிறந்த அன்பரும், வேங்கடகிரி மகாராஜாவுமான திரு. இராஜகோபால கிருஷ்ண யச்சேந்திரா அவர்கள் புலிவேட்டைக்குச் சென்ற

---

* ஆமுக்தா என்பது கிருஷ்ணதேவராயர் இயற்றிய ஆமுக்தமால்யதா என்ற காவியத்தின் சுருக்கப் பெயராகும். திரு. சாஸ்திரி அப்போது அதற்கு உரை எழுதிக் கொண்டிருந்தார்.

போது எதிர்பாராத விபத்தொன்றில் சிக்கி மரணமடைந்தார்; இது சாஸ்திரியாருக்கு மிகப் பெரிய அதிர்ச்சியினை அளித்தது. இதனால் அவருடைய நாடகங்களுக்கு ஒரு கற்றறிந்த திறனாய்வாளரின் பாராட்டுரை கிட்டாமல் போயிற்று. இந்த நாடகத்தில், தென்னிந்தியாவிலிருந்த ஜமீன்தார்களில் ஒரு பிரிவினரான 'வேலமா' இனம் மிகவும் உயர்த்திப்பேசப்பட்டிருந்தது. காலஞ்சென்ற மகாராஜா இந்த இனத்தைச் சார்ந்தவராவார். இவ்வாறு அவருடைய வழிமுறையைப் போற்றிடும் இந்நூல் வெளியாகும் தருணத்தில் அவர் மறைந்தது துன்பத்தை மேலும் மிகுதியாக்கியது. மேலும் இது நிகழ்வதற்கு ஓராண்டிற்கு முன்பே சாஸ்திரியாரின் மற்றொரு நண்பரான குருஜடா அப்பாராவ் அவர்களும் காலமாகிவிட்டார். இதனால் நாடக மொழிநடை குறித்தோ, கவிதைகளின் கருத்துகள் குறிததோ தம்முடைய தீர்ப்புகளை வெளியிடக்கூடிய ஆற்றல் படைத்தவர் எவரும் இல்லாத நிலை ஏற்பட்டது. விஜயநகர மகாராஜாவின் நண்பராகவும் சாஸ்திரியார் இருந்தபடியால், நாட்டுப்புற இலக்கியங்களிலும், பிற நாடகத்திலும் குறிப்பிட்டிருந்தபடி விஜயராம ராஜாவை மோசமானவரென்றும் கொடுமையானவரென்றும் சித்திரித்துக் காட்ட அவர் விரும்பவில்லை; அதைப் போன்றே அரங்கராயரை உயர்ந்த குணங்களின் இருப்பிடம் என்றும் அவர் காட்ட முனையவில்லை. வளர்ந்து வரும் தேசீயக் கொள்கைகளின் விளைவாக மக்களின் கருத்துகளில் மாற்றங்கள் நிகழ்ந்தன. இதனால் எழுத்தாளர்கள் அனைவருமே, இரண்டு ஜமீன்தார் குடும்பங்களையும் நட்புடையனவாகவே காட்டி, விரும்பத்தகாத நிகழ்ச்சிகளையெல்லாம் விலக்கி, நிகழ்ந்த தவறுகளையெல்லாம் பிரெஞ்சு ஆளுநர் மீதோ அவருடைய உதவியாளர் மீதோ, அல்லது அவருடைய ஆலோசகரும், நிஜாமின் உதவியாளருமான "ஹைதர்ஜங்" மீதோதான் சுமத்திக் காட்டினர். 1914ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 17ஆம் நாளிட்ட தம்முடைய கடிதம் ஒன்றில் திரு. அப்பாராவ் அவர்கள் எழுதுகிறார்: "பொப்பிலியின் முற்றுகை குறித்துத் தாங்கள் எழுதத் திட்டமிட்டுள்ள நாடகம் பற்றி அறிந்தேன். அதனை நீங்கள் முடிக்கவில்லை என்பது வருந்தத்தக்க செய்தியாகும். மேலும், விஜயநகரத்தினை இழிவு படுத்தக் கூடிய வகையில் தாங்கள் எதையும் எழுதவில்லை என்றும் நம்புகிறேன். அக்காலகட்டத்தைப் பற்றிய பல வரலாற்றுக் குறிப்புகளை நான் வைத்திருக்கிறேன்; தாங்கள் இப்பணியை முடிப்பதாயின் நான் அவற்றைத் தங்களிடம் அளிததிட விருப்பமாயுள்ளேன். அந்தக் குறிப்புகளின்வாயிலாக விஜய ராம ராஜா ஒரு தேசபக்தர் என்பது புலனாகும். சர்க்கார் பகுதி

யிலிருந்து பிரெஞ்சுக்காரர்களை விரட்டிட முனைந்த அவர் அதற்காகப் பொப்பிலியினுடைய ஆதரவையும் வேண்டினார். ஆனால் பொப்பிலி அதற்கு மறுத்துவிட்டார்.''

திரு. சாஸ்திரி அவர்கள், அப்பாராவுடைய குறிப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை. ஆயினும் அவருடைய இரண்டாம் பதிப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.

19-2-1935 நாளிட்ட இந்து நாளிதழ் தன்னுடைய மதிப்புரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறது: ''காலஞ்சென்ற வேதம் வேங்கடராய சாஸ்திரிகளின் நாடகமான இந்நூலைப் பதிப்பாசிரியர்கள் சிறப்புடன் வெளியிட்டிருக்கின்றனர். இதன் பதிப்பாசிரியர் காலத்திலேயே இந்நாடகம் பலமுறை மேடைகளில் நடிக்கப்பெற்றது. மேடையில் நடிக்கப்பட்டபோதே இந்நாடகத்தின் உரையாடல்களில் பல மாற்றங்களைச் செய்ய வேண்டிய தேவை ஆசிரியருக்கு ஏற்பட்டது. இந்தப் பதிப்பில் அம்மாற்றங்கள் அனைத்தும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதே கதையினையொட்டி தெலுங்கில், பல நாடகங்கள் முன்பே எழுந்துள்ளன எனினும், உரையாடல்களின் வளத்தாலும், இலக்கியப் பாங்கினாலும் வேங்கடராய சாஸ்திரிகளின் நாடகம் ஈடுஇணையற்று விளங்குகிறது. குறிப்பாக, பொப்பிலியின் மன்னரான அரங்கராயருக்கும் முகலாயப் படைகளுக்கும் இடையே நிகழ்ந்த மிகக் கடுமையான போரினை விளக்கும் இடம் மிகச் சிறந்த ஒன்றாகும். உலகின் எந்த நாடக இலக்கியத்திற்கும் ஈடாகும் வகையில் இஃது அமைந்திருக்கக் காணலாம்.

ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராயிருந்த பிங்காலி இலட்சுமிகாந்தம் அவர்கள் சாஸ்திரியாரின் பிறந்த நாள் விழாவொன்றில் பேசும்போது இந்நாடகத்தினை வெகுவாகப் புகழ்ந்துரைத்திடக் காண்கிறோம். 16-1-1936ஆம் தேதிய இந்து நாளிதழில் வெளியான இவ்வுரையின் சுருக்கம் வருமாறு: ''பெரும்புகழ் வாய்ந்த கலாபூர்ணா ஒரு தேசீயக் கவியாகத் திகழ்ந்தவர்; தெலுங்கு இலக்கிய வரலாற்றில், ஸ்ரீநாதர், பல்நாடி வீரசரிதம் மற்றும் காதமராஜு கதை ஆகிய தனது படைப்புகளில் தேசீயக் கருவியினைப் பயன்படுத்திட முன் வந்தார்; எனினும் காலஞ்சென்ற கலாபூர்ணா அவர்களே தன்னுடைய காலகட்டத்தைப் பிரதிபலித்திடத் தக்க வகையில் பிரதாபருத்ரீயம் மற்றும் பொப்பிலி யுத்தம் ஆகிய நாடகப் படைப்புகளை தேசீயம் தழுவிய பாங்கில் ஈடுஇணையற்ற முறையில் உருவாக்கியவராவார். இவருக்குப் பின்வந்தோரால் இவருடைய அளவிற்குச் சாதித்திட முடியவில்லை. இக்

கவிஞரின் திறமை அவருடைய இந்த நாடகத்திலும் திறனாய்விலும் சிறப்புடன் புலப்படுகிறது." திரு. இலட்சுமிகாந்தம் அவர்கள் சாஸ்திரியாரை புலமை சான்ற பெரியோர்களுள் ஒருவராகச் சுட்டிக் காட்டுகிறார்; ஆந்திராவின் மறுமலர்ச்சிக்காகப் பெருந்தொண்டாற்றிய பெரியோருள் தலைசிறந்தவர் இவரெனவும் குறிப்பிடுகிறார்.

மேற்குறிப்பிட்ட சமாஜம் 1925 ஆம் ஆண்டுவரை சிறப்பாக விளங்கிவந்தது. தரமான இலக்கியப் படைப்புகளை உருவாக்கிய அளவிற்கு அதனால் பொருளாதார வெற்றியுள்ள நாடகங்களை நடத்த முடியாது போனமையால் தன்னுடைய வெள்ளிவிழா ஆண்டோடு அதன் பணிகள் முடிக்கப்படலாயின. இந்த சமாஜம் முறைப்படி கலைக்கப்படவில்லையெனினும், இச்சங்கத்தின் உறுப்பினர் பலரும் முதியவர்களாக இருந்தமையாலும் முதன்மையான உறுப்பினர்கள் தலைவருக்கு முன்பு இறந்துவிட்டமையாலும் அதன் பணிகள் தாமாகவே நின்றுபோயின. இச்சங்கத்தின் கடைசி நிகழ்ச்சி 1925ல் இதனுடைய வெள்ளிவிழா இரவன்று நடிக்கப்பெற்ற இரத்னாவளி மொழிபெயர்ப்பு நாடகமாகும். தம்முடைய பொப்பிலி நாடகத்திற்குப் பிறகு, ஸ்ரீ ஹர்ஷரின் இரத்னாவளியையும், காளிதாசரின் மாளவிகாக்னிமித்ரம், விக்ரமோர்வசியம் ஆகியவற்றையும் சாஸ்திரியார் மொழிபெயர்த்து வெளியிட்டார். இவற்றுள், மாளவிகா நாடகத்தை மேடையில் நடத்த இயலவில்லை. ஆனால் விக்ரமோர்வசியம் 1922 ஆம் ஆண்டில் பலமுறை மேடையேற்றப்பட்டு வெற்றிகரமாக நடிக்கப்பட்டது. இந்த மூன்று நாடகங்களுமே திரு. D. வேங்கடராம ரெட்டி அவர்களின் இடையறாத தூண்டுதலாலும் ஒத்துழைப்பாலுமே மொழிபெயர்க்கப்பட்டன; இதுமட்டுமன்றி அவருடைய விருப்பத்திற்காகவே, உத்தரராம சரித நாடகமும் வெற்றிகரமாக மேடையேற்றப்பட்டன.

1925ஆம் ஆண்டிற்குப் பிறகு, இந்த நாடகங்கள் தம்முடைய மதிப்பினை இழக்கவில்லையெனினும், பெருமளவில் நடிக்கப்பெறவில்லை. முழுமையாக நடிக்கப்பெறவில்லை என்றாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில சிறப்பான காட்சிகள் ஆங்காங்கே நடிக்கப் பெற்றன; சாஸ்திரிகளுடைய பத்து நாடகங்களுள்ளும், பிரதாபருத்ரீயம், பொப்பிலி யுத்தம், சாகுந்தலம் ஆகிய நாடகங்கள் இன்றும் நாடகவுலகில் பெரிதும் வரவேற்கப்படுகின்றன; ஏனைய பிற நாடகங்கள் பல்கலைக் கழகங்களில் பாட நூல்களாக பயிலப்பட்டு வருகின்றன.

## 9. இணையற்ற விளக்க உரைகள்

1915 ஆம் ஆண்டில் 'சூரியராயர்' அகராதியின் அலுவலகம் பித்தாபுரம் என்ற இடத்திற்கு மாற்றப்பட்டபொழுது, என் பாட்டனர் அதன் ஆசிரியர் பொறுப்பை விட்டு விலகி, தம்முடைய அச்சகப்பணிகளிலேயே மீண்டும் ஈடுபடத் தொடங்கினர். ஆயினும் இத்தொழிலில் அவருக்குத்தோல்வியே நேர்ந்தது; ஏறத்தாழ 5 அல்லது 6 ஆயிரம் ரூபாய்க்குமேல் கடனும் ஏற்பட்டுவிட்டது. இறுதியாக அவர், தமது அச்சகத்தை விற்றுக் கடன் முழுவதையும் அடைத்துவிட்டு, எஞ்சியுள்ள தொகையை வைத்துக்கொண்டு, தமது இறுதிக் காலத்தை அமைதியாகக் கழித்திட எண்ணினர். மேலும் இச்சமயத்தில் உலகப் பெரும் போரின் விளைவாக வாழ்க்கைச் செலவு மிகுந்து நிலைமை மோசமாகியது. தம்முடைய நூல்களைப் பிற அச்சகங்களில் அச்சிட்டு வெளியிட்டு அதன் மூலம் வரும் வருவாய் போதும் என முடிவு செய்தார். 1919ல் அவருடைய அச்சகம் முழுவதும் விற்கப்பட்டுக் கடன் ஒரு பைசாவும் இன்றித் தீர்க்கப்பட்டுவிட்டது. அதன் பிறகு அவருடைய வெளியீடுகளின் விற்பனையிலிருந்தும், அவருடைய வீட்டின் சில பகுதிகளை வாடகைக்கு விட்டதன் மூலமாகவும் வந்த தொகையே அவரது வருமானமாயிற்று. அச்சகத்தை மேற்பார்வையிட்டும், சொல்லகராதிப் பணிகளில் ஈடுபட்டும் மிகுதியாகச் சிரமப்பட்ட நிலைமாறி, இப்பொழுது அவருடைய நேரம் மிச்சப்படுவதையும் ஓய்வையும் அவர் நன்குணர்ந்தார்.

1913ல் சிருங்கார நைஷதம் நூலின் உரையினை எழுதி வெளியிட்டார். அதற்கு முன்பே புகழ்வாய்ந்த பேரரசராக விளங்கிய கிருஷ்ண தேவராயர் எழுதிய ஆமுக்தமால்யதா எனும் காவியத்தையும் உரையுடன் எழுதி வெளியிட எண்ணியிருந்தார். முதலில் 'ஆமுக்தா' காவியத்திற்கு உரை எழுதி வெளியிட விரும்பிய சாஸ்திரியார், எண்ணிய அளவிற்கு அப்பணி எளிதாக இல்லாமையால் முதலில் நைஷதத்திற்கே உரை எழுதி வெளியிட்டார். சூழ்நிலையும் நைஷதத்திற்கு வாய்ப்பாகவே அமைந்தது. நெல்லூர் நகரத்திற்கு 'நகர் மன்றத்தை' வழங்கியவரும் சிறந்த இலக்கியச் சுவைஞருமான திரு. இரெபால இலட்சுமிநரச ரெட்டியார் இந்நூலின் பதிப்புச் செலவுகள் முழுவதையும் தாமே ஏற்றுப் பொருளுதவி செய்தார். நெல்லூரில் சாஸ்திரியாரின் நைஷத உரை பற்றிய சொற்

பொழிவொன்றைக் கேட்ட ரெட்டியார் மறுநாளே சாஸ்திரி யாரைச் சந்தித்து அவருடைய கையில் அந்நூல் வெளியீட்டுக் கான முழுத் தொகையையும் கொடுத்தார். ஒருசில திங்களுக் குள்ளாக அந்நூல் உலகின் கைகளில் தவழ்ந்தது. ரெட்டி யாரின் அன்புக்குக் காணிக்கையாக்கப்பட்ட அந்நூல் வெளி யான 1913ஆம் ஆண்டு என் பாட்டனாரின் வாழ்வில் மட்டு மன்றி, நெல்லூரின் வரலாற்றிலும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

டாக்டர் சி. ஆர். ரெட்டி அவர்கள் என் பாட்டனாருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'கேள்வி களுக்கு அப்பாற்பட்ட அளவில் மிகச் சிறந்த உரை நூலொன்றை, தெலுங்கு உலகில் இதற்கு முன் யாரும் படைத் திராத வகையில் தன்னிகரில்லாத ஒன்றாகப் படைத்திருக்கிறீர் கள் என்றே எண்ணுகிறேன். இந்த நாளில் தெலுங்கு மொழி யுலகம் பெறற்கரிய ஓர் அறிஞர் பெருமகனை பழைய சாதனை களைப் புதுமைப் பொலிவோடு உருவாக்கிக் காட்டிய இலக் கியச் செல்வரைப் பெற்றிருக்கிறது'.

திரு. குருஜடா அப்பாராவ் பின்வருமாறு எழுதுகிறார்: "இப்பணியினை நிறைவேற்றினமைக்காகத் தங்களை பெரிதும் பாராட்டுகிறேன். தெலுங்கு இலக்கிய மாணவர்க்கு இந்நூல் விலைமதிப்பற்றதாகும். தங்கள் உரையின் துணையின்றி நைஷதம் சாதாரணப் புலவர்களால் புரிந்துகொள்ள இயலாது. மற்ற யாரும் செய்வதைக் காட்டிலும் மிகச். சிறப்பாகத் தாங்கள் இப்பணியைச் செய்திருக்கிறீர்கள். தங்களுடன் உறவு கொண் டுள்ள அந்தப் பெரியவர்கள் என்னுடைய சிறிய எதிர்ப்பினை அச்சிட மறுத்திருக்கிறார்கள்; அதில், தற்கால உரைநடை எழுத்தாளர்களுடைய எழுத்துகளையெல்லாம் அலசி ஆய்ந் துள்ள நான் தங்களுடைய எழுத்துகள்—கல்வியறிவில்லாத கும்பல்களின் எழுத்துக்களினின்றும் எவ்வாறு வேறுபடுகிற தென்றும் சுட்டிக்காட்டி யிருக்கிறேன். உங்களுடைய நண்பர் கள் அனைவரும் தகுதிக்குறைவான இளைஞர்களைப் போற்று வதில் ஒருபோதும் களைத்ததில்லை. ஆயினும் தற்போது இப் போக்கில் சற்று ஓய்ந்திருக்கிறார்கள். திறனும் திறமையும் தகுதிசான்ற புலமையும் இல்லாத சிலர் முன்மாதிரி எனக் கண்மூடித்தனமாக ஏற்றுள்ள உரைநடை முற்றிலும் தகுதி யற்றது என்று முதன் முதலில் துணிவுடன் சுட்டிக் காட்டி யுள்ளேன். தங்களுடைய நண்பர்கள் உங்கள் பொருட்டுச் சாதாரண நீதியுடன்கூட ஒருபோதும் நடந்து கொள்ளவில்லை. உங்களுக்கு எதிரணியிலிருந்தாலும் உங்களுடைய பழைய

நண்பராகவும் ஒருதொண்டனுகவும் இருக்கும் நானே தாங்கள் புலமை சான்ற எழுத்தாளர் எனும் உரியமதிப்பினை அளிக்கின்றேன்.

என்னுடைய எதிர்ப்புரையினை நீங்கள் படித்துப் பார்ப்பீர்களேயானல் அதில் நான் தங்களைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறேன் என்பதைத் தாங்கள் புரிந்துகொள்வீர்கள். நான் தங்களை மிகையாகப் பாராட்டியதாக ஒருமுறை திரு. இலட்சுமண ராவ்* அவர்கள் குறிப்பிட்டிருக்கிருர். ஆனல் தன்னுடைய சொந்தக் காரியங்களுக்காகப் பொய்ப் புகழ்ச்சி செய்பவர் அவரேதான். என்னுடைய கருத்துகளை நான் வெளிப்படையாகப் பறைசாற்றுகிறேன். அவை எப்போதும் என்னுடைய நேரிய திடமான கருத்துகளாகும்.

தெலுங்கு மொழிக்கு இன்னுமொரு தொண்டினை நீங்கள் ஏன் செய்யக்கூடாது? மகாபாரதக் கதையை, உரைகளிலும் கட்டுக்கதைகளிலும் வழங்கப்படுவது போன்ற பழைய முறையும் புதிய முறையும் கலந்த கலப்பு முறையில், நீங்கள் எழுத வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அந்த நூலின் முகவுரையில், இந்நூல் பள்ளிமாணவர்களுக்காக எழுதப்படவில்லை; கல்வியறிவில்லாத சாமானிய மக்களை மனத்தில் கொண்டே எழுதப்பட்டது என்றுவது அல்லது தாங்கள் விரும்பும் எவ்விதமாவது குறிப்பிடுங்கள். அதனை நான் அச்சிட்டு வெளியிடுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

ஜி. வி. அப்பாராவ்

வேங்கடகிரி மகாராஜா என் பாட்டனுருக்குப் பேட்டியளித்து, அந்த உரையைப் பற்றிப் பல மணி நேரம் உரையாடினுர். என் பாட்டனுர் இதுகுறித்து நெல்லூரிலிருந்த தம்முடைய தம்பி திரு. வேங்கடாசலம் அய்யர் அவர்களுக்கு 11-3-1914 ஆம் நாளில் எழுதிய கடிதத்தில் கூறுவதாவது; என் அன்புக்குரிய தம்பிக்கு! மதிப்பிற்குரிய வேங்கடகிரி மகாராஜா அவர்களைப் பேட்டி காணும் வாய்ப்பு, திங்கட்கிழமை கிடைத்தது. என்னுடைய சிருங்கார நைஷதம் உரை குறித்து அவர் தம்முடைய மகிழ்ச்சியினையும் பாராட்டுதல்களையும் தெரிவித்தார். அவருடைய பாராட்டுகள் எனது உரையின் பகுதிகளை ஒன்றுவிடாமல் அலசி ஆய்ந்து நின்றது; சிறந்தவாதத் திறமை

*திரு. கே. வி. இலட்சுமண ராவ் ஆந்திரத்தின் சிறந்த வரலாற்றுளர் ஆவார்.

யுடன் அமைந்து இருந்தது. என்னுடைய பணிகுறித்து அவருடைய பாராட்டுரைகள் மிகச் சிறந்தவையாகும்.''

திரிவேணி (மே, ஜூன் 1929) இதழில், நெல்லூரைச் சேர்ந்த பேராசிரியர் திரு. ஜி. வி. சுப்பராமய்யா எம்.ஏ. அவர்கள் என் பாட்டனுரைக் குறித்துப் பின்வருமாறு எழுதுகிருர்.

''நம்மைப் பெரிதும் கவர்வன மனித இயல்பு கடந்த அவருடைய உயர்ந்த புலமைச் சிறப்பும் அறிவுத் திறனுமே யாகும். இலக்கிய உலகின் 'ஹெர்குலிஸ்' என்றே அவரைக் குறிப்பிடலாம். இதனை அவருடைய புத்தகங்களின் எண்ணிக் கையைக் கொண்டு மட்டுமல்லாமல் இவற்றின் தன்மையி னுலும் அறியலாம். இரண்டு டஜனுக்கு மேற்பட்ட முதன்மை யான தெலுங்கு மற்றும் சமஸ்கிருத இலக்கியங்களைச் சிறப்பான குறிப்புரைகளையும், விளக்கங்களையும் எழுதிப் பதிப்பித்ததும் புகழ்பெற்ற ஏழு சமஸ்கிருத நாடகங்களையும், கதாசரித் சாகரத்தையும் மொழிபெயர்த்தும், மூன்று நாடகங்களைத் தாமே புதியனவாக எழுதியுள்ளதும் இவை தவிர, பல தெலுங்குப் படைப்புகளை உருவாக்கியுள்ளதும் கலாபிரபூர்ண அவர்களின் இலக்கியப் பேரறிவைச் சுட்டிக்காட்டத் தக்கன. அதுமட்டுமன்றி, மேற்குறித்த படைப்புகள் முற்றிலும் தனி யொரு மனிதரால் உருவாக்கப்பட்டனவே என்றறியும்போது நமது வியப்பு மேலும் பன்மடங்கு அதிகமாகிறது; அதோடு இப்படைப்புகள் தம்மைப் படைத்தவரை இலக்கியவுலகில் என்றும் மரணமற்றவராக்கிவிட்டன. அவருடைய மேக சந்தேசம் உரையும், நைஷதம், ஆமுக்தமால்யதா, பிரசன்ன இராகவ விமர்சனம் ஆகிய பதிப்புகளும் அவர் தம் சொந்தப் படைப்பான பிரதாபருத்ரீயம் நாடகமும் காலத்தால் அழியாத தன்மையுடையனவாம். அவருடைய பேரறிவு, சாதனைகளை உருவாக்குவதற்கென்றே படைக்கப்பெற்றது; அவருடைய படைப்புத்திறன் மிகச் சிறந்த படைப்புகளை உருவாக்கும்வரை தன்னிறைவு கொள்ளவில்லை. மிகக் கடினமான இலக்கியமான ஆமுக்தமால்யதாவினைப் பதிப்பித்தும், நாடகம் என்பதை விடப் பெருங்காப்பியம் எனத்தக்க பத்து அங்கங்களைக் கொண்ட நாடகம் ஒன்றை எழுதியதும், படையெனத் திரண் டெழுந்த பண்டித எதிரிகளிடம் தீரத்துடன் தனித்து நின்று போராடியதும் அவருடைய பேராற்றலை விளக்குவனவாகும். இவை தவிர்த்த ஏனைய படைப்புகள் யாவும் சாஸ்திரியாரைப் பொறுத்தவரை ஒரு சிறு குழந்தை விளையாட்டுப் போன்ற வையே எனலாம். மேலும் முதன்மையான நிறுவன சம்பந்தப் பட்ட தீவிரமான பணிகளுக்கிடையே ஓய்வும் தெம்பும் பெறும்

பொருட்டே அவர் மிகப் பலவாய் மொழிபெயர்ப்பு நூல்களை யும், பல இனிய சொந்தப் படைப்புகளையும் எழுதினர் எனக் காண்கிறோம். இசைப் பாடல்களோ, உணர்ச்சியைத் தூண்டும் சிறுகதையோ, நகைச்சுவை நாடகங்களோ, குறிக்கோளற்ற வெட்டிப் பேச்சுகளோ அவர் வாழ்வில் இடம் பெறவில்லை.''

இனி, சிருங்கார நைஷதம் எனும் காவியத்தின் சிறப்பினை யும், அது தெலுங்கு இலக்கியத்திற்கு ஆற்றிய தொண்டினை யும் ஒரு வாசகர் என்ற முறையில் குறிப்பாக ஆந்திர ரல்லாத பிற மொழியாளராக நின்று காண்போம். இந்நூலினை எழுதிய ஸ்ரீநாதர் 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர்; ரெட்டி அரசர் களுடைய அவையிலும், விஜயநகரராயர் அரசர்களுடைய அவையிலும் பெரும்புகழ் பெற்றிருந்தார். அவருடைய பாட் டனார் காகதீய மரபின் கடைசி அரசனான பிரதாபருத்ரன் அவையில் பெரும்புகழ்பெற்ற கவிஞராயிருந்தார்; அதுமட்டு மன்றி ஆந்திராவின் நெல்லூர் மாவட்டக் கிழக்குக் கடற்கரை யின் ஆளுநராகவும் இருந்தார். ஸ்ரீநாதரின் காலத்தில்தான் தெலுங்கு இலக்கியம் ஒரு பெரிய திருப்பத்தினை அடைந்தது. ஏறத்தாழ 13ஆம் நூற்றாண்டு இறுதிவரை வடமொழியிலிருந்து தெலுங்கு மொழிபெயர்ப்பு நூல்களே உருவாகிக்கொண்டிருந் தன; ஸ்ரீநாதர் தோன்றுவதற்கு ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன்புதான், ஆந்திர மகாபாரதம்* என்ற தெலுங்கு மொழி பெயர்ப்பு நூல் தோன்றியது. பல சமஸ்கிருத நாடகங்களைத் தெலுங்குக் காவியங்களாகப் பல புலவர்கள் மொழிபெயர்த் தனர். இராஜசேகரருடைய 'வித்தசாலி பஞ்சிகா' நூலை, 'மஞ்சனர்' கி. பி. 1300-ல் 'கயூர்பாகு சரிதம்' என்ற பெயரில் எழுதினர். காளிதாசரின் நூலை அடிப்படையாகக் கொண்டு பிணவீரபத்ரர், சிருங்கார சாகுந்தலம் என்ற நூலை எழுதினர். மற்ற புலவர்கள் புராணங்களைத் தெலுங்குக் கவிதைகளாக மொழிமாற்றம் செய்து வெளியிட்டனர். ஸ்ரீநாதர் முதலில் ஒரு சமஸ்கிருத காவியத்தையே தெலுங்கில் மொழிபெயர்த்தார். அவருடைய சிருங்காரநைஷதம் ஸ்ரீ ஹர்ஷரின் நைஷத சரிதம் (12ஆம் நூற்றாண்டு) நூலின் தெலுங்கு மொழி பெயர்ப்பாகும்;

* நன்னய பட்டரால் 11ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தொடங்கப்பட்டு அவரால் மூன்று காண்டங்கள் மட்டுமே முடிக்கப்பட்டன. மீதி 15 காண்டங்களை 13ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் திக்கண்ண சோமயாஜி மொழிபெயர்த்தார். ஆரண்ய பர்வம் முழுமையும் நன்னய பட்டர் செய்யாது விட்டாரோ அல்லது பகுதிகள் தொலைந்தனவோ, 14 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் எர்ரண்ணா என்பவர் ஆரண்ய பர்வத்தின் சில அதிகாரங்களை நிறைவு செய்தார்.

இந்நூல் தெலுங்கு நாட்டில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த ஒன்றாகும். ஸ்ரீநாதருடைய சமகாலப் புலவர்களாக, வடமொழி உரையாசிரியர்களாக மல்லிநாதர், காத்யவீமர் மற்றும் கவி வாமனபட்ட பாணர் ஆகியோரை நாம் காண்கிறோம். தெலுங்கானவின் வேலமா நாயுடுகளின் அவையுடனும், விஜயநகர ராயர்களின் அவையுடனும் போட்டியிட்டு மேம்படும் வகையில் ரெட்டி அரசர்களுடைய ஆட்சியில் ஆந்திரம் சமஸ்கிருதக் கல்விக் கூடமாக விளங்கியது.

சாலிவாகனரின் 'சப்தசதி' நூலை மொழிமாற்றம் செய்த பின்பு மேலும் சில தன் படைப்புகளை வெளியிட்ட ஸ்ரீநாதர், அதன் பின்பே சிவனைப் பற்றிப் பேசும் 'ஹரிவிலாசம்' என்ற தன்னுடைய படைப்பினை வெளியிட்டார். அதனை அடுத்ததே நைஷதம் மொழிபெயர்ப்பு. மற்றப் புலவர்களைப் போலல்லாது இவர் மொழிபெயர்ப்பு நூல்களை மூல நூலிலிருந்து பாடலுக்கு பாடல் வரிக்கு வரியாக மொழி மாற்றம் செய்து வெளியிட்டார். இவர் இரண்டு மூன்று சுலோகங்களை ஒரே தெலுங்கு 'பத்யம்' அமைப்பில் அடக்கியும் விடுவார்; ஒரே சுலோகத்தை இரண்டு மூன்று பத்யமாக விரித்தும் கூறுவார். சில பாடல்கள் பல்வேறு பொருள் தரும்படியாக அமைந்துவிடும் இடர்பாடும் உண்டு. எடுத்துக்காட்டாக, நள வரலாற்று நூலில் மாறுவேடத்தில் வந்த கடவுளரைப் பற்றிப் பேசும் ஒரே பாடல் ஐந்து வேறு வேறு பொருள்தரக் காணலாம். இத்தகைய பாடல்கள் மொழிபெயர்ப்பதற்கு மிகக் கடுமையானவை. இவ்வகையில் ஸ்ரீஹர்ஷரின் படைப்புகளில் உள்ள சிறப்புக் கூறுகள் முற்றும் தமது மொழிபெயர்ப்பில் அமையுமாறு ஸ்ரீநாதர் முயன்று கருத்துடன் செயல்பட்டிருக்கிறார். இதனாலேயே பிற்கால கிருஷ்ண தேவராயர் காலத்துப் பிரபந்த வகைப் படைப்பாளர்களுக்கு அவருடைய நூல் முன்மாதிரியாக அமைந்தது. இந்த வகையில் என் பாட்டனாரும் தம்முடைய மொழிபெயர்ப்புகளில் மூலநூலின் சாரமும், வேத, புராணக் கூறுகளும் இணைந்து அமைந்திருக்குமாறு பார்த்துக் கொண்டார். அவருடைய உரை அச்சில் இராயல் ஆக்டோவா அளவில், ஏறத்தாழ 1000 பக்கங்களுக்கு அமைந்திருந்தது.

1913ல் சிருங்கார நைஷதம் வெளியீட்டுக்குப் பிறகு என் பாட்டனார் ஆமுக்தமால்யதா நூலுக்கு உரை எழுதத் தொடங்கினார். சிருங்கார நைஷதம் உரையைக் காண நேர்ந்த பித்தாபுரம் மகாராஜா அதனால் பெரிதும் கவரப்பட்டு, ஆமுக்தமால்யதா உரை வெளியீட்டுக்காக ரூ. 1200/- அன்பளிப்பாகத் தந்தார். இந்நூல் மிகுந்த ஆராய்ச்சிகளுடன் வெளிவர வேண்டியிருந்த

தால் மிகுந்த காலதாமதத்தையும், அதுவேளை இரண்டாவது உலகப் போர் மூண்டதால் அச்சிடும் பொருள்களின் விலையேற்றத்தால் நான்கு மடங்காகப் பெருகிவிட்ட பொருட் செலவையும் சந்திக்க நேர்ந்தது. அவருடைய செயலாளர் என்பாட்டனுருக்கு எழுதிய கடிதமொன்றில், 'ஆமுக்தமால்யதா பற்றித் தங்களுக்குக் கடிதம் எழுதுமாறு மகாராஜா என்னைப் பணித்துள்ளார்; தங்களுடைய விஜயவிலாசம் நூலின் அளவிலேயே ஆமுக்தமால்யதாவும் அமைய வேண்டும் (இயன்றால் மேலும் சிறிய அளவில் சுருக்கவும் தயங்க வேண்டாம்) (டெமி அளவில் 200 பக்கம்), என்று மகாராஜா விரும்புகிறார். தேவையானுல் இந்நூலை இரண்டு பாகங்களாகப் பிரித்து வெளியிடலாம் என்றும் தெரிவிக்கச் சொன்னர். நைஷதம் நூலே மிகப் பெரியதாக, கையடக்கமற்றதாக இருப்பதாக அவர் கருதுகிறார். இது குறித்துத் தங்களுடைய எண்ணத்தை அறிந்து கொள்ள அவர் மிகுந்த ஆவலோடு இருக்கிறார்' என்று குறிப்பிடுகிறார்.

ஆனுல், மூலநூல் கடினமானதாகவும் படிப்பதற்கு அரிதாகவும் இருந்தமையால், அதனை முழுமையாக ஆய்ந்து தெளிதல் இன்றியமையாததாயிற்று. இதனுல் அதனைக் கற்றுத் தெளிவதற்கே பல ஆண்டுகள் தேவைப்பட்டன. 1914ஆம் ஆண்டு தொடங்கி, தமது அச்சகத்தை விற்பதற்குச் சற்று முன்பு வரை அஃதாவது 1919 வரை என் பாட்டனுர் இப்பணியிலேயே மூழ்கியிருந்தார்; 1920ல் தான் இந்நூலின் உரையினை எழுதி முடித்தார். இந்நூலின் முகவுரையே மிகப் பரந்து சில நூறு பக்கங்களுக்கு அமைந்திருக்கக் காணலாம். அதில் ஆசிரியருக்கும் பிறருக்கும் நிகழ்ந்த வாதப்போர், அந்நூலின் சிறப்புக் கூறுகள், இலக்கணச் சிறப்புகள், அவற்றின் பயன்கள் மற்றும் நூலின்கண் அமைந்துள்ள வைணவ தத்துவங்கள் ஆகியனவற்றைக் குறிப்பிட்டிருக்கக் காணலாம்.

இப்பொழுது, ஆமுக்தமால்யதாவிற்கு உரையெழுதி வெளியிட்ட உரையாசிரியர் உணர்ந்த தொல்லைகளை நாமும் அறிவதற்காக அதைப்பற்றி மேலும் சில செய்திகளைக் காண்போம். இந்த பாடல் நூலுக்கு இடப்பட்டுள்ள ஆமுக்தமால்யதா என்ற பெயர் ஒரு கூட்டுச் சொல்லாகும். 'இளநங்கை யொருத்தி தான் சூடிய மாலையைத் தான் வணங்கும் கடவுளுக்குச் சூட்டிய' கதையினைக் கூறுவது இந்நூல். இதற்கு 'விஷ்ணு சித்தீயா' அல்லது விஷ்ணசித்தனின் கதை என்றொரு பெயரும் உண்டு. 1509 லிருந்து 1529 வரை விஜயநகரத்தை ஆண்டு வந்த கிருஷ்ணதேவராயர் சிறந்த கவிஞராகவும் மதப்பற்று

மிக்கவராகவும், திருப்பதி வெங்கடேசுவரப் பெருமானின் தீவிர பக்தராகவும் விளங்கினார். வைணவப் பெரியார்களான ஆழ்வார்களுள் விஷ்ணுசித்தர் (பெரியாழ்வார்), அவருடைய வளர்ப்பு மகளான ஆண்டாள் மற்றும் யாமுனச்சார்யர் (ஆளவந்தார்) ஆகியோருடைய கதைகளைப் பிணைத்து வைணவ பக்தி நெறியை ஊட்டும் வகையில் மிக அரிய பக்தி நூல் ஒன்றைப் படைத்தார். தென்னிந்தியா, ஒரிஸ்ஸா உள்ளிட்ட தக்காணத்தின் பெரும் பகுதியைக் கைப்பற்றிய பின்னர், கிருஷ்ணதேவ ராயர் இந்நூலைத் தமது இறைவனை திருப்பதி வெங்கடேசுவரருக்குக் காணிக்கையாகப் படைத்தாரென்பர். நைஷதம் நூலைப் போன்று இதுவும் ஒரு நீண்ட கவிதை நூலாக, ஏழு காண்டங்களையுடையதாக அமைந்துள்ளது. ஆயினும், சமஸ்கிருத மூல நூல் இதற்கின்மையால், இதனைக் கற்கும்போது ஒப்புநோக்கி உண்மையறிந்திட வாய்ப்பு ஏதுமில்லை. இக்காலம் பிரபந்த காலம் ஆகும். இக்காலகட்டத்தில் ஒரு கதையை எடுத்துக்கொண்ட புலவர்கள் காவியங்களுக்குக் கூறப்படும் பதினெட்டு அழகுகளும் அமையத்தக்க வகையில் அதனை மிக விரிவாக்கிக் காவியம் அல்லது பிரபந்தம் படைத்தல் பெருவழக்காயிருந்தது.

பழங்கால வைஷ்ணவ புராணங்களிலிருந்து எடுக்கப் பெற்றது விஷ்ணுசித்தர் அல்லது பெரியாழ்வார் கதை. இவர் கல்வியறிவில்லாதவர்; வில்லிபுத்தூரிலுள்ள விஷ்ணு ஆலயத் தோட்டக்காரராக இருந்தவர்; அந்த ஆண்டவனிடம் அளப்பரிய பக்தி கொண்டவர். ஆனால் ஆண்டவனின் கட்டளையின் பேரில் வியக்கத்தக்க வகையில், இவர் மதுரை சென்று அங்கு பிற மதத்தினரோடு வாதப் போர் புரிந்து வெற்றி கண்டாரென்றும், வைணவமே தலைசிறந்தது என்று நிலைநாட்டினாரென்றும், பாண்டியப் பேரரசனையும் மதம் மாற்றி வைணவனாக்கினார் என்றும் நாம் காண்கிறோம். பின்னர் அங்கிருந்து தமது ஊருக்குத் திரும்பிய பெரியாழ்வார் தமது தோட்டத்தில் ஒரு பெண்குழந்தை அனாதையாகக் கிடப்பதை கண்டெடுத்து, அவளுக்குக் கோதை எனப் பெயர் சூட்டி, தமது வளர்ப்பு மகளாக்கிக் கொண்டார். விஷ்ணுசித்தர் கடவுளுக்கு மாலை தொடுக்கும் கலையில் மிக வல்லவர். சில ஆண்டுகள் கழிந்த பின்பு, கோதை மங்கைப்பருவம் எய்திய நிலையில், ஆண்டவனுக்காகத் தொடுக்கப்படும் மலர்மாலைகளை நாள் தோறும் தனது தோளில் சூட்டிக்கொண்டு, தோட்டத்துக் குளத்து நீரில் தனது அழகைப் பார்த்த பின்பு, அம்மாலையினைத் திரும்பவும் கூடையில் வைத்துவிடுவாள். இதனைச் சந்தேகப்

படாத முதிய விஷ்ணுசித்தர் ஒரு நாள், கடவுளுடைய மாலையில் ஒரு நீண்ட மனிதத் தலைமுடி இருப்பதைக் கண்டு உண்மையினை அறிந்துகொண்டார். இதனால் வெகுண்ட அவர்; தம் மகளைக் கடிந்துகொண்டு, வேறொரு புதிய மாலையைத் தொடுத்து கடவுளுக்குச் சூட்ட முற்பட்டார். ஆனால், வியக்கத்தக்க வகையில், ஆண்டவன், கோதையின் தலை முடியிருந்த அந்த மாலைதான் தமக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கூறிவிட்டார். கோதை தன் மேல் காதல் கொண்டிருப்பதை உணர்ந்த இறைவனும் அவள் மேல் காதல் கொண்டிருந்தார். அதன் பின்னர், கோதை தன் தந்தையாருடன் திருவரங்கம் சென்று இறைவனுடன் ஒன்று கலந்ததாகப் புராணம் சொல்கிறது. யாமுனச்சார்யரின் கதை இந்த முதற்கதையின் இடையிடையே கலந்து வருகிறது; இதைப் போன்றே மேலும் பல கதைகள் பக்தி மார்க்கத்தைப் புகட்டும் வகையில் இந்நூல் அமைந்திருக்கக் காண்கிறோம்.

மாபெரும் வெற்றி வீரராக விளங்கிய கிருஷ்ண தேவராயர் தம் வாழ்நாளில் அதாவது பதவி ஏற்றதிலிருந்து அவர் தம் கடைசி நாள் வரை இடைவிடாமல் போரில் ஈடுபாடு கொண்டிருந்தார். மிக வலிமை வாய்ந்த படையினைக் கொண்டு, ஒரிஸ்ஸா உள்ளிட்ட தென்னிந்தியா முழுவதையும், தமது ஆட்சியின் முதல் பத்து ஆண்டுகளுக்குள்ளேயே கைப்பற்றினார்; இவ்வாறான இடையறாத படைத்தொழிலுக்கிடையிலேயும், கவிதைகளைப் படைத்திடத்தக்க சூழ்நிலை கிடைத்ததை எண்ணிப் பெரிதும் வியக்கிறோம்; அவருடைய அவைக்களப் புலவர்களான, அல்லாசானி பெத்தண்ணா, மாதயகாரி மல்லண்ணா மற்றும் முக்கு திம்மண்ணா ஆகியோர் படை வீடுகளிலும் கூட அரசனுடனேயே தங்கியிருந்தனர் என்றறிகிறோம். ஆயினும் கிருஷ்ண தேவராயருடைய கவிதைகள் அவருடைய அவைக்களத்தலைமைப்புலவரானபெத்தண்ணா அவர்களுடைய கவிதைகளைப் போலல்லாது, தனித்த சிறப்பான நடையும், ஒழுங்கான சுருக்கமான அமைப்பும், நிறுத்தங்களும், அரிதான வட்டார வழக்குச் சொற்களும் மிகச் சிறந்த இலக்கண அமைதியும் உடையதாக அமைந்திருக்கக் காணலாம். போதிய நேரம் கிடைக்காமையாலோ அல்லது பெத்தண்ணா மீது தாம் கொண்டிருந்த மதிப்பினை உணர்த்திடவோ தெரியவில்லை — கிருஷ்ணதேவராயர் தம்முடைய முன்னுரையிலும் நூலின் பல பகுதிகளிலும் பெத்தண்ணாவின் புகழ் பெற்ற மனுசரிதம் நூலின் அடிகளை அவ்வவ்வாறே பயன்படுத்தியிருக்கக் காண்கிறோம். அரசருக்கும் அவருடைய அவைக்களப் புலவருக்கும்

இடையே இருந்த நட்பின் நெருக்கமும் ஒத்த அன்பும் அத்தகையதாயிருந்தது. இதனாலேயே கிருஷ்ண தேவராயர் மறைந்த சில காலத்திலேயே ஆமுக்தமால்யதாவைப் படைத்தவர் என்ற பெருமை பெத்தண்ணாமீது ஏற்றிச் சொல்லப்பட்டது. இன்றளவும் தெலுங்குப் புலவர்களும், பழைய உரையாசிரியர்களும் இந்நூலின் மூலத்தில் இதன் படைப்பாசிரியர், கிருஷ்ணதேவராயர் தான் என்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருந்த போதிலும் – அதனை ஒப்புக்கொள்ளாமல் பெத்தண்ணாவே இதனையும் படைத்தார் என்றே கொள்கின்றனர். இதனால் ஆமுக்தமால்யதாவின் தற்காலப் பதிப்புகளின் முன்னுரைகளில் அதன் ஆசிரியரைப் பற்றிய சர்ச்சையை ஆய்ந்து முடிவு கூறுதல் இன்றியமையாக் கடமையாயிற்று. தற்கால எழுத்தாளர்கள் சிலர் இப்பிரச்னையில், கிருஷ்ணதேவராயர் வலிமை வாய்ந்த ஒரு பேரரசராக இருந்தமையால் ஓர் உயர்ந்த புலவராக இருப்பது அரிது என்றும், அதனால் சிறப்பான காவியம் ஒன்றைப் படைக்கவோ, இலக்கணப் பிழைகளின்றி எழுதவோ இயலாது; ஆதலின் பிழைகளுடன் அமைந்துள்ள இக்காவியத்தின் ஆசிரியர் கிருஷ்ணதேவராயரே என்றும் அறுதியிட்டுக் கூறுவர். அவர்கள் கூற்றுப்படி பெத்தண்ணா மிகச் சிறந்த புலவர்; பல காவியங்களை மிகச் சிறப்பாகப் படைத்தவர் என்ற நிலையில் இதனை எழுதியிருக்கவே முடியாது என்றும், இதனை எழுதியவர் கிருஷ்ணதேவராயரே எனவும் வாதிடுகின்றனர். இந்நூலை மிக ஆழ்ந்து படித்த என் பாட்டனார், அதன் அனைத்துக் கூறுபாடுகளையும் நன்கு ஆய்ந்து, இராயர் திறமையற்ற எழுத்தாளர் அல்லரென்று நிரூபித்துக் காட்டுகிறார். இந்நூலில் காணப்பெறுவதாகக் கூறப்பெறும் தவறுகள், குறைபாடுகள் அனைத்தும் ஏட்டில் எழுதியவர்கள் செய்தனவேயெனவும், இன்னும் சில இடங்கள் படிப்போரால் பிழைபடப் புரிந்து கொள்ளப்படுவனவே எனவும் சுட்டிக் காட்டுகிறார். இராயர் சிறந்த புலமை மிக்கவராகவும் பட்டறிவு வாய்ந்தவராகவும் இருந்தமையால், மனித இயல்புகளையும் சூழ்நிலைகளையும் பற்றி மிகச் சிறப்பாகவும் உள்ளத்தைத் தொடும் விதமாகவும் எழுதியிருப்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். ஏனென்றால் இராயர் படைத்த காவியம் இரண்டாம் தரமானது; ஆகவே இந்நூலின் ஆசிரியர் இராயர்தான் எனக் கூறுவது கிருஷ்ண தேவராயருக்குப் பெருமையளிப்பதாகாது. என் பாட்டனார் இந்நூலில் படைப்பாசிரியர் யார் என்ற பிரச்னைக்கு மிகச் சிறந்த ஒரு தீர்வினைக் காட்டுகிறார். ஆமுக்தமால்யதா நூலில், பெத்தண்ணா அவர்களின் நூலினையொத்த கூறுபாடுகள் காணப்படுவதற்கும், பெத்தண்ணாவின் எழுத்துக்கள் அப்

படியே கையாளப்பட்டிருப்பதற்கும் காரணம் இராயர் தம்முடைய அவைக்களப் புலவரின் ஒத்துழைப்போடு எழுதினர் என்பதனையே காட்டுகிறதென்பார் சாஸ்திரியார். ஆமுக்த மால்யதா இராயருடைய தன் படைப்பெனவும், பெத்தண்ணு அதில் இறுதியாகத் திருத்தங்களைச் செய்து நிறைவு செய்தார் எனவும் சாஸ்திரியார் கருதுகிறுர். இந்நூலின் படைப்பாளர் பிரச்னையும், நூலின் தகுதி பற்றிய பிரச்னையும் ஒன்ருேடு ஒன்று இணைந்திருப்பதால் இதன் உரையாசிரியர் தெலுங்கு மற்றும் சமஸ்கிருத மொழி இலக்கியங்கள் முழுவதையும் படித்தறிய வேண்டிய நிலையில் இருமொழி இலக்கியங்களையும் ஒப்பு நோக்கி ஆராய்ந்திட வேண்டியதாயிற்று. இதன் 'சார்பாக வியவகாரிகா' கோட்பாட்டின் தலைவர்கள் எழுப்பும் பிரச்னைகளுக்கும் இவர் பதிலளித்திருக்கிறுர். மேலும் இந்நூலின் உரைகள், கவிதையின் சிறப்பம்சங்களையும், சாஸ்திரீய, சமய தத்துவங்களையும் விளக்குவனவாக அமைந்திருக்கக் காண்கிறேம்.

டாக்டர் சி. ஆர். ரெட்டி அவர்கள் என் பாட்டனர் இந்நூலுக்கு எழுதிய உரையை மட்டுமின்றி ஆசிரியர் பிரச்னை பற்றிய அவர் மேற்கொண்ட நிலையினையும் பெரிதும் போற்றுகிறுர். ஆயினும் இவ்வெளியீடு பல காலமாகத் தாமதப்பட்டுக் கிடந்தது. சென்னை, கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகத்தினை முழுமையாகப் பயன்படுத்தி அல்லும் பகலுமாக உழைத்து என் பாட்டனர் 1920ல் இவ்வுரையை எழுதிமுடித்தார். இந்நிலையில், பித்தாபுரம் மகாராஜா இந்நூலில் போதிய ஆர்வம் காட்டாமையால் என் பாட்டனர் இந்நூலின் வெளியீட்டுக்காக வேறு பலருடைய உதவிகளை நாட வேண்டியதாயிற்று.

## 10. பெருமைகளும் இன்னல்களும்

பொதுமக்களிடையே செல்வாக்கும் பெருமைகளும் என்னுடைய பாட்டனருக்கு அவருடைய வாழ்வில் மிகவும் காலம் கடந்தே கிட்டின. இலக்கிய வட்டாரத்தில் பலராலும் நன்கு அறியப்பட்ட அவர், அனைவராலும் இலக்கிய மேதை எனப் போற்றப்பட்ட போதிலும், பொதுமக்களிடையே அவரை அறிந்துகொள்ளும் எண்ணமும் போற்றிட வேண்டும் என்ற எழுச்சியும் தோன்றவில்லை. அப்பொழுதெல்லாம் சஷ்டியப்தபூர்த்தி விழாக் கொண்டாடுவதும் சஷ்டியப்தபூர்த்தி விழா நினைவு மலர் வெளியிட்டு வழங்குவதும் வழக்கிலில்லை. அவருடைய ஆமுக்தமால்யதா உரை நிறைவுபெறும் தருவாயில் தான், என் பாட்டனர் தெலுங்கு இலக்கியத்திற்கு ஆற்றிய அளப்பரும் தொண்டினை ஆந்திர மக்கள் உணரத் தலைப்பட்டனர். இவ்வகையில் அவரைப் பாராட்டிப் பெருமை பெற்ற முதல் இலக்கிய அமைப்பு, 'ஆந்திர சாஸ்வத பரீட்சித்' ஆகும். 1919ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற ஒரு விழாவில் இச்சங்கம் அவருக்கு 'மகோபாத்யாய' என்ற பட்டத்தையும் அரிய வேலைப்பாடமைந்த விலையுயர்ந்த பொன்னுடை ஒன்றையும், ரூபாய் ஆயிரத்து நூற்றுப் பதினறு கொண்ட பணமுடிப்பு ஒன்றையும் அளித்துப் பாராட்டியது. அதோடு மட்டுமன்றி அரசாங்கம் அவருக்கு 'மகாமகோபாத்யாய' என்ற பட்டத்தை அளிக்க வேண்டும் எனத் தீர்மானம் ஒன்றையும் அச்சங்கம் நிறைவேற்றியது. அடுத்த, நெல்லூர் முன்னேற்றச் சங்கமும் (Progressive Union of Nellore) பொது மக்களும் அவர் எழுதிய உரைகளைப் பாராட்டும் வகையில் அபிநவமல்லிநாதர் என்ற பட்டத்தையும் அளித்தனர். 1922ஆம் ஆண்டு, பின்னளில் வேல்ஸ் இளவரசராகவிருந்த விண்ட்சர் பிரபு இந்தியாவுக்கு வருகை தந்தபோது, அந்நாளின் நினைவாகச் சென்னைப் பல்கலைக் கழகம் அறிஞர் பெருமக்களுக்குச் சிறப்புச் செய்ய முன்வந்தது. சென்னை மெரீனவில் உள்ள பல்கலைக்கழகச் செனட் கட்டிடத்தில் இதற்கென ஓர் அவை கூட்டப்பெற்று அதில் தேர்ந்தெடுக்கப்பெற்ற அறிஞர் பெருமக்களுக்கு, பொன்னிழை வேலைப்பாடுகளமைந்த இரண்டிரண்டு பொன்னுடைகளும், விலையுயர்ந்த தங்கப் பதக்கம் ஒன்றும் அளித்துப் பாராட்டளிக்கப்பட்டது. அப் பதக்கத்தின் நடுவில் இரண்டு சிங்க முகங்கள் ஒன்றை

யொன்று நோக்கும் வண்ணம் முற்றிலும் கீழ்த்திசை மரபுக் கேற்பப் பொறிக்கப் பெற்றிருந்தது. என் பாட்டனுர் முதலில் சமஸ்கிருதப் புலமைக்காகவே தேர்ந்தெடுக்கப்பட்டார்; ஆனல் வேறுசில பெருமக்கள் சமஸ்கிருதத்தில் மட்டுமே பெரும் புலமை மிக்கவர்களாயிருந்தபடியால் இறுதி நேரத்தில் ஒரு மாற்றம் செய்யப்பட்டது; வடமொழியைப் போலவே தெலுங்கு மொழியிலும் மிகச் சிறந்த புலமை பெற்றிருந்த என் பாட்டனுர், தெலுங்கு மொழியறிஞர் என்ற முறையில் முதல் பரிசினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டார். இதனுல் இரட்டிப்புப் பெருமை பெற்றதாக மகிழ்ந்த அவரும் இவ்வேண்டுகோளை ஏற்று 1922 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 13 ஆம் நாள், மேன்மைதங்கிய வேல்ஸ் இளவரசரின் கைகளால் பரிசு பெற்றுர்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு, நெல்லூரில் ஒரு சொற்பொழிவின் போது தமது ஆமுக்தமால்யதா உரைநூல் வெளியீட்டுக்காக நிதியுதவி கோரியபோது, அவ்வவையிலிருந்தோர், சென்னையில் குடியிருந்த சாஸ்திரியாரை மீண்டும் தம் தமது சொந்த ஊரான நெல்லூருக்கே குடியேற வேண்டும் என்றொரு வேண்டுகோளை வெளியிட்டனர். இக்கருத்தைப் பெரிதும் வரவேற்ற என் பாட்டனுர், தாம் குடியிருப்பதற்கும், அதே நேரத்தில் தமது நூலகத்தை அமைத்துக்கொள்ளவும், தமது வெளியீடுகளை வைத்திருக்கவும் போதுமான அளவில் வீடு தேவையென்ற எண்ணத்தை வெளியிட்டார். மேலும் புத்தக விற்பனையில் வந்த வருமானம் நிலையான வருவாயைத் தராததால், வருவாய்த் தொல்லையும் அவருக்கு மிகுந்திருந்தது. என் பாட்டனுர் வீடு ஒன்றை வாங்குவதற்காக உதவி நிதி திரட்டிட வேண்டும் எனவும் கருத்துரைக்கப்பட்டது. நெல்லூர் அரங்கநாயகுல பேட்டையில், அரங்கநாத சுவாமி கோயிலின் அருகே பெண்ணுற்றங்கரையில், சாலையை ஒட்டிய வீடொன்று இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பெற்றது. இதற்காக, பாட்டனுரின் பழைய மாணவர் ஒருவர், சென்னையிலும் நெல்லூரிலுமுள்ள வீடுகளின் பேரில் கடனுக ரூபாய் ஐயாயிரம் கொடுத்தார். 1922 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் சாஸ்திரியாரின் குடும்பம் நெல்லூரிலிருந்த புதிய வீட்டிற்குக் குடியேறியது. இதனுல், வாழ்வில் நேர்ந்த மாறுபாடுகளை எண்ணி மகிழ்ந்த அதே வேளையில் நெல்லூர் வாழ்வு பெருங்கடன் சுமையுடன் தொடங்குவதை எண்ணிப் பெரிதும் கவலையுற்றுர் என் பாட்டனுர். கடன் சுமையற்ற நிம்மதியான வாழ்வு வாழ வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காகத் தமது அச்சகத்தையே விற்றவருக்கு

மீண்டும் அவர் விரும்பாத கடன்பட்ட வாழ்வு அமைந்து விட்டது; ஆனால் அச்சமயத்தில் இதற்காக அவர் பெரிதாகக் கவலைப்படவில்லை; ஏனென்றால், அவருடைய நண்பர்களும். வாசகர்களும், பழைய மாணவர்களும் எப்படியும் நிதி திரட்டிக் கடன்களை அடைத்து விடுவார்கள்; அதனை ஒரு பொதுத் தொண்டாக எண்ணி முடிப்பர் என்று அவர் பெரிதும் நம்பினார்.

புதிய வீட்டுக்குக் குடிவந்த வேளை நல்லவேளை என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால் வந்த சில நாட்களிலேயே குஜராத்திலுள்ள துவாரகா மடத்தின் சாரதாபீட சங்கராச்சாரியார் ஜகத்குரு ஸ்ரீசுவாமி பாரதிகிருஷ்ண தீர்த்தர் என் பாட்டனாருக்கு, மகாமகோபாத்யாய, வித்யா - தானவ்ரத - மகோததி, பண்டிதராஜ, வேத வேதாங்க - சாஸ்திர - ஜாலமகோததி, சனாதன - தர்ம இரத்னாகர, சர்வதந்திர - சுதந்திர ஆகிய ஆறு பட்டங்களை அளித்ததோடு, மடத்து நிதியிலிருந்து மாதம் 150/- ரூபாய் பண உதவியும் அளித்திட ஏற்பாடு செய்தார். இதற்காக, நெல்லூர் மக்கள் மன்றத்தில் ஒரு மாநாடு கூட்டப் பெற்று அரங்கநாயகுல பேட்டையிலுள்ள எங்கள் வீட்டிலிருந்து ஒரு பெரும் ஊர்வலம் ஏறக்குறைய இரண்டு மைல் தூரத்திற்கு நடத்திச் செல்லப்பெற்றது. ஸ்ரீசங்கராச்சார்யாரின் உதவியாளர் ஒருவர் இதற்காக நெல்லூர் வந்து இப்பரிசளிப்பு விழாவினை நடத்திச் சென்றார். ஒரு காலத்தில் சென்னைக் கிருத்துவக் கல்லூரியில் தமது மாணவராயிருந்த ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் காலமறிந்து செய்த இவ்வுதவியினால் என் பாட்டனார் பெரிதும் மனங்களித்தார்.

இவ்வாறு மாதந்தோறும் நிரந்தரமான வருவாய்க்கு வழி தோன்றிடவே என் பாட்டனாரின் நண்பர்கள் பெருமளவு மகிழ்ந்து வீட்டுக் கடனுக்கு மட்டும் உதவினால் போதும் என்ற நிலைமையில் இருந்தனர். ஆனால் என் பாட்டனாருக்கு இம்மகிழ்ச்சியினை முழுமையாக அனுபவிக்க கொடுத்து வைக்கவில்லை. பிரச்சினைகள் வேறு வடிவம் கொண்டன. ஸ்ரீசங்கராச்சாரியர் இச்சமயத்தில் அரசியலில் ஈடுபடத் தொடங்கினார்; மேலும் அவருடைய மடமும் பல வழக்குகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. இத்தொல்லைகளால் என் பாட்டனாருக்கு அளிக்கப்பட்டு வந்த மாதாந்திர வருவாய் தடைப்படலாயிற்று. இத்தகைய வறுமை நிலையில், 1922ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14ஆம் நாள் என் பாட்டனாரின் ஒரே மகனான என் தந்தையார் தமது இளவயதில் சில நாள் நோய்வாய்ப்பட்டு இறந்தது அவருக்குப் பேரதிர்ச்சியாயிருந்தது. கடவுளின் செயல்கள் எப்பொழுதுமே அறிவு கெட்டாதனவாகும்.

மறுநாளே சுவாமியிடமிருந்து தகுந்த பணமும், அதனை காலந் தாழ்த்தி அனுப்ப நேர்ந்தமைக்கு மன்னிப்புக் கேட்டுக் கடிதமும் வந்து சேர்ந்தன. அதன் பின்னர் துவாரகா சாரதா பீடம் மேலும் பல வழக்குகளில் மாட்டிக்கொண்டு மிகவும் இன்னலுற்றது. இதனால் என் பாட்டனருக்கு வரவேண்டிய மாதாந்திரத் தொகை முற்றிலுமாக நிறுத்தப் பெற்றது. அது மட்டுமின்றி, வீட்டின் மேலிருந்த கடனை அடைத்திட ஆரம்பத்தில் முடிவு செய்யப்பட்டிருந்த வழிகளெல்லாம் இறுதியில் பயனளிக்கவில்லை; மேலும் உதவி நிதி திரட்டி அதன் மூலமாகக் கடன்களை அடைக்கலாம் என்று சொன்ன நண்பர்களும், ஒருங்கிணைந்து செயல்பட இயலாத நிலை காணப்பட்டது. இந் நிலையில், அவருடைய நாடகக் குழுவும் பாராட்டத்தக்க நிலையில் இல்லை. ஆந்திர பாஷாபிமானி சமாஜம் அதனுடைய கலை நிகழ்ச்சிகள் பலவற்றாலும் பெரும் இழப்பு ஏற்பட்டு மிகுதியான கடன் சுமையினை ஏற்றிருந்தது. இந்நிலையில் என் பாட்டனார் நிலவரங்களைத் தெளிவாக உணர்ந்தார். கடன் சுமை தனது தலைக்கு மேல் ஒரு நூலிழையில் தொங்கும் கூர்மையான கத்தி என்றே அவர் எண்ணினார். எந்த ஒரு செயலையாவது அவர் துணிந்து செய்ய முற்படும்போது, அவருடைய பெருங் கடன் சுமை கண்முன் தோன்றி அவரை ஏதும் செய்ய முடியாத கோழையாக்கி வந்தது. அவர் தமது நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களிலும், புத்தகங்களிலும், கட்டுரைகளிலும், தாம் இந்திய வரலாற்றையும் நாட்டுப்புற இலக்கியங்களையும் மையமாகக் கொண்டு மேலும் பல நாடகங்களை எழுதவே விரும்புவதாகவும், மேலும் பல இலக்கியச் செல்வங்களை வடமொழி மற்றும் தெலுங்கு மொழிக்கு அளிக்க விரும்புவதாகவும், பல முறை தெரிவித்துள்ளார். இதற்காக அவர் பல நூல்களைப் படித்துக் குறிப்புகளையும் தயாரித்தார். ஆயினும் அவருடைய ஒவ்வொரு நல்லெண்ணமும் முயற்சியும் கடன் கொடுத்தவர்கள் கடனைத் திருப்பித் தருமாறு நினைவு படுத்தும்போதெல்லாம் தடங்கலுற்றன. கடன் கொடுத்தவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று, அதனால் எங்கே தன்னுடைய இரண்டு வீடுகளுமே பறிபோய்த் தன் பேரக் குழந்தைகளைக் கையில் காசில்லாமலும், தங்க வீடில்லாமலும் விட்டுச் செல்வோமோ என்று அவர் பெரிதும் துயரமுற்றார்.

இவ்வாறான மனத் தொல்லைகளினாலோ உடல் கோளாறினாலோ கடுமையான வயிற்றுப் போக்கினால் அவதியுற்ற அவர் ஏறத்தாழ ஒரு திங்கள் வரை படுக்கையிலிருந்தார். இத் தாக்குதலிலிருந்து அவர் பிழைக்கமாட்டார் என்றே கருதப்

பட்டது. ஆனல் எப்படியோ தேறிவிட்டார். நோயிலிருந்து தேறியபோதும் முந்திய உடல்நிலை குன்றிவிட்டது. இந்த நோய்க்குப் பின்பு அவரால் தொடர்ந்து ஒரு மணி நேரம் கூட அமர்ந்திருக்க முடிவதில்லை. அவருக்கு எப்போதும் ஒய்வு தேவையாகவே, கட்டிலில் படுத்திருக்க வேண்டியதாயிற்று. நாவிதனின் கத்தி படுவதைச் சகித்துக் கொள்ளமுடியாத நிலையில் முகச்சவரம்செய்துகொள்ளாமல் தாடி வளர்ந்து மண்டியது. அதுவரை முதுமைப்பருவத்தையே எண்ணிப்பாராத அவருக்கு திடிரென முதுமை தம்மை பீடித்துவிட்டதாகச் தோன்றியது.

இவையனைத்திற்கு மிடையில், அவருடைய ஆமுக்தமால்யதா உரை இன்னமும் அச்சேருமல் இருந்தது வேறு அவருடைய மனத்தை வெகுவாகப் பாதித்தது. புத்தகத்தை அச்சிடவும், வாழ்வு நடத்தவும் ஆக இருவிதத்திலும் அவருக்குப் பணம் மிகவும் தேவைப்பட்டது. இந்நிலையில் என் பாட்டனரின் நண்பர்கள் சிலர் அவருக்கு உதவிடும் பொருட்டுத் தனித் தனியே நிதி திரட்டத் தொடங்கினர். புகழ்பெற்ற வழக்கறிஞராக விளங்கிய கொடையாளர் காலஞ்சென்ற டி. வி. சிவராமய்யா போன்ருேர் எப்போதாகிலும் நன்கொடை வழங்கி உதவினர். காலஞ்சென்ற ஸ்ரீ குனுபதி யனுதி ரெட்டி அவர்கள், என் பாட்டனரின் இலக்கியங்களால் பெரிதும் கவரப்பட்டு அவரிடம் பக்தி கொண்டவர்; அவர் ஏற்கனவே, என் பாட்டனருக்கு ஆண்டுக்குத் தேவையான அரிசியை அளித்து வந்தார், இனமாக அளித்து வந்த இவ்வரிசியின் அளவினை இப்பொழுது உயர்த்திக் கொடுத்ததோடு, நெல்லூரிலுள்ள ரெட்டி சமூகத்தினரை எல்லாம் அழைத்து ஓர் அமைப்பினை ஏற்படுத்தி அதன் மூலமாக, சாஸ்திரியாரின் வீட்டின் பேரிலுள்ள கடன்களை அடைத்திட நிதி திரட்டித் தரவும் ஏற்பாடு செய்தார். இவ்வாருன சிறுசிறு நிதியுதவிகளின் துணைக்கொண்டு தமது உரைநூலை படிப்படியாக அச்சேற்றத் தொடங்கினர். 1924ஆம் ஆண்டு, கர்நூல் மாவட்டத்தில் உள்ள, 'கத்வால்' மாவட்டத்தில் (முன்பு நிஜாம் ஆட்சிக்கு உட்பட்டிருந்த) நகருக்குச் சென்ற என் பாட்டனர், மகாராஜா ஸ்ரீசீதாராம பூபால ராவ் அவர்களைச் சந்தித்தார்; மன்னரும், அரசவையில் பொன்னுடை போர்த்தி, தங்கப்பட்டயமும் மேற்படி உரைநூலை அச்சிட ரூ. 600/ம் அன்பளிப்பாகத் தந்தார். அவ்வவையிலிருந்த புலவர் பலரும், என் பாட்டனரின் புலமையால் பெரிதும் கவரப்பட்டு, இத்தகைய புலமை மிக்கவரைத் தாம் கண்டதுமில்லை ; கேட்டதுமில்லை என்று போற்றினர்.

இவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாக அச்சேறிய ஆமுக்த மால்யதா உரை மூன்றிலொரு பகுதியை நிறைவு பெற்றது; இந்நிலையில் நெல்லூரைச் சேர்ந்த கொடையாளர் ஒய். ராமச் சந்திர ரெட்டி அவர்கள் தமது காலஞ்சென்ற முதல் மனைவி திருமதி. ஸ்ரீதேவியின் நினைவாக, அந்நூலின் எஞ்சிய பகுதி முழுவதையும் தமது செலவிலேயே பதிப்பிக்க முன்வந்தார்; இதற்கும் பல ஆயிரம் ரூபாய் செலவாகும் எனக் கணக்கிடப் பெற்றது. இந்நூல் மிகச் சிறந்த முறையில் அச்சாக வேண்டும் என்பதாலும் நல்ல அச்சகம் ஒன்றுகூட நெல்லூரிலில்லாத தாலும், மீண்டும் ஒருமுறை அவர் குடும்பத்தோடு சென்னையில் குடியேற நேர்ந்தது. இந்நிலையில் அவர் கண் அறுவை சிகிச்சை யும் செய்து கொண்டார். ஆயினும் இதில் அவருக்குப் பாதி வெற்றியே கிடைத்ததெனலாம். மிகக் கடுமையான சோதனை களுக்குப் பிறகு 1927–ஆம் ஆண்டில்தான் அவர் தம்முடைய ஆமுக்தமால்யதா உரை நூலை அச்சேற்றி வெளிக் கொணர முடிந்தது. இந்நூலை வெளியிட்டுப் பேசிய டாக்டர் சி. ஆர். ரெட்டி அவர்கள் மொழியுலகிற்குக் கிடைத்த இவ்வழிவில்லாச் செல்வத்தை அறிமுகப்படுத்துவதில் தாம் பெருமகிழ்ச்சி கொள்வதாகக் கூறிப் பாராட்டினர். இவர் அப்போது ஆந்திர பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்தார். எனவே, அவர் சாஸ்திரியாருக்குக் கலாபிரபூர்ண என்ற பட்டத்தை அளித்திடப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவில் (Syndicate) தீர்மானம் கொண்டு வந்து அப்பட்டத்தை அளித்திட ஏற்பாடு செய்தார். இவ்வகையில் இப்பட்டம் பெற்ற முதல் அறிஞர் என் பாட்டனரே. 'கிருஷ்ண பத்ரிகா'வின் ஆசிரியராக இருந்த புகழ் பெற்ற பத்திரிகை ஆசிரியரான காலஞ்சென்ற எம். கிருஷ்ணராவ் அவர்கள் இதுபற்றிக் குறிப்பிடும்போது, 'கலா பிரபூர்ண' பட்டத்தால் பலர் பெருமை பெறலாம்; ஆனல் 'கலாபிரபூர்ண' பட்டமே சாஸ்திரியாரால் மிகப் பெருமை பெற் றது என்றது ஈண்டு கவனிக்கத்தக்கது. இது நடந்த அதே நாளி லேயே, பெஜவாடா (இப்பொழுது விஜயவாடா) நகராட்சி மன்றம் 'பெஜவாடா நகர சுதந்திர'ப் பெருவிருதினை வழங்கியது. ஆந்திராவின் வரலாற்றிலும், என் பாட்டனரின் வாழ்விலும் இந்நாள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு திருநாளாகும். அதே நாள் மாலையில், அவருடைய புகழ் பெற்ற சீடர்களான, மஞ்சுளுரு கிருஷ்ணராவ், கே. ஏ. வரப் பிரசாதராவ் ஆகியோர் 'சிறப்புமிக்க இந்திய மன்றம்' என்ற பெயரில் நெல்லூரில் நாடக மன்றம் அமைத்து அவருடைய பிரதாபருத்ரீயம் நாடகத்தை நடித்துக் காட்டினர்.

அவருடைய வாழ்வின் இலட்சியமான, நிலைபேறுன பணியாக ஆமுக்தமால்யதா உரையினை வெளிக் கொணர்ந்த போதிலும், என் பாட்டனுருக்கு அவர் நினைத்த அளவிற்குப் பொருளாதார முன்னேற்றம் ஏதும் உருவாகவில்லை. அவருடைய எழுபத்து மூன்ருவது வயதிலும், தமது குடும்பத்தினரின் எதிர்காலம் பற்றிய எண்ணமே ஓயாத கவலையாயிருந்தது; கடன்காரர்களுடைய சட்டபூர்வ நடவடிக்கையினுல் எங்கே தமது குடும்பம் வீடிழந்து நிற்கும் அவலநிலை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் அவரை அல்லற்படுத்தியதால், அவர் கண்மூடி உறங்க மறந்த இரவுகள் எண்ணிலவாயின. இந்நிலையில், திரு. குணுபதி யனுடி ரெட்டி அவர்கள் மிகப்பெரிய உதவியினைப் புரிந்தார், அவருடைய கடும் முயற்சியினுல் ரூ. 10,000. நிதி திரட்டிய அவர், சாஸ்திரியாரின் விட்டின் மீதான கடன்காரர்களை அழைத்துப்பேசி ரூ. 7500 கொடுத்துக் கடன் சுமையை நீக்கினுர்; இது நிகழ்ந்தது 1928ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில். இம்மகிழ்ச்சிக்குரிய செய்தியினைக் கேட்ட பின்பே என் பாட்டனுரின், 102 வயதான தாயார் காலமானுர். இவ்வாறு கடன்சுமையிலிருந்து சாஸ்திரியாரை விடுவித்ததோடு அமையாத திரு. யனுடி ரெட்டி அவர்கள் மேலும் பெருநிதி திரட்டி என் பாட்டனுருக்குக் 'கனகாபிஷேகம்' செய்து பாராட்டிடவும் பெருமுயற்சிகளை மேற்கொண்டார். இத்தகைய கனகாபிஷேகங்கள், விஜயநகர அரசர்களால் கி. பி. பதினைந்தாம் நூற்றுண்டில் பெரும்புகழ்பெற்ற புலவர் ஸ்ரீநாதருக்குச் செய்விக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. ஆயினும் விதி வேறு விதமாக இருந்தது. 1929ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் 18ஆம் நாள், மிகக் கடுமையான நோய்வாய்ப்பட்ட நிலையிலிருந்த என் பாட்டனுர், தம்முடைய 76ஆம் வயதில் சென்னையில் காலமானுர்; இதனுல் திரு. யனுடி ரெட்டியும் ஏனைய ரெட்டி சங்கத்தினரும் பெரிதும் துயருற்றனர். இச்செய்தி ஆந்திர மாநிலம் முழுவதையுமே அதிர்ச்சியடையச் செய்துவிட்டது; அதன் பின்னரும் பல திங்கள் தென்னிந்தியப் பத்திரிகைகள் இதனை முக்கியச் செய்தியாக வெளியிட்டு வந்தன. இவ்வகையில், என் பாட்டனுரின் கனகாபிஷேகம் நிகழ்ச்சி தடைப்பட்டது; இதற்காகத் திரட்டப் பெற்ற பெருந்தொகையினை, திரு. யனுடி ரெட்டி அவர்கள் எங்கள் குடும்பத்திற்காகவும் என் பாட்டனுரின் நூல்களை வெளிக்கொணரவும் பயன்படச் செய்தார்.

# முடிவுரை

தெலுங்கு இலக்கிய உலகில் வேங்கடராய சாஸ்திரிகள் ஒரு பெரும் சக்தியாக ஏறக்குறைய அரை நூற்றுண்டுக் காலம் விளங்கினுர்; 1880ல் தொடங்கிய அவரது இலக்கிய வாழ்வு அவருடைய மறைவு ஆண்டான 1929 வரையிலுமே எண்ணற்ற சாதனைகளையும் பெருமைகளையும் உருவாக்கியிருந் தது. சூழ்நிலையும் நல்வாய்ப்பும் அவருக்கு ஆதரவாக இருந் திருப்பின் இன்னும் அதிகமான சாதனைகளை அவர் புரிந்திருப் பார். பிறப்பாலும், வளர்ப்பாலும் அவர் பழைமை வாதியாக வளர்க்கப்பட்டாலும், மரபு வழிப் பண்டிதராகவே அவர் இருந்தபோதிலும், சிறப்பான கல்வியாலும் பலருடைய உற வாலும் அவர் மிகச் சிறந்த புதுமை வாதியாக விளங்கினுர். ஒரு பண்டிதரின் மகனுகப் பிறந்தமையால் மரபு வழிப்பண் பாக, பழைய இலக்கியங்களையும் அகராதிகளையும் மனப் பாடம் செய்யும் பண்பு அவரிடம் முழுமையாக அமைந் திருந்தது. தொடக்கத்தில் அசட்டையாயிருந்தபோதும் பின் னர் சமஸ்கிருதக் கல்வியின் இன்றியமையாமையினை நன் குணர்ந்தவுடன், அவர் அம்மொழியினைக் கற்றிடப் பேரார்வம் கொண்டார். அவருடைய தந்தையாரின் காலடியில் ஒரு மாணவனுக அமர்ந்து கல்வி கற்றிடும் பேறு அவருக்குக் கிடைக்கவில்லை யெனினும் அதைவிட அதிகமாகத் தமது உழைப்பாலும் திறமையாலும் அவர் சுயமாகக் கற்றுத் தெளிந் தார். பிறப்பால் ஏழையாகவே பிறந்தமையால் மிக இளம் வயதிலேயே பொருள் தேடவேண்டிய இன்றியமையாமை நேர்ந்திடவே, துன்பமும் துயரமும் அவருக்கு எண்ணிறந்த பட்டறிவுகளை நல்கின; மிகச் சிறந்த அறிவும் நினைவாற்றலும் பெற்றிருந்தமையால், அவரால் மனிதர்களையும் நிகழ்ச்சிகளை யும் அப்படியே மனத்தில் வைத்திருந்து தேவையானபோது பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. அவர் எந்தப் பணியினை மேற்கொண்டாலும் அதனை ஏற்புடைய வகையில் செய்து முடிப்பார். அரைகுறையாக எதனையும் அவர் விட்டு வைத்த தில்லை. பழைய முறையிலான சமஸ்கிருத மரபு அவருடைய அறிவினை ஆழமாக்கிய அதே வேளையில், ஆங்கிலக் கல்வி யும் கல்லூரிக் கல்விப் பயிற்சியும், பெருமக்கள் தொடர்பும் அவரை மேலை நாட்டு அறிஞர்களுக்கு நிகரான அறிவியல் நோக்குடையவராக விளங்கச் செய்தன. உள்ளத்தால் பழமை

வாதியாயிருந்த போதிலும், தீவிரவாதிகளை அவர் தாராளமாக அனுமதித்தார். நம்முடைய பழைய மரபுகளிலும் பண்பாடு களிலும் உள்ள சிறப்புக் கூறுகளையெல்லாம் பாதுகாத்து நிலைபெறச் செய்திட வேண்டும் என்னும் வகையில் அவர் பழமைவாதியாக விளங்கினர். இந்த அரிய குணங்கள் மிக இளமைப் பருவத்திலேயே அவரிடம் குடிகொண்டன; இவ ருடைய சமகால இலக்கிய அறிஞர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வோர் அரிய தன்மை இருந்தது. ஆனல் இவரோ அனை வருடைய அரிய பண்புகளும் ஒருங்கமைந்த பல்துறை மேதை யாக விளங்கினர்.

நல்ல இலக்கியத்தை, அது நாட்டுப்புற இயலிலிருந்தாலும் சரி, பல்கலைக்கழக மரபிலிருந்தாலும் சரி, அவர் போற்றிடத் தயங்குவதில்லை. தற்காலப் புதிய மரபுவாதிகளையும் மிஞ்சிடும் வகையில் அவர் இசைப்பாடல்களாலும் நாட்டுப்புறக் கலை களாலும் ஈர்க்கப்பட்டார்; அதனுலேயே, உயர்ந்த உண்மை யான கவிதையானது இலக்கணம், மொழித் தூய்மை ஆகியவை குறித்து அக்கறைப்படுவதில்லை என்று அவர் கருதினர். எது உள் ளத்தைத் தொடுகிறதோ அதுவே நிலையானது என்பதில் அவ ருக்கு அசைக்க முடியாத நம்பிக்கையிருந்தது. இக்கருத்தினை அவருடைய சமஸ்கிருத மரபும் ஒப்புக்கொண்டிருந்தது; இதனை அலங்காரம் மற்றும் அணியிலக்கணம் பற்றிய பண்டைய எழுத்தாளர்களும் ஒப்புக்கொண்டுள்ளதை ரஸமே காவியம் என்ற கூற்றினின்றும் தெளிவாக உணரலாம். இதே கருத் தையே நாடகங்களுக்கும் அவர் கொண்டிருந்தார். இவருடைய இலக்கிய நோக்குகள் பொதுவான அடிப்படையை உடையன; வாசகர்களின் மனத்தைப் பிணிக்கும் வகையில் யாரும் எதனை யும் எழுதலாம் என்பது அவருடைய எண்ணமாகும். தெலுங்கு இலக்கியம் மரபான புராணக் கதைகள் மிகுந்துள்ளதாகும்; அதுமட்டுமன்றி அதன் எண்ணிறந்த பாடல்கள் பேச்சு மொழி யிலேயே அமைந்திருக்கக் காணலாம். இம்மொழியின் பழைய இசைப்பாடல்கள் யாவும் இராஜஸ்தானி மற்றும் ஸ்காட்லாந்து பாணியிலேயே, அரசர்களது வீரதீரச் செயல்களைப் பற்றிப் பேசுவனவாகவே அமைந்திருக்கக் காண்கிரேம். இக்கதை களில் பலவற்றை தம்முடைய மிக இளம் வயதிலேயே மிக அக்கறையோடுகேட்டிருந்ததால்என் பாட்டனுருக்கு அவற்றில் பல மனப்பாடமாக இருந்தன. இதனை அவர் தமது நாடகங் களில் தகுந்த இடங்களில் பயன்படுத்தவும் செய்தார். ஒரு தோட்டக்காரனின் காதலைப் பேசிடும் 'யென்கி பாடலு' என்ற பேச்சுமொழிக் கவிதையினை அவர் பெரிதும் பாராட்டினர். அதுமட்டுமன்றி 'பாவ கவிதா' இயக்கத்தை (இசைப்பாடல்)

அவர் பிராகிருத 'காதை'களுடன் ஒப்பிட்டுப் பெரிதும் போற்றினர்.

சமஸ்கிருத நாடகங்களில் உள்ளவாறு நாடகங்களில் பேச்சுமொழியினைப் பயன்படுத்திடப் பெருமளவில் போராடி வந்த அதே வேளையில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உரை நடையில் உயர்ந்தோர் வழங்கிடும் (சிஸ்ட வியவகாரிகா) பேச்சுமொழியை நுழைக்கக்கூட பெரிதும் எதிர்ப்புக் காட்டினர் சாஸ்திரியார். நடைமுறைக் கண்ணோட்டத்தோடேயே எதனையும் நோக்கிடும் பண்பு மிக்க அவர், எந்த ஒரு மொழியும் தான் நினைத்ததை விளக்கிடும் ஆற்றல் மிக்கதாகும்; ஆனாலும் பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் தரமான மொழியே பயிற்றுவிக்கப்பட வேண்டும்; அவ்வாறன்றிக் கடைத்தெரு மொழியைப் பயிற்றுவிக்க வேண்டுமெனின் அதற்கு ஆசிரியர்களே தேவையில்லை என்று கருதினர். இவ்வாறு மொழிக் கண்ணோட்டத்தில் அவர் புதுமையாளராக இருந்தபோதும் தீவிரவாதியாக இல்லாமையினை உணரலாம். பழைய இலக்கியங்கள் பயிலப்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி வந்த அவர் அவற்றைப் புதுப்பிக்கவும் வெளியிடவும் பெருமளவில் பாடுபட்டார்.

அவருடைய பாணிகள் சட்டதிட்டங்களுக்குட்பட்ட புதுமையானவையேயன்றி புரட்சிகரமானவையோ, சட்டத்திற்கப்பாற்பட்டவையோ அன்று. ஆயினும், நாடகத்தில் பேச்சுமொழியைப் பயன்படுத்திய அவருடைய செயல் மிகப் புரட்சிகரமானதாகவே கருதப்பட்டது; திரு. ஜி. வி. அப்பாராவ் அவர்கள் தமது பேச்சுமொழி இயக்கத்தை 19ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கிய போதும் இவ்வகையில் அவரைவிடச் சாஸ்திரியாரே பெருவெற்றி பெற்றாரெனலாம். இவ்வகையில் பழைமை விரும்பிகளான மரபுவாதிகளைச் சாஸ்திர வழிகளிலேயே தோற்கடித்த சாஸ்திரியார் இல்லாதிருந்தால், அப்பாராவ் தமது இயக்கத்தில் மிகப்பெரிய சோதனைகளைக் கண்டிருப்பாரெனலாம். இவ்வாறு 1897 – 1911 வரையிலான, 14 ஆண்டுகள் உழைத்ததால் ஏற்புடைய சூழல் உருவாயிற்று. இவருடைய தத்துவார்த்தமான கருத்தினைப் புரிந்துகொள்ளாதவர்களே பள்ளிகளில் பேச்சுமொழியினை நுழைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த சாஸ்திரியாரைப் பெருமளவில் கண்டித்துக் குற்றஞ் சாட்டினர் எனலாம். ஆயினும் இவருடைய போக்கே சரியானது என்பதைக் காலம் நிரூபித்துவிட்டது; பொதுமக்கள் பேச்சுமொழியைப் பயன்படுத்திய போதிலும் 'கிரந்திகா' அல்லது தரமான மொழியும் இன்றளவும் பயன்படுத்தப்பட்டும் தரம்

மாருமலும் இருந்து வருதலே இதற்குச் சான்றெனலாம்; இவ்வகையில் வேதம் வேங்கடராய சாஸ்திரிகளின் தொலைநோக்கு இன்றளவும் பல அறிஞர் பெருமக்களாலும், கல்விக் கூடங்களாலும் பெரிதும் போற்றப்படுகின்றது.

அவருடைய உரைநடை மற்ற எழுத்தாளர்களுடைய உரைநடைகளில் காணப்படாத பல்திறத்தன்மையுடையதாகும். அவருடைய எழுத்துநடை கூறப்படும் பொருளுக்கும்படிப் போருக்கும் ஏற்ப மாறுபடும் தன்மைத்து. எழுத்தும் சொல்லும் கூட, புத்தகத்திற்குப் புத்தகம் கூறப்படும் பொருளுக்கேற்ப மாறுபடுவதுண்டு. இதனாலேயே அனைத்து வகையான எழுத்தாளர்களுக்கும் இவருடைய எழுத்துக்கள் முன்மாதிரியாய் அமைந்தனவெனலாம். அவருடைய நாடகங்கள் யாவும் பலதிறத்ததாக விரிந்தமைந்திருக்கும் அதே வேளையில், கதா சரித்சாகரம், தசகுமார சரிதம், விக்ரமார்க்கக் கதைகள் மற்றும் போஜ கதைகள், இதோபதேசம் ஆகிய இவருடைய பிற நூல்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மை பெற்றதாக நின்றிலங்கக் காணலாம். அவருடைய நாடகத்தின் ஒரு சில பகுதிகள் கேட்போர் மனத்தைப் பிணித்துத் தனது அவலச் சுவையால் அவர்களைக் கண்ணீர் சிந்தச் செய்யும் அதேவேளையில் அவருடைய நகைச்சுவை உரையாடல்கள் பெரும்பாலும் நகைப்பினை ஊட்டி நாடகம் காண்போரை வயிறுகுலுங்கச் சிரித்திடச் செய்வனவாக இருக்கக் காணலாம். இவ்வகையில் அவருடைய மூன்று நாடகங்கள் இருபது முப்பது ஆண்டுகளாகப் பெரும்புகழ் பெற்றிருந்தன.

இவருடைய உரைகள் பலதிறப்பட்ட பொருள்பற்றியனவாகவும், பாவணர்களுக்கும் பண்டிதர்களுக்கும் எண்ணிறந்த பல செய்திகளை வழங்கிடும் செய்திச் சுரங்கமாகவும் அமைந்திருந்தன. இவ்வுரைகளில், தமது புராண இதிகாச அறிவினையும் வடமொழி, தெலுங்குப் புலமையினையும் மட்டுமன்றி, தற்கால வரலாறு, புவியியல் மற்றும் கல்வெட்டு ஆராய்ச்சிகளும் புலப்படத்தக்க வகையில் விளக்கங்கள் அளித்திருக்கக் காணலாம். நூலின் மூலப்பாடங்களை முடிவு செய்வதில் உட்கருத்தை நுணுகி ஆராய்ந்து எடுத்துரைக்கும் பொருத்தமான திருத்தங்கள், பிற்காலத்தில் கையெழுத்துப்படி ஆய்வுத் துறையினரால் கண்டறியப்பட்ட பாடங்களோடு ஒத்திருக்கக் காணலாம். கவியின் இதயம் அல்லது கவிஞனின் எண்ணமே அவருடைய நோக்கமாயிருந்தது. ஆசிரியராயிருந்து பயிற்சி பெற்ற ஆற்றலே அவருடைய உயர்வுக்குக் காரணமெனலாம். இவ்வகையில் அவர் ஒரு பிறவி ஆசிரியர் என்றே கூற

வேண்டும். தம் மாணவர்களின் இயல்பான குறைபாடுகள் கற்கும் நூல்களின் கடின நிலை இவற்றை நன்குணர்ந்து அதற் கேற்றவாறு பாடம் போதித்தார். அவர் தம்முடைய மாணவர் களை அவரவர் தகுதிக்கேற்ப ஆழ்ந்த புலமை பெற வேண்டும் என்று பயிற்சியளிப்பதும் உண்டு; தேர்வில் வெற்றிபெறும் நோக்கத்திற்காக மட்டும் பயிற்சி தருவதும் உண்டு. அவர் முறைப்படியாகவும் தெளிவான புலமையுடனுமே தமது நூல் களை எழுதினர்; இது கண்டே திரு. ஜி. வி. இராமமூர்த்தி பந்துலு அவர்கள், 'சூரியராய அகராதி'யின் மதிப்புரையில் இந்த அகராதியின் பதிப்பாசிரியராக என் பாட்டனர் தொடர்ந்து இருந்து முடித்திருப்பாரெனில் மேலும் சிறப்பாக இருந்திருக்கும் என்று கருத்துரைக்கிறுர்.

அவர்தம் நேர்முக உரையாடல்களில் அறிவுத்திறன் மிகுந்து காணப்படும்; பேச்சுக்கிடையில் துணுக்குக் கதை களைக் கூறுவது அவருடைய பேச்சுக்குச் சுவையூட்டும் தன்மையில் அமைந்திருக்கும். அவரிடம் துணுக்குச் செய்திகள் எண்ணிறந்து காணப்பட்டன. அறிஞர் ஜான்சனுக்கு ஒரு பாஸ்வெல் இருந்ததுபோல வேங்கடராய சாஸ்திரிகளின் பேச்சுகளைக் குறித்து வைத்திட ஒருவர் இல்லாமல் போய் விட்டது குறித்துப் பேராசிரியர் திரு. ஜி. வி. சுப்பராமையா பெரிதும் வருந்தியிருப்பது இங்குக் கருதத்தக்கது. துணுக்குச் செய்திகள் கூறுவதுடன் நகைச்சுவை ததும்ப உரையாடலும் அவருடைய இயல்பாக இருந்தது. எந்தப் பொருளைப் பற்றிப் பேசினுலும் இலக்கணமாயிருந்தாலும்சரி அதிலும் கூட, நகைச் சுவை இழையோடப் பேசுவது அவரது இயல்பாகும். தமது நகைச்சுவைப் பேச்சினுல் பிறரை வெடிச் சிரிப்பில் ஆழ்த்தி விட்டு, தாம் மட்டும் கருத்தமைதியுடன் காணப்படுவார். மேலும் தம்முடைய சொற்பொழிவில் அவர் மற்ருெரு முறையினையும் கையாளுவது வழக்கம்; அதாவது அவையி லுள்ளோருக்கு, முதலில் தமது உரையின் முழுக்கருத்தையும் சுருங்கக் கூறிப் பின்னர் அதனை மிக விளக்கமாகக் கூறுவ தாகும். இதனுல் நேரமின்மை காரணமாக இடையிலே அவர் பேச்சினை நிறுத்திட வேண்டியதாயினும், கூற எண்ணிய அனைத்தையும் கூறிவிட்ட நிறைவினை அடைந்திட வாய்ப் பாகும். இவருடைய இந்த முறை சில வேளை எடுத்துக் காட்டுகள், விளக்கங்கள் இல்லாமல் போனுலுங்கூட, பேசக் கிடைக்கும் நேரம் எத்துணையதாயினும் கேட்போர் மனத்தில் அவர் கூறும் பொருள் முழுமையாக இடம் பெறச் செய்திடும் தன்மையதாகும்.

ஒரு மனிதர் என்ற முறையில் அவரிடம் தொடர்பு கொண்ட பலருக்கு அவர் சிறந்த நண்பராகத் திகழ்ந்தார்; கனிவான இதயம் உடையவராக விளங்கினர். அவருடைய கருத்துகள் மிகக் கடுமையானவையாயிருந்தபோதும், அதற்கு இலக்கானவர்கள், அதனைப் பெரிதாக எடுத்துக் கொண்டதில்லை; அன்பால் விளைந்த குற்றச்சாட்டுகளாகவே கருதினர். பணத்தை அவர் எப்போதுமே ஒரு பொருட்டாக மதித்ததில்லை; அதனாலேயே அவரிடம் கடன் பெற்ற நண்பர்களை, அவர்களால் இயன்றபொழுது திருப்பித் தருமாறு அவர் அனுமதித்திருந்தார். இத்தன்மையாலேயே அவரிடமிருந்து பணம் பெற்றிருந்த சில நண்பர்கள் அவருடைய மறைவுக்கு வெகுகாலம் பின்பு அப்பணத்தை என்னிடம் திருப்பித் தந்திருக்கிறார்கள். அவருடைய தினசரி வாழ்க்கைமுறை, இலக்கியக் கல்விக்கும் இலக்கியப் படைப்பிற்கும் போதிய நேரம் அளிக்கத்தக்க விதத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. ஒவ்வொரு மணித்துளியும் அவரைப் பொறுத்தவரை மிக விலைமதிப்பற்றதாக இருந்தது. தேவையற்ற எந்தக் காரியத்திலும் அவர் தமது காலத்தைச் செலவிட்டு எவரும் கண்டிலர். இடது கையில் புத்தகமும் வலது கையில் பேனாவுமாகவே அவரை எப்பொழுதும் காண முடியும். பகல் நேரத்தைப் போலவே இரவு நேரத்தையும் அவர் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வார். மெழுகுவர்த்தி ஒளியில் இரவு வெகுநேரம் வரை அவர் அமர்ந்திருக்கக் காணலாம். காலைச் சூரியன் எழுவதற்கு முன்பே எழுந்து விடும் வழக்கமுள்ள அவரை, காப்பியை விரும்பி அருந்தும் பழக்கம் ஆட்கொண்டிருந்தது; காலையில் காப்பியைத் தரமான தூளில் தகுந்த மணத்துடன் தாமே தயாரித்து அருந்துவது அவர் வழக்கம். அவருடைய படிப்பறையின் ஒரு மூலையில் காப்பி தயாரிப்பதற்கான சாதனங்களும் வைக்கப்பட்டிருக்கும். தரமான காப்பி அருந்த வேண்டும் என்ற ஒரே எண்ணத்தாலேயே அவருடைய நண்பர் பலர் அவருடைய காப்பி நேரம் அறிந்து அந்நேரத்தில் அவரைச் சந்திக்கச் செல்வதுண்டு. அவருடைய அபினிப் பழக்கம் வெளியில் தெரியாவிட்டாலும், காப்பிப் பழக்கம் ஆந்திரா முழுமைக்கும் மிகப் பிரபலமாயிருந்தது. இரவு பகல் பாராத கடும் உழைப்பால் அவருக்கு மேலும் பல ஊட்டச்சத்துக்களும் தேவையாயிருந்தன. இதனால், அவர் காட்லிவர் ஆயில் முதலிய சத்துணவுகளையும் ஆயுர்வேத மருந்துகளையும் உட்கொள்வது வழக்கம். மின்சார விளக்குகள் உபயோகத்திற்கு வந்த பின்பும்கூட அவர் மெழுகுவர்த்தி விளக்கினைக் கைவிடவில்லை; காரணம் மின்சாரம் திடீரெனத் தடைபடக் கூடுமாதலால் அதனை அவர்

நம்புவதில்லை. இவ்வாறு மின்தொடர்பு துண்டிக்கப்பட்ட போதிலும் கூட அவருடைய எழுத்துப்பணி தடைப்பட்டதில்லை. மேலும் அவர் பல பெரிய பெரிய பேனுக்களை வைத்திருந்தார். இவற்றில் ஒரே நேரத்திலேயே ஒரு புட்டி மையை நிரப்பிக் கொள்ள முடியும். இதனுல் அவருடைய நேரம் மிகுதியும் மிச்சப்படுத்தப்பட்டு, எழுத்துப்பணி மேலும் விரைவாக்கப் பெற்றது. அவர் பிறப்பால் பிராமணராக இருந்த வகையில் மதச்சடங்குகளைப் பின்பற்றிய போதிலும் அம்மதச் சடங்குகளைப் பகட்டாகக் காட்டிக் கொண்டதில்லை; மேலும் அவருடைய வாழ்நாளில் அவர் கோயில்களுக்குச் சென்ற நிகழ்ச்சிகள் மிகக் குறைவே; அவற்றையும் விரல்விட்டு எண்ணிவிடலாம்.

அழகிய சிவந்த நிறமும், உயரமும், நல்ல உடலமைப்பும், நீண்ட கூரிய நாசியும், கருணை நிறைந்த கண்களும் கொண்ட அவர் தம்முடைய இறுதி நாட்களில் ஒரு இராஜபுத்திரனைப் போன்றே தோற்றமளித்தார். அவரது மேனி பருத்த அமைப்புடன் ஜான்சனின் கம்பீரமான தோற்றத்தைப் போன்று பெருமித இயல்புடன் காணப்பட்டது. அவர் தம்முடைய மறைவுக்குப் பின்னும், தெலுங்கு இலக்கிய உலகில் தமது அடிச்சுவடுகளைத் தெளிவாக விட்டுச் சென்றிருக்கக் காணலாம். வாழ்வு முழுவதும் பல பெரிய மனிதர்களுடன் கருத்து வேறுபாடு கொண்டு போராடி வந்ததினுலேயே, அவருடைய வாழ்வு புடம் போடப்பட்ட தங்கமாக ஒளிபெற்றது எனலாம்.

## நிகழ்ச்சிகள், படைப்புகளின் முக்கிய தேதிகள்

ஆண்டு — செய்தி

1853 : டிசம்பர் 21, வேதம் வேங்கடராய சாஸ்திரியின் பிறப்பு.

1875 : வேங்கடராய சாஸ்திரி எப். ஏ. தேர்ச்சி பெற்றார்.

1878 : வீரேசலிங்கம் பந்துலு 'விதவைத் திருமணம்' பற்றிய தம் முதற் சொற்பொழிவை நிகழ்த்தினர்; வேங்கடராய சாஸ்திரி அவரை எதிர்த்தார்.

1883 : விதவைத் திருமணத்தைக் கண்டித்து வேங்கடராய சாஸ்திரி தம் நூலை வெளியிட்டார்.

1886 : வேதம் வேங்கடராய சாஸ்திரி சென்னைக் கிறித்துவக் கல்லூரி, சமஸ்கிருத ஆசிரியராக நியமிக்கப் பெற்றார்.

வெளியீடுகள் : தெலுங்கு 1. பிரக்கிரியா சந்தசு, 2. அலங்கார சார சங்கிரகம், 3. போஜ சரித்திரம், 4. விக்ரமார்க்க சரித்திரம், 5. பில்கணீயம், (அல்லது சௌரபஞ்ச சிகா) தெலுங்குக் குறிப்புகளுடன்.

1886 : பிரதாபருத்ரீய கதை - ஜனவினோதியில் முதலில் வெளியிடப்பட்டது.

1890 : வேங்கடராய சாஸ்திரியார் 'ஜோதிஷ்மதி' என்ற சொந்த அச்சகம் தொடங்கினர்.

1891 : கதாசரித் - சாகரம்: தெலுங்கு மொழி பெயர்ப்பின் முதற்பதிப்பு வெளியிடப்பட்டது.

1891 : நாகாநந்தம் – தெலுங்கு மொழிபெயர்ப்பு முதலில் வெளியாயிற்று.

1896 : அபிக்ஞான சாகுந்தலம் - தெலுங்கு மொழிபெயர்ப்பு முதலில் வெளியிடப்பட்டது.

1897 : ஏப்ரலில் பிரதாபருத்ரீய நாடகம் - முதலில் வெளியிடப் பட்டது.
(ஜி. வி. அப்பாராவின் கன்யா சுல்கம் முதலில் வெளி வந்தது.)

1898 : ஜக்கண்ணுவின் விக்ரமார்க்க சரித்திர — முத்ரண விமரிசனம் – பதிப்பாசிரியரைக் குறைகூறி வெளியிடப் பட்டது.

ஆந்திரப் பிரசன்ன ராகவ நாடக விமரிசனம் - திரு. கோக்கொண்ட வேங்கடரத்னம் பந்துலுவின் மொழி பெயர்ப்பைக் குறைகூறி வெளியிடப்பட்டது.

1899 : ஏப்ரல் 31 – வேங்கடராய சாஸ்திரியினுடைய நாடகங்களை நடிப்பதற்காக ஆந்திர பாஷாபிமானி சமாஜம் என்ற நாடகக் குழு உருவாக்கப்பட்டது.

1900 : காளஹஸ்தி - மகாத்மிய முத்ரண விமரிசனம் – பதிப்பாசிரியரைக் குறைகூறி வெளியிடப்பட்டது.

1901 : கிராமபாஷா பிரயோக நிபந்தனம் - தெலுங்கு நாடகங்களில் பேச்சு வழக்கு மொழியினைப் பயன்படுத்தும் கருத்தினைக் குறைகூறி வெளியிடப்பட்டது.

1901 : மோக்ஷகுசுமாமோத விசாரம் - வெளியாயிற்று.

1901 : பேராசிரியர் டி. எம். சேஷகிரி சாஸ்திரியின் இறப்பு.

1901 : உஷா நாடகம் - தெலுங்கு நாடக நூல் வெளியிடப்பட்டது

1902 : மேகசந்தேசம் - தெலுங்குக் குறிப்புகளுடன் வெளியிடப்பட்டது.

1908 : ஜோதிஷ்மதி அச்சகம் - மீண்டும் தொடங்கப்பட்டது.

## சமஸ்கிருத வெளியீடுகள்

1909 : புஷ்ப பாண விலாசம், அமரகோசம், சப்தமஞ்சரி, பில்ஹணீயம் - தெலுங்குக் குறிப்புகளுடன் வெளியிடப்பட்டன.

1910 : சென்னை கிறித்துவக் கல்லூரிப் பணியிலிருந்து ஓய்வு.
இரகுவம்சம் - முதல் ஆறு காண்டங்கள் தெலுங்கு உரை வெளியிடப்பட்டது.
அமரு காவிய சதகம் - தெலுங்கு உரையுடன் வெளியிடப்பட்டது.
இரசமஞ்சரி - தெலுங்கு உரையுடன் வெளியிடப்பட்டது.
பர்த்ருஹரியின் மூன்று சதகங்கள் - தெலுங்கு உரையுடன் வெளியிடப்பட்டது.
பிரியதர்சிகா - தெலுங்கு மொழிபெயர்ப்புடனும் தெலுங்கு உரையுடனும் நாடக வடிவில் வெளியிடப்பட்டது.

இதோபதேசம் - தெலுங்கு மொழிபெயர்ப்புடன் வெளியிடப்பட்டது.
தசகுமார சரித்திரம் - தெலுங்கு மொழிபெயர்ப்புடன் வெளியிடப்பட்டது.
விக்ரம சரித்திரம் - தெலுங்கு மொழிபெயர்ப்புடன் மறுமதிப்பு வெளியிடப்பட்டது (மொழிபெயர்ப்பு தனி நூலாகவும் வெளியிடப்பட்டது.)
போஜ சரித்திரம் - தெலுங்கு உரையுடன் மறுபதிப்பு வெளியிடப்பட்டது. (மொழிபெயர்ப்பு தனி நூலாகவும் வெளியிடப்பட்டது.)
பஞ்சதந்திரம் - மூலம் மட்டும்.

## தெலுங்கு வெளியீடுகள்

பாரிஜாதாபகரணம் - மூலம் மட்டும், சரியான பாடத்துடன் கூடிய திறனாய்வுப் பதிப்பு.
ஆந்திரப் பில்ஹணீயம் - மூலம் மட்டும்.
ஞான வாசிஷ்ட இராமாயணம் - சரியான பாடத்துடன் கூடிய திறனாய்வுப் பதிப்பு
சாரங்கதாரா சரிதம் - சரியான பாடத்துடன் கூடிய திறனாய்வுப் பதிப்பு (உரையுடன்).
விஜய விலாசம் - சரியான பாடத்துடன் கூடிய திறனாய்வுப் பதிப்பு (உரையுடன்).
சாரங்கதாரா (துவிபாத யாப்புமுறை) - சரியான பாடத்துடன் கூடிய திறனாய்வுப் பதிப்பு.
ஹரிச்சந்திரா (துவிபாத யாப்புமுறை) - சரியான பாடத்துடன் கூடிய திறனாய்வுப் பதிப்பு.
காவியலங்கார சூடாமணி - மூலம் மட்டும் - மறுபதிப்பு.

1912 : ஜி. வி. அப்பாராவின் வியவகாரிகா எதிர்ப்பு; நிடதவோலுவில் கிராம்யதேச நிரசனமு என்ற தலைப்பில் பேசிய பேச்சு வெளியீடு.

1913 : சிருங்கார நைஷதம் - விளக்கவுரை வெளியிடப்பட்டது.

1914 : நவம்பர் 18 ஜோதிஷ்மதி என்ற தம் அச்சகத்துடன் நெல்லூருக்குப் பெயர்ந்தார்.

1915 : டிசம்பர் : அச்சகத்துடன் சென்னை திரும்பி, சூரியராவ்
: தெலுங்கு அகராதியின் தலைமைப் பதிப்பாசிரியர் பதவியை ஏற்றார்.

1916 : அவருடைய புரவலர் வேங்கடகிரி மகாராஜா திரு. கோபாலகிருஷ்ண யச்சேந்திரா இறந்தார்.

1918 : சூரிய ராய தெலுங்கு அகராதியின் பதிப்பாசிரியர் பொறுப்பைத் துறந்தார்.

1919 : தம் அச்சகத்தை விற்ருர்.
காளிதாசரின் மாளவிகாக்னிமித்திரத்தைத் தெலுங்கில் நாடக வடிவில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.
ஆந்திர சாரஸ்வத பரிஷத் ரூ. 1116 பொற்கிழியுடன் மகாபோத்யாய பட்டத்தை வழங்கியது.
ஆந்திர சாகித்ய பரிஷத் – தலைவர்.

1920 : விமர்ச விநோதம் – சில சமஸ்கிருத, தெலுங்கு இலக்கியங்களில் பாடங்கள் பற்றியது. திக்கண்ண சோமயாஜி விஜயம் - திக்கண்ணுவைப் பற்றிய சொற்பொழிவு, பவபூதியின் உத்தரராம சரிதம் – (தெலுங்கில் மொழி பெயர்க்கப்பட்டு) பவபூதியின் எல்லாப் படைப்புகளைப் பற்றிய விரிவான முன்னுரையுடன் வெளியிடப்பட்டது.
ஆமுக்தமால்யதா – விளக்கவுரை எழுதப்பட்டது.

1921 : விக்ரமோர்வசியம் – மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது.
இரத்னுவளி – மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது
சாகித்யதர்ப்பணம் – மொழிபெயர்க்கப்பட்டது. ஆனுல் வெளியிடப்படவில்லை.
இதோபதேசம் – 'சம்பூ' வாக மொழி பெயர்க்கப்பட்டது.

1922 : மறைந்த பிரபு விண்ட்சர், வேல்ஸ் இளவரசராக இந்தியாவுக்கு வருகை தந்தபோது சென்னைப் பல்கலைக் கழகத்தால் பாராட்டப்பட்டார்.
நெல்லூருக்கு மீண்டும் குடிபெயர்ந்தார் - வீட்டின்மீது கடன்.
துவாரகா சங்கராச்சாரியரால் சர்வதந்த்ர சுவதந்த்ர, மகாமகோபாத்யாயா போன்ற ஆறு பட்டங்கள் வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டார்.
தன் ஒரே மகனை வேங்கடரமண (சாஸ்திரியை) இழந்தார்.

1923 : சித்தூரிலிருந்த ஆந்திரமகா சபை (அரசியல் சார்ந்தது)- தலைவர்.

**1924** : கத்வால் இராஜாவினுல் கத்வாலில் சிறப்பிக்கப்பட்டார்.

**1925** : ஆமுக்தமால்யதாவை அச்சிடுவதற்காக மறுபடியும் சென்னையில் குடியேறல்.

*1927* : ஆமுக்தமால்யதா உரையுடன் வெளியிடப்பட்டது. (கூட்டத்திற்கு டாக்டர் சி. ஆர். ரெட்டி தலைமை தாங்கினுர்.)
ஆந்திரப் பல்கலைக் கழகத்தால் 'கலாபிரபூர்ண' பட்டம் வழங்கப்பட்டது.

*1928* : திரு. குணபதி யனுடி ரெட்டி, திரு. சாஸ்திரியாரின் எல்லாக் கடன்களையும் அடைத்தார்; கனகாபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்தார்.

*1929* : ஜூன் 18 - காலை 5–45; வேங்கடராய சாஸ்திரி சென்னையில் மறைந்தார்.

## நேர்ந்தெடுக்கப்பட்ட நூற்பட்டியல்


| ஆசிரியர் | நூல் (தெலுங்கு) |
|---|---|
| 1. வேதம் வேங்கடராய சாஸ்திரி | வேதம் வேங்கடராய சாஸ்திரி ஜீவிதசரித்திர சங்கிரகம் |
| 2. தரணிகோட வேங்கட சுப்பையா | வே. வே. சாஸ்திரி ஜீவ சரித்திரம் – ஆந்திர சாகித்ய தர்ப்பணத்திற்கு ஒரு முன்னுரையாக. |
| 3. குர்ரம் வேங்கட சுப்ப ராமையா | வேங்கட சாஸ்திரி சன்ஸ்கிரிதி (நூலாசிரியரால் வெளியிடப்பட்டது). |
| 4. வேங்கடராய சாஸ்திரி சதவர்ஷிகோத்சவ சஞ்சிகா (நூற்றுண்டு விழாத் தொகுப்பு) | பலர் எழுதியவற்றை நெல்லூர் முன்னேற்ற சங்கம் வெளியிட்டது. |
| 5. ஆந்திர பிரதேச சாகித்ய அகடமி. | நால்வர் சொற்பொழிவு: 1. என். இராமதாஸ் ஐயங்கார் 2. எம். கோதண்டராம ரெட்டி 3. (இளைய) வேதம் வேங்கடராய சாஸ்திரி 4. டி. வேங்கடாவதானி. |

# இந்திய இலக்கியச் சிற்பிகள்

இந்த வரிசையில் இதுவரை தமிழில் வெளிவந்துள்ள நூல்கள்

1. லட்சுமிநாத பெஸ்பருவா—ஹேம்பருவா
   தமிழ்: க. த. திருநாவுக்கரசு
2. கபீர்—பிரபாகர் மாச்வே
   தமிழ்: தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்
3. கேசவஸுதர்—பிரபாகர் மாச்வே
   தமிழ்: ராம கோபிநாதன்
4. ஈசுவர் சந்திர வித்யாசாகர்—ஹிரண்மய் பானர்ஜி
   தமிழ்: ராம கோபிநாதன்
5. ராஜாராம்மோகன் ராய்—சௌமியேந்திரநாத தாகூர்
   தமிழ்: க. த. திருநாவுக்கரசு
6. பிரேம்சந்த்—பிரகாஷ் சந்திர குப்தா
   தமிழ்: சரஸ்வதி ராமநாத்
7. குமாரன் ஆசான்—கே. எம். ஜார்ஜ்
   தமிழ்: கே. சி. சங்கரநாராயணன்
8. நாருதத்—பத்மினி ஸென்குப்தா
   தமிழ்: அ. சீனிவாசராகவன்
9. வீரேசலிங்கம்—வி. ஆர். நார்லா
   தமிழ்: நா. பார்த்தசாரதி
10. ஸ்ரீ அரவிந்தர்—மனோஜ் தாஸ்
    தமிழ்: பி. கோதண்டராமன்
11. மீராபாய்—உஷா நில்சன்
    தமிழ்: எஸ். கந்தசாமி 'துறைவன்'
12. B. M. ஸ்ரீகண்டய்யா—A. N. மூர்த்திராவ்
    தமிழ்: இரா. மதிவாணன்
13. சந்துமேனன்—டி. சி. சங்கரமேனன்
    தமிழ்: கு. இராஜவேலு
14. காஸி நஸ்ருல் இஸ்லாம்—கோபால் ஹால்டார்
    தமிழ்: கே. பி. எஸ். ஹமீத்
15. வள்ளத்தோள்—ஹிருதயகுமாரி
    தமிழ்: மா. இளையபெருமாள்
16. பசவேஸ்வரர்—H. திப்பேருத்ர சுவாமி
    தமிழ்: T. K. நாகாம்பாள்
17. பாணபட்டர்—கே. கிருஷ்ணமூர்த்தி
    தமிழ்: பெ. திருஞான சம்பந்தன்
18. பக்கிம் சந்திர சாட்டர்ஜி—சு. ச. ஸென்குப்தா
    தமிழ்: அசோகமித்திரன்
19. மகரிஷி தேவேந்திரநாத தாகூர்—நா. சௌதுரி
    தமிழ்: கா. மீனாட்சிசுந்தரம்
20. தாராசங்கர் பந்தோபாத்யாயர்—மஹாஸ்வேதாதேவி
    தமிழ்: கு. இராஜவேலு
21. நானாலால்—U. M. மணியார்
    தமிழ்: நா. பார்த்தசாரதி
22. ஜீவனானந்ததாஸ்—சி. தாஸ் குப்தா
    தமிழ்: க. த. திருநாவுக்கரசு
23. பாரதியார்—பிரேமா நந்தகுமார்